LB
N06
117186

உ

சுந்தரகணேசர் துணை.

ஸ்ரீ புலிப்பாணி முனிவர் அருளிச்செய்த

பலதிரட்டு ஜாலம்.

மூலமும்—உரையும்.

இஃது,

ம-ா-ா-ஸ்ரீ. மா. வடிவேலு முதலியாரால்

எழுதப்பட்டு,

முதல் பதிப்பு.

எம். நரசிம்மலுசெட்டி அண்டு கம்பெனியாரால்

சென்னை—சூளை,

பாலவிர்த்தி போதினி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

Registered Copy Right.

இதன் விலை ரூபா. 1.

1906.

LB
N05
1392.AB
117186

FIRST EDITION 1000 COPIES
Printed at The B. V. B. Press, Choola', Madras.

உ

சிவமயம்.

முத்துவீர ராமமுனிவர்
திருவாய் மலர்ந்தருளிய

ஜாலத்திரட்டு.

கல்லை வெய்தெழிற் கயிலையமால்வரைச்
சிங்க வாகனத் தெழுந் தருளுந் தேவர்
பங்கய மலரடி பணிந்து ஜாலமொன்
றங்கண்மா நிலமிசை யறைகுது வாமரோ.

(பொ-ரை) கங்காதேவியை சடாபாரத்திலணிந்து அழகிய கயிலாச மலையின்கண் சிங்காசனத்தில் எழுந்தருளுகின்ற தேவர்களாகிய பரமேஸ்வரனுடைய தாமரை மலர்போலுந் திருவடிகளைப் பணிந்து அழகிய இந்த உலகத்தில் ஜாலமென்னும் ஒரு நூலைச் சொல்லுவோம். (எ-று) (1)

வரலாறு.

யாவருந் தெகாமய மாலிலை பெற்று
தாவரு மந்திரந் தையல் பாகனோர்
காவலன் றிருமுனங் கரித்தாள் சொன்னது
நீவிரும் பியது நிகழ்த்த கேட்டியால்.

(பொ-ரை) உமாதேவியை இடது பாகத்தில் வைத்திருக்கின்ற பரமேஸ்வரனானவன் (பூர்வத்தில் கயிலாய மலையைக் காவல் செய்யும் நந்திகேஸ்வரருக்குச் [illegible] சொன்னதும், உன்னைக் கேட்க விரும்பியவர்களாகிய [illegible] இன்ப எல்லா ஜனங்களுக்கும் வசியமாகும் பொருட்டு ஒரு அழிவில்லாத மந்திரத்தைச் சொல்லக் கேட்பாயாக. (எ-று) (2)

சர்வஜன வசியம்.

அனலொடு மாதுளோர் [illegible] லதியமாய்
வெளியினி லாகுமோ [illegible]

குளகம சிவயவென் றுரைக்கு மக்காத்
தெளிவுற மற்றதிற் றீட்டி யம்மவோ. ௩

(பொ-ரை) ஒரே அளவாக நேராக ஆறு கோடு கிழித்து அந்த ஆறு கோடுகளுக்கும் குறுக்கே ஆறு கோடு கிழித்து அதனால் ஏற்படுகின்ற இருபத்தைந்து வீடுகளிலும் ந, ம, சி, வ, ய, என்கிற ஐந்தட்சரங்களையும் நடுவினை பிடித்து மாறிப்போட்டு (எ-று) (3)

ஐம்புலச் சேட்டையை யகற்றி வானவு
மிம்பரும் பரவிய வெம்பி ரானடி
யம்புயங் கடைப்பிடித் தத்தி யாதனத்
தும்பரி னிருத்துவோ நமசி வாயவே. ௪

(பொ-ரை) சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் என்னும் பஞ்ச புலன்கள் செய்யும் தீங்குகளையெல்லாம் நீக்கி தேவர்களாலும் இவ்வுலகத்தார்களாலும் துதி செய்யப்பட்ட எம்முடைய பரமேஸ்வரனுடைய திருவடித் தாமரைகளை உறுதியாக நம்பி உயர்ந்த ஆசனத்தின்மேல் எழுந்தருளி யிருந்ததும் நமசிவய (எ-று) (4)

என்னு மவன் மலரினா லேதையி னெக்குற
வொன் றுநூ றாயிர முருவெ ணிக்கினே
கன் றயின் றொடர்பசு வடிப்ப யாவரும்
பின்றொட ருவரிது பேசவேண் டுமோ. ௫

(பொ-ரை) என்கிற மந்திரத்தினால் நல்ல புஷ்பங்களைக் கொண்டு மனங் கனிந்து ஒருநூறாயிர உரு செபித்தால் கன்றானது பின்னே தொடர்ந்தோடி செல்லும் பசுவைப்போல உலக ஜனங்கள் எல்லாரும் பின்னே தொடர்ந்து வருவார்கள் ஆகையால் இதனுடைய பெருமையைப் பேசவேண்டுமோ (எ-று) (5)

பேயோட்டல்.

புத்தியை விலக்கியிப் புவியின் மேலுமுன்
மத்தனைப் புரிதரும் வலிய பேயெலாஞ்
சித்தனைத் தோடிடச் செய்யு மந்திர
மித்தல வரப்பிலோன் றியம்பக் கேட்டியால்.

(பொ-ரை) இயற்கையான அறிவைக் கெடுத்து இந்த உலகத்தின்கண் பைத்திய நோயை உண்டாக்குகின்ற வலிமையுள்ள பேய்களெல்லாம் மனவருத்தப்பட்டு ஓடிவிடும்படி செய்கின்ற மந்திரமொன்றை இவ்வுலகத்தில் நாம் சொல்லுகின்றோம், நீ கேட்பாயாக. (எ-று) (6)

உருவய நமசியென் றுரைக்கு மந்திரங்
குருமுக முணர்ந்தெழிற் குமர வேடனைத்
தருமுதல் வனடித் தானத் தாமரை
யிருதய மலரினி லிருத்தி யாங்கரோ. எ

(பொ-ரை) வயநமசி என்று சொல்லுகின்ற மந்திரத்தைக் குருமுகமாகத் தெரிந்துகொண்டு அழகிய முருகக் கடவுளைப் பெற்றெடுத்த பரமேஸ்வரனுடைய திருவடித் தாமரையை இருதயமென்னும் இடத்தினில் வைத்து (எ-று) (7)

பழுதில்வெட் பாலையம் பலகை மீமிசை
யெழுதசித் திரமென விருந்து சக்கரம்
வழுவறப் பொறித்து முன் வைத்து நூறுபத்
தெழுபதி னாயிர மியம்பி னம்மரோ. அ

(பொ-ரை) குற்றமற்ற வெட்பாலைப் பலகையின்மேல் சித்திரத்தைப்போல் சக்கரமெழுதி முன்னே வைத்து எழுபதினாயிரம் உரு செபித்தால் (எ-று) (8)

அலகைவெம் பூதங்க ளாதி யாம்பல
பலபில்லி சூனியம் பறக்கு மன்றியும்
நிலமிசை வருத்திய நெடிய நோயெலாம்
உலவியு வளிச்சரு கொக்கு மென்பவே. கூ

(பொ-ரை) பசாசுகள், கொடிய பூதங்கள் ஆகியவைகளும் பலவகைப்பட்ட பில்லி, சூனியம் இவைகளும் பறக்கும் அல்லாமலும் உலகத்தில் வருத்தப்படுத்துகின்ற பலவகைப்பட்ட நோய்களும் வீசுகின்ற காற்றினிடத்து அகப்பட்டுக்கொள்ளுகின்ற உலர்ந்த இலையைப்போலாகும். (எ-று) (9)

கைகால்கள் முடக்கல்.

பாவை யொன்று பருமுருக் கத்தினால்
ஆவ லோடுசெய் தப்பது மைமயிற்

ளுவவின் மாப்பது மையொன்றி யற்றிவைத்
தேவின் முள்ளுட னெச்சலு ரோமமும்.

(பொ-ரை) மாவினால் ஒரு பதுமை செய்து ஆசையோடு அந்தப் பதுமையின் வயிற்றில் முள்ளும், எச்சலும், ரோமமும் (எ-று) (10)

பேரும் வைத்துப் பிரபல மாகவே
பாரு ளோருண ராது பயிரவ
ளுர ருந்திரு மந்திர மாயிரம்
ஈரி ரண்டங் கிருந்து செபித்தரோ. கக

(பொ-ரை) எதிராளியின் பேரும் பிரபலமாகச் சொல்லி வைத்து உலகத்தார்களெல்லாம் தெரிந்துகொள்ளாதபடி பயிரவ மந்திரத்தை நாலாயிரம் உரு வரைக்கும் சரியாகச் செபித்து (எ-று) (11)

ஆணி யொன்றெடுத் தங்கையி லாவது
காணருங் கழற் காலினி லாவது
பூணின் வாத பிடிப்பது போலவே
காணு மற்றிது கண்டுகொள் வாயரோ. கஉ

(பொ-ரை) அவ்விடத்தில் பதுமையுடன் வைத்திருக்கின்ற முட்களில் ஒன்றையெடுத்து காணுதற் கருமையாக எதிராளியாக வைத்திருக்கின்ற பதுமையின் காலிலாவது கையினிலாவது அடித்தால் வாயு வந்தவர்களுக்கு பிடிப்பு வருவதுபோல எதிராளிக்கு உண்டாகும். இதை நீ தெரிந்துகொள்வாய் (எ-று) (12)

அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வேடிக்கை வித்தை.

வேடிக்கை விளையாட் டொன்று விளம்புவேன் கேணீ யவ்வித்
மூடிக்கை யிருந்தால் யாரு மோசிப்பர் விரிப்பின் வாளாக்
கோடிக்கை விடுவா ரும்மை குலவிய தேங்கா யொன்று
நாடிக்கை யாலே வாங்கி நானில மறிய மாதோ. கங

(பொ-ரை) வேடிக்கையாக ஒரு விளையாட்டைச் சொல்லுகின்றேன் நீ கேட்பாயாக, இந்த வித்தை யுடையவர்கள் கை மூடிக்கொண்டி யாருக்குங் காட்டாமலிருந்தால் யாவரும் பிர

மிப்பார்கள். அப்படிக்கில்லாமல் கையை விரித்துவிட்டால் யாவரும் மதியார்கள். ஆகையால் நீ உலகத்தில் ஜனங்களறியும்படி ஒரு தேங்காயை வாங்கி (எ-று) (13)

மற்றதைத் தொளைத்துப் பூர்சை வாளர வென்று போட்டுக்
குற்றமில் லாமல் வாயைக் கோதற மூடி தூபம்
முற்றவே கொடுத்துச் செவ்வாய் முதற்குழி கல்லில் வைத்துச்
செற்றமி லன்றி யேழுடு தினமதே யூரான பின்னே. கச

(பொ-ரை) அதை நன்றாய் தொளைத்து அதில் பச்சைப் பாம்பு ஒன்றைப்போட்டு வாயை மூடி தூபதீபங் கொடுத்து முதலில் செவ்வாய்க் கிழமையில் கல்வைத்தில் போட்டு நல்ல அன்பினால் ஏழு நாள் வரைக்கும் அரைத்து (எ-று) (14)

எடுத்தொரு கலசத் திட்டே யெரித்துநீ தைலம் வாங்கிக்
கடுத்துமக் கியமெனும் மாவைக் கருத்தினி லிருத்திப் போற்றி
விடுத்தொரு விளக்கி தீபம் விளக்கவே யேற்றி நோக்கின்
அடுத்தவப் பசிய பாம்பே யகமெலாந் தெரியு மன்றே. கரு

(பொ-ரை) அப்படி அரைக்கப்பட்ட சாமானை ஒரு கலசத்தில் போட்டு எரித்து அப்போது வரும் தைலத்தை இறக்கி வைத்துக்கொண்டு விஷத்தங்கிய கண்டத்தையுடைய இறைவனை மனத்தில் வைத்துத் துதித்து அந்தத்தைலத்தை. ஒரு விளக்கிலிட்டு தீபமேத்திப் பார்த்தால் பச்சைப் பாம்பே அவ்விடெல்லாந் தெரியும் (எ-று) (15)

முற்றிற்று.

உ

சிவமயம்.

பலதிரட்டு சூஸ்திரம்.

காப்பு.

வேதாந்த நாயகி விமல வேணி
வீரமா காளியம் பாள் ருத்திர ரூபி
நாதாந்தப் பொருளே யகோர வீரி
நாரணி காரணி தேவி சத்தி
மூதாந்த மூர்த்தி பராபரையே துர்க்கை
மூவருக் கேமுதற் பொருளே யாநந்தாயி
மாதாந்தச் சபையின்ற ஏக வல்லி
மாமுகத்தான் பலதிரட்டு காப்புத் தானே.

(பொ-ளா) வேதங்களின் அந்தத்தில் விளங்கும் தலைவி பரிசுத்தமான வேணி! வீரமாகாளி அம்பாள்! ருத்திரரூபி! நாதாந்தப் பொருளே! அகோர தன்மையையுடைய வீரி! நாராயணி! காரணி! தேவி! சத்தி! மூதாந்த மூர்த்தி, பராபரை! துர்க்கை! பிரம விஷ்ணு ருத்திராதியர்களுக்கு முதற்பொருளே! ஆநந்தாயி! மாதாந்தமென்னும் சபையைப்பெற்ற ஏகவல்லி ஆகிய இந்நாமங்களையுடைய மகாதேவிக்குப் புத்திரனாகிய யானை முகத்தையுடைய விநாயகனானவன் பலதிரட்டென்னும் இந்த புஸ்தகத்தைப் பாடக் காத்து ரட்சிப்பான் (எ-று) (1)

நூல்—முப்பூமுறை.

தானென்ற முப்பூவைச் சொல்லக்கேளு தருவான வண்டமடா வாதியாதி காலென்ற வண்டத்தைக் கொண்டுவந்து கடிதாக நொறுக்கியதை துட்டைபோல மானென்ற பூநீற்றைக் கரைத்திறுத்து மைந்தனே பதிற்போட்டுக் குறுகக்காய்ச்சி பானென்ற ஜலம்விட்டுக் கழுவிப்போட்டு பண்பான ரவிதனிலே யுலரப் போடே. ௨

(பொ-ரை) முப்பூ செய்யும் வழியைச் சொல்லுகிறேன் கேட்பாயாக இந்த முப்பூவுக்கு அண்டமென்னும் பொருளே காரணவஸ்துவாகும் ஆகையால் அப்படிப்பட்ட அண்டத்தைக்

கொண்டுவந்து துட்டைப்போல் நொறுக்கி வைத்துக்கொண்டு பூநீற்றைக் கொண்டுவந்து நன்றாய் சலம்விட்டுக் கரைத்திறுத்து அதில் மேற்படி அண்டத்தைப் போட்டு குறையும்படி (அதாவது சலம் வற்றக்) காய்ச்சி பிறகு அவைகளை ஜலம்விட்டு நன்றாய்க் கழுவி வெயிலில் உலரப்போடு (எ-று) (2)

போட்டே சுண்ணக்கல் நாலுநாழி போட்டதிலே நீரூற்றி விட்டுநீற்றி நாட்டே கலக்கியதை தெளியவைத்து நாயகனே மறு சட்டி தனிலிறுத்துக் கூட்டே யண்டஜலம திலேபோட்டுக் குறுக்கியே காய்ச்சியதை யெடுத்துக்கொண்டு ஆட்டே குழிக்கல்லி லிந்நீர்விட்டு அப்பனே மைபோல வரைத்துத்தீரே. ௩

(பொ-ரை) பிறகு சுண்ணாம்புக்கல் நான்கு படி கொண்டு வந்து அதிலே சலம் விட்டுக் கரைத்து தெளிவிறுத்து வேறு சட்டியில் ஊற்றி அதில் மறுபடியும் அண்டத்தைப் போட்டு வற்றக் காய்ச்சி அதை யெடுத்துக்கொண்டு கலவத்தில் போட்டு இப்பொழுது தெளிவிருத்த சலத்தை விட்டு மைபோ லரைத்துக்கொள்ளவேண்டும் (எ-று) (3)

தீரே யுலரவைத்து வில்லைபோலே திறமாகக் காய்ந்தபின் னெடுத்தமைந்தா சீரே யுலையில்வைத் தூதுவது சின்மயத்தின் சுண்ணமதை யென்னசொல்வேன் பாரே சுண்ணமது ஆகுமட்டும்பாங்காக விந்நீரி லரைத்து வூதுவீரே உலைக்கேற்றி மைந்தாநீயும் விதமான சுண்ணமதை கலக்கிப்போடே. ௪

(பொ-ரை) அரைத்ததைப் பில்லை செய்து காயவைத்து நன்றாய்க் காய்ந்து அந்த பில்லையை உலையில் வைத்து ஊது, அப்படி யூதினால் சுண்ணமாகும். சுண்ணமாகாவிட்டால் மறுபடியும் அரைத்தரைத்து உலைக்கு ஏற்றி ஊதிச் சுண்ணமாக்கி அந்தச் சுண்ணத்தை சலத்தில் கலக்குவாய் (எ-று) (4)

போடே காரையினாற் பாத்தி கட்டிப் பொங்கமுடன் வெந்நீரை யதிலே வாரு நாடே யதைவழித்துக் கரைத்து நன்றாய் நாயகனே தெளிவிறுத்து நவநாள் வாரு ஆடே ரவிதனிலே யுலரவைத்து அப்பனே யன்பாகச் சத்தி பூசை, தேடே கணபதியின் பூசை செய்து திறமாகக் குப்பியிலே யடைத்து வையே. ௫

(பொ-ரை) அவ்விதம் கலக்கினதை காரைச் சின்னம்பா பாத்திகட்டி அதில் வார்த்துச் சலங் கொஞ்சம் வறண்டபின் அதை வழித்து மறுபடியும் அதைச் சலத்தில் கரைத்து தெளிவிறுத்து ஒன்பது நாள் அப்படியே வைத்து வெயிலில் உலர வைத்து சத்தி பூசை செய்து அதை யெடுத்துக் குப்பியில் அடைத்துவைப்பாய் (எ-று) (5)

வைவேபி மலைச்சாம்பல்முரி நீரில் வகையாகச் சமன்கொண்டு கலக்கித் தேற்றி செய்வேநீ தெளிவிறுத்துப் பாத்தி தன்னிற் செயலாக வொன்பதுநாள் மட்டும் வாரு வைவேநீ யுப்பாகு மெடுத்துக் கொண்டு மைந்தனே குப்பியிலே பதனம் பண்ணு வைவேநீ யுப்பெல்லா மிந்த பாகம் கருவாக வெடுத்தாக்கா லுப்பே யாகும். க

(பொ-ரை) இதைவிட்டு மலைச்சாம்பலேனும் அவ்விடத்துப் புழுதியைக் கொண்டுவந்து அமுரி நீரில் ஒரே அளவாகக் கலந்து கலக்கித் தெளிவை இறுத்து வேறு பாத்திரத்தில் ஒன்பது நாள் வரைக்கும் வார்த்து உலர்த்தினால் அது உப்பாகும். அந்த உப்பை எடுத்துக்கொண்டு குப்பியில் வைத்துப் பூசை செய்து இரு இதுவே உப்பு செய்யும் பாகமாகும் (எ-று) (6)

உப்பான முப்பூவைச் சமனாய்ச் சேர்த்து உத்தமனே மாதவிடாய் நீரா லாட்டி ஒப்பாக வில்லைசெய் துலர வைத்து வொளிவான முழுப்புடத்தி லூதப் போடு வெப்பான புடமாறி யெடுத்துக் கொண்டு விதமாக குப்பியிலே வைத்துப் பூசி செப்பான முப்பூவின் சுண்ணத் தாலே செயமாகுந் தொழில்க ளெல்லாஞ் சித்தி தானே. எ

(பொ-ரை) அப்படியான உப்பினுடனே முப்பூவைச் சேர்த்து நாதநீர் என்னும் மாதவிடாய் நீரினால் அரைத்து வில்லை செய்து வெயிலில் வைத்து உலர்த்தி முழுப்புடத்தில் புடம் போட்டு அது ஆறினபின் எடுத்து குப்பியில் வைத்து பூசை செய்து கொள்வாயானால் இந்த முப்பூவின் சுண்ணத்தால் செயமாகக்கூடிய தொழில்களெல்லாம் சித்தியாகும் (எ-று) (7)

ரசக்கட்டு.

சித்தியாய் ரசக்கட்டு சொல்லக் கேளு சிறப்பான பன்றியின் பாலாற்கட்டும் புத்தியாய் குட்டியெல்லா மடைத்துவைத்து பொ

ழுது இரைதேடித் தொடங்கும்போது வெற்றியாம் குட்டியொன்றுங் குடிக்கா விட்டால் விதமாகப் பால்நிரம்பி மூக்கிற் சிந்தும் பத்தியாய்க் கலனுடன் பிசைந் தழுத்திப் பாங்காகச் சத்தியால் ரசத்தை வாரே.

(பொ-ரை) இனி ரசக்கட்டு சொல்லுகிறேன் கேள், அதாவது பன்றியின் பாலால்கட்டும் பன்றியின் குட்டிகளையெல்லாம் பால் குடிக்காதபடி அடைத்துவைத்து காலையில் ஒரு குட்டியும் குடிக்காதிருப்பதால் பாலானது மூக்கு வழியாகச் சிந்தும் அப்போது அந்த பாலில் பிசைந்து அழுத்தி அதில் ரசத்தை வாரு (எ-று) (8)

வாரேநீ வராகனெடை யைம்பத் தொன்று வளமாக முன்சொன்ன முப்பூச் சுண்ணம் பாரேநீ வராகனெடை யொன்று நாட்டு பதமாகச் சத்தியுட பூசைசெய்து சீரேநீ வாயிலிட்டுச் செலுத்திப் போடு செம்மையாய் வாய்மூக்குங் காதுந் தைத்துத் தேரேநீ புதுபாண்ட மதிலே விட்டு திறமாக வெடுக்கரச மணியுமாமே.

(பொ-ரை) வராகனெடை ஐம்பத்தொன்று ரசமும், ஒரு வராகனெடை முப்பூசுண்ணமும் சேர்த்து சத்திபூசை செய்து அந்தப் பன்றியின் வாயிலிட்டு வாயையும் மூக்கையுந் தைத்து ஒரு புதிய பாண்டத்தில் வைத்து எடுக்க ரசம் மணியாகும் (எ-று) (9)

ஆமேநீ நாகமொன்று தங்க மொன்று அளவாக ரசக்கட்டு ஒன்றுங் கூட்டு வாமேநீ தங்கமதை யுருக்கிக் கொண்டு வளமான ரசக்கட்டு நாகஞ் சேரு, காமேநீ செம்பதிலே பத்துக் கொன்று தான்கொடுக்க வொன்பதை மாற்றுமாகும் நாமேநீ கெந்தியிட்டுச் செந்தூரித்தால் நாயகனே நவலோக வேதை யாமே.

(பொ-ரை) அப்படியான ரசக்கட்டு ஒரு எடையும் நாகம் ஒரு எடையும், தங்கம் ஒரு எடையுமாக எடுத்து முதலில் தங்கத்தை உருக்கி அது உருகும்போது மற்ற இரண்டு எடைகளையுஞ் சேர்த்துக் களங்காக்கி வைத்துக்கொண்டு செம்பு பத்தெடை உருக்கி அதில் இந்த மருந்தை ஒரு எடை கொடுக்க ஒன்பதரை மாற்று காணும், அதில் கெந்தகம் சேர்த்துச் செந்தூரஞ் செய்தாலோ நவலோக வேதையாகும் (எ-று) (10)

திலகமுறை.

ஆமேமீ வசிய மென்ற மையைக் கேளு அடைவான கஸ்தூரி மஞ்சளப்பா வாமேமீ யூசியென்ற காந்தந் தானும் வளமான கோரோசினை கிரும்பு கூட்டித் தாமேமீ பச்சையென்ற பூரத்தோடு தயவான சாதிக்காய் வாரகன் கால்தான் னாமேமீ யிவையெல்லாம் பொடியாய்ச் செய்து நாயகனே வெண்டுகிலில் நீபரப்பே.

(பொ-ரை) இனி வசிய மையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. கஸ்தூரி மஞ்சள், ஊசிக்காந்தம், கோரோசனம், இலவங்கம், பச்சைக் கர்ப்பூரம், சாதிக்காய் இவைகள் வகைக்குக் கால் வாரகனெடை எடுத்து பொடிசெய்து வெண்மையாகிய துணியில் பரப்பு (எ-று). (11)

பரப்பியே தலைபஞ்சங் கொடியுங் கூடப் பண்பாகக் குருபர் தந் தனைநினைந்து அரத்தியே திரியாக்கிக் கருச்சீலை சுற்றி யப்பனே தாமரை நூல் மேலே சுற்றி வாத்தியே காராவி னெய்யைத் தானும் வளமான சிரசோடு தன்னி லிட்டு சிரத்தையே சிரசோட்டில்நெய்யை வார்த்துச் சிவசிவா விளக்கேற்றி மையைவாங்கே

(பொ-ரை) இவ்விதம் பரப்பி தலைப்பிண்டக் கொடியும் அதுடன் வைத்துத் திரிதிரித்து மேலே கறுப்புத் துணியைச்சுற்றி அதற்குமேல் தாமரை நூலைச்சுற்றி கறுப்பு பசுவென்னும் காராம்பசுவின் நெய்யை மண்டையோட்டில் வார்த்து அந்தத் திரியை அதிலிட்டுக் கொளுத்தி மைவாங்கு (எ-று) (12)

வாங்கியே புழுகுடன் சவ்வாதுங் கூட்டி வளமாக மத்தித்து சிமிழில் வைத்துப் பாங்கியே மோகினிக்குப் பூசைசெய்து பண்பான மந்திரந்தான் சொல்லக் கேளு தாங்கியே பூசையது வாலை பூசை தயவாகப் பூசித்துத் தியான மோது ஆங்கியே ஸ்ரீம்இரீம்கிலீமென்றோதி ஆக்ருஷ்ணி மோகினியென் றங்கென்றெண்ணே.

(பொ-ரை) அப்படி வாங்கின மையினுடன் புனுகு சவ்வாது இவைகளைச் சேர்த்து நன்றாய்க் கலந்துவைத்துக்கொண்டு மோகினுக்கும் வாலைக்கும் பூசைசெய்து ஸ்ரீம், இரீம், கிலீம் என்று தியானஞ் செய்து மோகினிதேவி நீ ஆக்ருஷ்ணி அங் என்று எண்ணிக்கொள்ளவேண்டும் (எ-று) (13)

என்னவே தியானமொரு லட்சமோது என்னசொல்வே னுலகமெலாம் வசிய மாகும் நன்னவே தங்கத்தால் வெள்ளி யாலும் கல்லசிமிழ் குச்சிசெய்து திலகம்போடு பண்ணவே தேவராட்சித்தர்கள் தானும் பண்பான புருஷரொடு மாதர் யாவும் அண்ணவே கேட்டதெல்லா மீவார் பாரு அப்பனே கையெல்லா மற்றுப் போமே.

(பொ-ரை) இந்த மந்திரத்தை ஒரு லட்சந் தடவை ஜெபித்தால் வசியமாகும், இந்த மையை வெள்ளியாலாவது தங்கத்தாலாவது கம்பி செய்து அதினா லெடுத்து மையிடவும், அப்படி செய்தால் தேவர்கள் ராட்சதர்கள் புருஷர், பெண்கள் இவர்களெல்லாம் என்ன கேட்டாலும் கொடுப்பார்கள் எ-று) (14)

போமேதான் மாற்றமொன்று சொல்லக் கேளு பொலிவான ஐங்கோலம் பிண்டம் வாங்கி நாமேதான் சூரணித்தெடுத்துக் கொண்டு நாயகியாள் சீலையிலே வைத்துருட்டி ஆமேதான் சிரசோட்டிற் காராவி னெய்யிலப்பனே மையெரித் தெடுத்துக் கொண்டு வாமேதான் திலதமிட மறையும்பாரே வளமான மான்மார்க்க சித்திதானே.

(பொ-ரை) இன்னு மொன்று சொல்லக் கேளு:—ஐங்கோலம் என்னும் அழிஞ்சிலின் சமூலம் வாங்கிச் சூரணஞ்செய்து அதை ஒரு பெண்ணின் சீலையில் வைத்துத் திரியாக்கி மண்டையோட்டில் காராம்பசுவின் நெய்யைவிட்டு அதில் இந்தத் திரியைப்போட்டு எரித்து மை வாங்கி திலர்தமிட்டால் அவ்வுரும் மறையும். (எ-று) (15)

அஞ்சனம்.

சித்தான அஞ்சனந்தான் சொல்லக் கேளு சிறப்பான மூலிகையொன் றுரைப்பேன் மைந்தா முத்தான ஆடாதோடை மூலியப்பா முதன்மையா மதினுடைய கிழங்கை கண்டு பத்தான ஏண் பேத மட்டுஞ் செய்து பண்பான வதினுடைய கிழங்கு வாங்கி வித்தான குழியம்மி தன்னி லப்பா விதமான கிழங்கதிலே வார்கன் போடே.

(பொ-ரை) வேறொரு அஞ்சனஞ் சொல்லுகிறேன் கேள்:—ஆடாதோடை என்னும் மூலிகையின் முதிர்ந்த கிழங்கைப்பார்

த்து மந்திரோச்சாடனஞ் செய்து அந்தக் கிழங்கை எடுத்துக் கொண்டுவந்து கல்வத்தில் ஒரு வராகனெடைபோடு. (எ-று) ()

போடப்பா வதினுடைய பழந்தானையா பொங்கமுடன் கோரோசினைப் புழுகுகூட்டி ஆடப்பா விளக்கிட்டுச்சார்வைநீலாய் யாலின் பாகவெட்டுண்ட சிரசிலேநட்டில் கூட்டப்பா மையெரித்தெடுத்துக் கொண்டு கூர்மையாய் சற்குருவின் பாதம் போற்றி கேப்பா முக்காலும் பூசைசெய்து கிளைவாக புற்றினிட தேனி லாட்டே. கள

(பொ-ரை) அத்துடன் அதினுடைய பழமும், கோரோசனையுங் கூட்டித் திரியாக்கி சாரைப்பாம்பின் நெய்யை மண்டையோட்டிலிட்டு அதில் திரியைப்போட்டு எரித்து மையை எடுத்துக் கொண்டு ஆசாரியருடைய திருவடிகளை நமஸ்காரஞ்செய்து புத்துத் தேனில் அரை. (எ-று) (17)

ஆட்டையிலே குழியம்பி வெடித்துக் காணு மப்பனே பார்காளஞ் செகமாய் தோணுங் கூட்டையிலே வழித்தெடுத்துச் சிமிளில் வைத்து குருவான கணபதிக்கு பூசை செய்து நீட்டையிலே யஞ்சனு தேவி யனுமார்க்கும் நிச்சயமாய்ப் பூசைசெய்து கண்ணிற் போடு காட்டையிலே நிதிகளெல்லாங் கண்ணிற்றோன்றுங் கனிவாகக் கிண்டியதை யெடுத்துக் கொள்ளே

இவ்விதம் அரைக்கும்போது கல்வம் வெடித்துக்காணும். அப்போது பாதாளமும் காணும், இதுகண்டு அவைகளை யெல்லாம் வழித்தெடுத்து ஒரு பரணில்வைத்து கணபதி பூசைசெய்து அஞ்சனாதேவியைப் பூசித்து கண்ணிற் போட்டால் நிதிகளெல்லாம் கண்ணுக்குத் தெரியும். (எ-று) (18)

மாரணம்.

கொள்ளவே மாரணத்தைச் சொல்லக் கேளு கொடிதான பாவமடா சொல்லொணுது அள்ளவே மாரணைசக் கரத்தைக் கீறி அடைவாக நீர்மலமுங் காற்கீழ் மண்ணும் விள்ளவே கருவதிலே யரைத்துப்பூசி விதமான வவன்பேரு மெழுத்த காட்டித் தள்ளவே நாகத்தின் வாயி னுள்ளே தான்செலுத்தித் தலைகீழாய்த் தூக்கி கட்டே.

(பொ-ரை) இனி மாரணத்தைச் சொல்லக் கேளு:—இதைச் சொல்லுவது மிகவும் பாவமாகும். அதாவது மாரண சக்கரம்

ஒன்றைக் கீறித்து வரிசையாக நீரும், மலமும் காலின்கீழ் மண்ணும், அதில் கருவை அரைத்துப்பூசி அவனுடைய பேரையும் அதில் எழுதி ஒரு பாம்பின் வாயினுள்ளே செலுத்தி தலைகீழாய்த் தூக்கிக் கட்டு. (எ-று) (19)

கட்டியோ சமர்த்தென்னவெட்டி யப்பா கருவான நிம்பநெய்யிலோமம் பண்ணு தட்டியே தென்முகமா யிருந்து கொண்டு திரமாகச் சபிக்குமந்த மந்திரத்தை கேளு கிட்டியே மசிநசி யென்றே யோது கிருபையுடனெட்டுநாள் செபித்தாயானால் வெட்டியே வாங்குமடா ஆரானாலும் நிமிஷத்திற் கொல்லுமடா கண்டு பாரே.

(பொ-ரை) அதன்பிறகு வேப்பெண்ணெய் ஓமம்பண்ணி தெற்குமுகமா யிருந்துகொண்டு மசி, நசி என்று ஜெபித்து எட்டு நாளானபின் யாரானாலும் நிமிஷத்திற்போகும் இதைக்கண்டுபார். (எ-று) (20)

பேதனம்.

பாரப்பா பேதனத்தைச் சொல்லக் கேளு பண்பான வூமத்தங் காய்தான் ரெட்டை சேரப்பா பாவதி லெட்காற் கீழ்மண்ணுஞ் சிறப்பாக வதிற்செலுத்தி யவன்பேர்காட்டி வீரப்பா பேதனத்தை நன்றாயோது விதமாக வவனிருக்கு மூரைச்சுற்றி கூறப்பா மயானத்திற் புதைக்கும் போது குருவான கருகூட்டி புதைத்துப் போடே.

(பொ-ரை) இனி, பேதனத்தைச் சொல்லுகின்றேன் கேள். இரண்டு ஊமத்தங்காய்களைப் பிளந்து அதில் எதிராளியின் இடது கால் கீழ் மண்ணைச் செலுத்தி அவனுடைய பேரைகாட்டி பேதன மந்திரத்தைச் சொல்லி அவன் இருக்கும் ஊரைச்சுற்றி மயானத்தில் குருவைக்கூட்டிப் புதைத்துப்போடு. (எ-று) (21)

புதைத்தவுடன் பக்கமதிற் பிரமைகொள்ளும் பொல்லாத கோஷ்டி யெல்லா மனைகளுஞ் செய்யும் வதைத்துமட்டுந் தேசமெங்குஞ் சுற்றிமாள்வான் வையகத்தோர் தான்புகழ்ந்துச் செப்பாப் பாரு பதைத்து பதைத்தலைக் தழுவானப்பா பழிகாரன் பாவியவனென்ன சொல்வேனதிக்கமனத்துடன் வங்காலில் வீழ்ந்தாற் கருவாகவதை யெடுத்தாற்றிப் போடே.

(பொ-ரை) இவ்விதமாகப் புதைத்தவுடனே சமீபத்தில் மயக்கமுண்டாகும் அநேக கோஷ்டங்களை யெல்லாஞ் செய்யும், ஊரெல்லாஞ்சுற்றி யிறப்பான். உகைத்தோர்களெல்லாம் பழித்துச் சிரிப்பார்கள், பதைத்து பதைத்து அழுவார்கள் இப்படிப்பட்டவன்வந்து காலில் விழுந்தால் எடுத்துவிடு. (எ-று) (22)

வித்து வேஷணம்.

போடவே வித்து வேஷணத்தைக் கேளு பொலிவான வேம்பின்மேற் காக்கைகூடு நாடவேகழுதையுட சடையுங்கூட்டி நாயகியா வறுத்தகயி றதுவுஞ்சேர்த்து கூடவே பஞ்சுவெட்டி யறுத்துபோன குணமான நரம்பதுவும் பன்றிரோமம் சாடவே பித்தநசம் பித்தக்கூடை சலாயனச் சுளகுடனே சித்தியாமே.

(பொ-ரை) இனி வித்வேஷணத்தைச் சொல்லுகின்றேன் கேள். வேப்பமரத்தின் மேலிருக்கின்ற காக்கைக்கூண்டும், கழுதைச் சடையும், நாயகியான் அறுத்தாயினும், வெட்டுவதால் அறுந்துபோன பஞ்சின் நரம்பும், பன்றிமயிரும், சலாயனவிறகு இவைகளுடனே செய்யக் கைகூடும். (எ-று) (23)

ஆமேநீ முச்சந்தி மீதின்மண்ணி லப்பனே யுட்கொளுத்தி யடுப்பில் வைத்து தாமேநீ தென்முகம் நிர்வாணரூபந் தயவாகத் தான்சுட்டுச் சாம்பலாக்கி வாமேநீ யறுகோண மீதிற்கீறி வளமாகநசிமசி யென்று நாட்டிநாமே நீமந்திரந்தான் தூம்தூம் சிசி நண்ணியோம நசிநசி யென்றே யோதே.

(பொ-ரை) இவைகள் தவிர, முச்சந்தி மண்ணின்மேல் இவைகளைக் கொளுத்தி அடுப்பில் வைத்து தெற்கு முகமாக நிர்வாணமாயிருந்து அவைகளைச் சுட்டு அறுகோணம் போட்டு அதின் மத்தியில் தூமசியென்று நாட்டி தூம் தூம் சிசி என்றும் நசி நசி என்றும் மந்திர ஜெபஞ்செய்து, (எ-று) (24)

ஓதியே யெடுத்துவந் தெதிரிபேரை ஒளிவாகத் தான்முடிந்திரயில்வைக்க பாதியே படிவாசல் தாக்கிப் போட்டால் பதிகெட்டு இருவருமே பிரிந்துபோவார் வாதியே வடமொழியில் முன்னோர்சொன்ன வளமான வழியெல்லாந் தமிழிலப்பா நீதியே தப்பாமலெடுத்து நன்றாய் நீணிலத்தோர் தான்பிழைக்கப் பாடினேனே.

(பொ-ரை) அவைகளை யெல்லாம் எடுத்துக்கொண்டுவந்து எதிரியினுடைய பேரை மறைவாகமுடிந்து இராத்திரியில் வைக்க அப்படி வைக்கப்பட்ட வாசல்படியைத் தாண்டினால் இருவரும் பிரிந்து போவார்கள். இவைகளை யெல்லாம் வடமொழியிலிருந்து தமிழினால் சொன்னேன். (எ-று) (25)

பாடியே நரம்பெலும்பு மயிருங்கூடப் பண்பில்லாச் சுடலையுட சாம்பல்சேரு ஆடியே யுடம்பினது தலையுங்கூட்டி யப்பனே நாய்பல்லு மதனிற்சேர்த்து சூடியே யெட்டியிலே மாடன்செய்து சுகமான புதுக்கலசந் தன்னில் வைத்து நாடியே யிதுவெல்லா மதனிற் போட்டு நலமான மாடனைவிட் டோதுவாயே.

(பொ-ரை) நரம்பு, எலும்பு, மயிரும்; சுடுகாட்டுச் சாம்பலும், உடம்பின் தலையும், நாய்ப்பல்லும் ஆகிய இவைகளை யெல்லாம் சேர்த்து எட்டியிலே மாடன்செய்து புதிய கலசத்தில் வைத்து இவைகளை யெல்லாம் அதில்போட்டு மாடனை மந்திரஞ்செய்வாயாக. (எ-று) (26)

ஓதவே வண்ணார வுதிரமாடன் ஒளிவான வக்கினிசா மூண்டிவிஞ்சை பாருவாரா கக்கருத்தால் போலுமிக்க வளமான குரங்குபோல பூனைபோலும் ஆதரவாய்ப் புலிபோலுங் கரடிபோலும் அடைவான் பெரும்பன்றி போலுநிற்கும் பேதையே பேய்போலும் பூதம்போலும் பிடித்திழுத்துக் கடிப்பதுபோற் செய்யுமாடன்.

(பொ-ரை) அப்போது வண்ணார உதிரமாடன் அக்கினி சாமூண்டி விஞ்சை இவைகளால் குரங்குபோலவும்; பூனைபோலவும் புலிபோலவும், கரடிபோலவும், பெருங்பன்றிபோலவும், பேய் போலவும், பூதம்போலவும், பிடித்திழுத்துக் கடிப்பதுபோலவும் செய்யும். (எ-று) (27)

மாடனைத்தா னுரு வேற்றிவைத்து நீயும் மைந்தனே பூசை செய்தே திரிணிற்கில் நாடனமாய்க் கைமைதை புடைத்தபோது கட்டழிந்தே பவன்குலமுமாசமாகும் வீடவே வியாதியிலே அழுந்துவார்கள் விதம்விதமாய்மார்க்கண்க ளுயிருஞ்சேதம்வீட்டிலைத்தி ரவியமு மழிந்துபோகுமினியதேவாரண்மைமுதல்சர்ச்மாமே.

(பொ-ரை) இப்படி மாடனை உருவேற்றிவைத்து அனேகவியாதி

வன் நிற்கும்போது அவனெதிரில் கலசத்தை யுடைத்தால் அவனுடைய குலம் நாசமாகும் வியாதியினால் வருந்துவார்கள். மாடு கன்றுகளெல்லாம் சேதமாகும். திரவியமெல்லாமும் அழிந்து போகும் வேளாண்மைமுதல் நாசமாகும் எ-று) (28)

ஆமேதா னெதிரினின்ற பேரையெல்லா மடைவானகாரியத் தை கட்டிற்கீறிவாமோ தானிங்காய மரைத்துப்பூசி வளமான கலசமதில் தாக்கிப்போடு நிமேதான் சத்துருக்கள் வணங்கிவந்தால் திறமாகத் தானெடுத்து பரவிற்போட்டு நாமேதானோடுகிற சலத்திற்போடு நலமாக நிவர்த்தியாய் போகும்பாரே.

(பொ-ரை) எதிரியினுடைய பேரையெல்லாம் காரியத் தகட்டிற் கீறிக் காயம் அரைத்துப்பூசிக் கலசத்தில் தாக்கி சத்துருக்கள் வணங்கிவந்தால் அதை எடுத்து பாவிற்போட்டு ஓடுகிற சலத்திற் போடு நன்றாக நிவர்த்தியாய்ப் போகும். (எ-று) (29)

கள்ளனை பிடிக்க.

பாரப்பா நிலவாகை மலைகள்தோறும்பண்பாகத்தானிருக்கு மதிந்துபாரு வாரப்பா வதினுடைய விரையைத்தானும் வளமாகப் பத்துபலமெடுத்துவந்து சீரப்பா தலைமஞ்சங் கொடியுமாவுஞ் சிறப்பாக முப்பூவும் வராசன்கூட்டிச் சேரப்பா வில்லைதட்டி யுலரப்போடு திறமாக வுலர்த்தியதைத் தயிலம்வாங்க.

(பொ-ரை) மலைகளி லெல்லாம் இருக்கின்ற பெருநிலவாகை என்னும் செடியைக் கண்டுபிடித்து அதன் விரையில் பத்துப்பலம் நிறுத்து எடுத்துத் தலைச்சன் பிள்ளையின் கொடியும், மாவும் முப்பூவென்னும் பூநீறுக்குருவும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வராகனெடையாக எடுத்து அந்த விரையுடன் கூடச்சேர்த்து அரைத்தாவது இடித்தாவது பில்லைபில்லையாகத் தட்டி உலரப்போட்டு ஒருபானையிலிட்டுக்குழித்தயிலம் வாங்கவேண்டும். (எ-று) 30

வாங்கியே யாள்காட்டி முட்டைதன்னை வளமான சிற்றண்டத் தயிலம்போலே தாங்கியே வாங்கியந்தத் தயிலநேரே தயவாகத் தானெடுத்து சிமிளில்வைத்து ஓங்கியே களவுமுதற் சூன்யம் யாவு முற்றுப்பார் தோற்றமடா கள்ளமெல்லாம் நீங்கியே யது கண்டு பிடித்துக் கொண்டு நினைவாகக்குருபாதம் பணிவாய்த் தானே.

(பொ-ரை) அதன்பிறகு ஆள்காட்டி குருவியின் முட்டைகளைச் சேகரஞ்செய்து அண்டத்தயிலம் இறக்குவதுபோல் இறக்கி அந்தத் தயிலத்தை முன் தயிலத்தின் அளவாகவே எடுத்து இரண்டையும் ஒன்றாகக்கலந்து ஒருசிமிளில் வைத்துக்கொண்டு களவு சூனியம் இவைகளுக்கு இந்தத்தயிலத்தை ஒரு வெற்றிலையில் கொஞ்சந்தடவிப்பார்த்தால்சகலமும் நன்றாய்த்தெரியும்உடனே அவர்களைப் பிடித்துக்கொண்டு ஆசாரியருடைய திருவடிகளைத் தியானஞ் செய்யவேண்டும். (எ-று) 31

குறிசொல்லல்.

தானேதான் குறிசொல்லும் விவரங்கேளு தயவாக பச்சையென்ற புழுகுகோஷ்டம் மானேதான் பச்சையென்ற பூரத்தோடு அமர்தனே சந்தனமுஞ் சமனாய்ச்சேர்த்து பானேதான் சலம்போட்டு மைபோலாட்டிப் பண்பாகத் தரைதனிலே பூசிப்பின்னே வினைதான் போகாமல் திரிகோணமிட்டு விதமான ஸ்ரீங்கார முளுனை நாட்டே.

(பொ-ரை) இனிக்குறி சொல்லும்விபரத்தைக் கேட்பாயாக புழுகு, கோஷ்டம் பச்சைக் கர்ப்பூரம் சந்தனம் இவைகளைச் சமனெடையாய்ச் சேர்த்து குளிர்சலம்விட்டு நன்றாயரைத்து அதற்காக ஏற்படுத்தியிருக்கின்ற இடத்தில் பூமியில் அதைப்பூசி அதின் மேல் முக்கோணம் போட்டு அந்த முக்கோணத்தின் மத்தியினில் ஸ்ரீம் என்னும் மந்திரத்தை எழுதி (எ-று) 32

நாட்டியே மந்திரத்தைச் சொல்லக்கேளு நலமாகத் தான்செபிக்க மூன்றுகாலம் ஓட்டியே ஓம்நமோ பகவதே ஓம்உக்கிரிமா காளி சாமுண்டியாயி நீட்டியே வயிரவிசாம்பவி யோங்காரி நிமலி மகாசத்தி நமாநமாகா வென்னே ஆட்டியேலட்சமுடனே யிரத்தெட்டன்பாகத் தான்செபிக்கச் சித்தியாமே.

(பொ-ரை) இவ்விதம் செய்தபின் அவ்விடத்தில் உட்கார்ந்து அத்திரிகோணத்திற்கு புஷ்பார்ச்சித்துகாலை உச்சி மாலை என்னும் மூன்று வேளைகளிலும் ஓம், நமோ பகவதே, ஓம், உக்கிரி, மா காளி, சாமுண்டி, ஆயி, வயிரவி, சாம்பவி, ஓங்காரி, நிமலி, மகா சத்தி, நமா, நமா, காவென்று, ஒருலட்சத்து ஆயிரத்தெட்டுரு செபிக்க அது சித்தியாகும். (எ-று) 33

சித்தியா வருமளவு மூன்றுகாலஞ் சிறப்பாகத் தலைமுழுகித் தியானமோது பத்தியா யொருபொழுது அமுதுகொள்ளுபாங் காக முன்னெடுக்குங் கவளந்தன்னை கத்தியே முன்னிற்ப பின் மேலேவைத்து நலமாக வேஷ்டியிலே படுக்கவேணும் வெத்தி யாய் வஸ்துடனே கத்திவைத்து விதமாக முதற்பூசை செய்கு வாயே.

(பொ-ரை) இந்தக் காரியம் கைகூடும் வரைக்கும் மூன்று வேளைகளிலும் தலைமுழுகி. ஒருபொழுது புசித்து அப்படி புசிக் கும் போஜனத்தில் முன் கவளம் கடைசி கவளம் இவைகள் ஒன்றன்மேல் ஒன்றாக வைத்து காகத்திற் கிட்டு இரவில் வஸ்தி ரத்தின் மேல் படுத்துறங்கி வஸ்துவான கள் வகையும் கத்தியும் வைத்து முதற்பூசை செய்யவேண்டும் (எ-று) (34)

செய்யவே மண்டலத்தில் சித்தியாச்சு செய்தொழில்க ளின் னதென சொல்லலாச்சு பையவே முன்னடந்த சேதியெல்லாம் பண்பாக நினைத்ததெல்லாஞ் சொல்லும்பாரு அய்யனே புகை யதுவுங் குடிக்கலாகா தடைகாயும் வெள்ளிலையு மிகுந்துபோடு கையவே கன்னத்திற் கையை வைத்து கடந்த ஒரு சேதியெல் லாஞ் சொல்லுவாயே,

(பொ-ரை) இவ்விதம் ஒரு மண்டலம் செய்துக்கொண்டுவந் தால் இத்தொழில் கைகூடும். இவ்விதம் அத்தொழில் கைகூடி விடும் பக்ஷத்தில் எதிராளிகள் நாடிவந்தால் அவர்கள் கோருகிற சங்கதிகளை யெல்லாம் அந்தக் குறியின் சித்தியானது உண்மை யாக எடுத்துச் சொல்லும். அதனால் குறி சொல்பவன் சுருட்டு பிடிக்கக்கூடாது. வெற்றிலை பாக்கு எவ்வளவும் குறையாமல் போடலாம், இதைச் சொல்லுவோன் கன்னத்தில் கையை வைத் துக்கொண்டு சொல்லவேண்டும் (எ-று) (35)

சொல்லவே நின்றதொரு வேங்கைக்கட்டை சோபிதமாய் செய்தபின்பு சொல்லக்கேளு வெல்லவேயோணன்தோலுரித்துக் கட்டி விதமான பேதனச் சக்கரத்தைக் கீறி நல்லவே சல்லவை யிற் சக்கரத்தைச் சுற்றி நாயகனே யுட்பதித்துக் கட்டித்திற லல்லவே யடைத்திடவே யெதிரியெல்லாம் மதிமயங்கி வாய் புலம்ப பகருவேனே.

(பொ-ரை) வேங்கைமரப் பலகையை நன்றாய் நாலுக்கு நா லங்குல மிருக்கும்படி சுத்திசெய்து ஓணானுடைய தோலையுரித்து கட்டி அதில் பேதனத்திற் குரிய சக்கரத்தைப் போட்டு சரோ கையினால் சக்கரத்தைச் சுற்றி உள்ளே பதியச்செய்து அடைக்க எதிரிகளெல்லாம் மதிமயங்கிப் புலம்புவார்கள் (எ-று) (36)

சொக்குத்தூள்.

பகரவே பொடியொன்று சொல்லக்கேளு பாங்கான செரு க்குடைய பாக்கைவாங்கி திகழவே யப்பையுட மூலத்தோடு சிற ப்பான நிலப்பனையுந் தாளிவேரும் புகழவே யத்திப்பேயால வேரும் பொலிவான குப்பையுட மேனிவேரும் அகலவே வேளை வேர் கழற்சிவேரும் அப்பனே யூமத்தம் வித்துஞ்சேரே,

(பொ-ரை) ஒரு பொடியைச் சொல்லுகின்றேன் கேள். சொக்குள்ள பாக்குகளை வாங்கி அப்பைக் கோவைகிழங்கு, நிலப் பனைக்கிழங்கு, தாளிவேர் பேயத்தி வேரும் நல்லத்தி வேர், குப் பைமேனி வேர், வேளை வேர் கச்சைக்காய்வேர் ஊமத்தம்விதை இவைகளை அத்துடன் சேர்க்கவேண்டும், (எ-று) (37)

சேரப்பா தலைமஞ்சங் கொடியுங்கூடச் செயலான மாத விடாய் சீலைகூட்டிப் பாரப்பா பித்தனு சாம்பல்மண்டை யோபாங் கான வூமைமண்டைப் பொடியுஞ் சேர்த்து நிரப்பா விதுவெல் லாஞ் சமனாய்க் கூட்டித் திறமாக பொடிசெய்து வைத்துத் திரண்டு கூறப்பா பேயத்தி பேயால் பாலும் கூடவேதான் சேர்த்துப் பொடித்திடாயே.

(பொ-ரை) அவைகளுடன் நஞ்சு கொடி, மாதர்களுடைய மாதவிடாய் சீலை பித்தனைக் கொளுத்தின சாம்பல், ஊமை மண் டையோட்டுப் பொடி இவைகளையெல்லாம் ஒரேயளவாகச்சேர்த்து பொடிசெய்து வைத்துக்கொண்டு அதில் பேயத்தி பால் வேலைப் பால் இவைகளைக் கூடச்சேர்த்துக் கரைக்கவேண்டும். (எ-று) ()

பொடியெடுத்து தூவிவிட்டாற் சகலபேரும் பொறிகலங்கி மதிமயங்கிக் கிடப்பார் பாரு மடி பிடித்துத்தான் புரட்டிப் பொ ருள் கொண்டாலும் மங்கையரைப் புணர்ந்தாலு மறியாரது தடியெடுத்தே யடித்தாலு மினைவிராது அய்யனைச்சலமங்கே தெளிக் குமட்டும் வடிவெடுத்தபோகருட கடாட்சத்தாலேவழுத்தினேன் புலிப்பாணி சொக்குதானே.

(பொ-ரை) இந்தத் தூளை யார்பேரிலாவது கொஞ்ச மெடுத்துத் தூவிவிட்டால் யாவரும் அறிவு மயங்கிப் போவார்கள், அப்பொழுது அவர்களிடத்திலுள்ள பொருள்களை யபகரித்துக் கொண்டாலும், பெண்களைப் பலாத்காரமாகப் புணர்ந்தாலும் தடியெடுத்து நன்றாய் அடித்தாலும் அறிவிருக்காது. இதுதெளிய வேண்டுமானால் அவர்கள் மேலே கொஞ்சஞ் சலந்தெளிக்கவேண்டும். இது போக முனிவருடைய கிருபையினால் புலிப்பாணிமுனிவர் சொன்ன சொக்குத்தூள் (எ-று) (39)

விந்து ஸ்தம்பனம்.

தூளைவிட்டு இன்னமொன்று சொல்லக் கேளு ஆலக்க முள்ள பாலைவித் தெடுத்துவந்து பாலையென்ற விந்துதானிறுத்தி வைக்கும் பண்பான பூமி சர்க்கரையின்மூலம் காலையென்ற பூனை யுடகாலிவித்துங் கனிவாக வகைவகைக்கு விராகனெண்டு ஆனவே யாவின்பால் தன்னாலாட்டி யடைவாகப் பன்னிரண்டு நாள்தான் கொள்ளே,

(பொ-ரை) அந்தத் தூளை விட்டு இன்னுமொன்று சொல்லக்கேளு ஆலின்றுப்பாலை விரையை எடுத்துக்கொண்டுவந்து விந்துவை நிறுத்துகின்ற பூசர்க்கரைக் கிழங்கு பூனைக்காலி விரை இவைகள் வகைக்கு இரண்டிரண்டு விராகனெடை எடுத்து பசும் பாலால் நன்றாயரைத்து பன்னிரண்டு நாள் அரைக்கும் தின்னக் கடவை (எ-று) (40)

கொள்ளவே யந்திசந்தி கொண்டபோது கோடி பெண்ணை யணைந்தாலுங் கழிந்திடாது தள்ளவே மாற்றதுவுஞ் சொல்லக் கேளு தயவாகத் தண்ணீரிற் கழுத்துமட்டும் விள்ளவே நின்று காற் கெலிக்குந் தேயுஞ் விதமாக வெலுமிச்சம் பழத்தையுண்ணு அள்ளவே போகருடைய கடாக்ஷத்தாலே அடைவாக புலிப்பாணி விளம்பினேனே.

(பொ-ரை) இவ்விதம் இரண்டு வேளையும் சாபபிட்டபோது கோடிப் பெண்களைச் சேர்ந்தாலும் விந்து கழியாது. அதற்கு மாற்றுவது கழுத்து வரைக்கும் தண்ணீரிலிருந்து வரலாம். தவிர எலுமிச்சம்பழத்தைச் சாப்பிடவேண்டும். ஆகையால்போகமுனிவருடைய கிருபையினால் புலிப்பாணியாகிய நான் சொன்னேன். (எ-று) (41)

வசியம்.

விளம்பியே யின்னமொன்று சொல்லக்கேளு விதமான சூரியகாந்திப் பூவுந் தளும்பவே செங்கழுநீர் பூவினோடும் தயவான முல்லைப்பூ மாம்பூ கூட்டி குளம்பவே கோழியாவாரைப் பூவுங் கொடிதான வெள்ளைக்காவலையின் பூவும் கிளம்பவே செவ்வலறிபூவுங் கூட்டு கெணிதமுடன் கரிப்பான்சார்கூடச்சேர்த்தே,

(பொ-ரை) வேறொன்று சொல்லுவதைக் கேள். சூரியகாந்திப்பூ, செங்கழுநீர்ப்பூ முல்லைப்பூ, கோழியவரைப்பூ, வெள்ளைக் காவலைப்பூ, செவ்வலரிப்பூ இவைகளோடுகூடக் கரிசலாங்கண்ணிச் சாற்றைச் சேர்த்து (எ-று) (42)

சேர்த்தப்பா பூவையெல்லாஞ் சாரிழிந்து சிறப்பாக வோரெடையா யொன்றில்வாரு பார்த்தப்பா கொம்புத்தேன் கூட்ச் சேர்த்து பண்பான கல்வத்தி லரைக்கும்போது கூர்த்தப்பா பெண்ணுடைய மதுவுங்கூட்டிக் குணமான கொடுஞ்சினையுங்கூட்டி யாட்டு கோர்த்தப்பா புழுகுடனே பச்சைப் பூரங்கொடிதாக வகைக்குவகை விராகன்காலே.

(பொ-ரை) மேலே சொன்ன புஷ்பங்களை யெல்லாஞ் சாறு பிழிந்து ஒரே எடையாக ஒரு பாத்திரத்தில் வார்த்து கொம்புத் தேனையுங்கூடச் சேர்த்து கல்வத்தில் போட்டு அரைக்கும்போது பெண்ணினுடைய மதுவையுங் கூட்டி இவைகளுடன் கோரோஜனம் புநுகு, பச்சைக் கற்பூரம் இவைகள் ஒவ்வொன்றும் கால் விராகனெடையாகச் சேர்க்கவேண்டும் (எ-று) (43)

காலான விதுவெல்லா மரைத்து மைபோற் கட்டாகச் சிமிழ்தனிலடைத்துக்கொண்டு பாலான மயானமதில் தான் புதைத்து பண்பாக மூன்றுநாள் மோகினியையோதுசேலாகமுன் சொன்ன மந்திரந்தான் செபிப்பாய் தினமொன்றுக் காயிரந்தான் வாலாயமோகினியைப் பூசைசெய்து வளமாகத்திலகமிட வசியம்பாரே,

(பொ-ரை) இவைகளையெல்லாம் நன்றாக மைபோலரைத்து ஒரு டப்பியில் வைத்துக்கொண்டு சுடுகாட்டில் புதைத்து மூன்று நாள்வரைக்கும் மோகினி மந்திரத்தை நாளொன்றுக்கு ஆயிரம் உரு செபித்து பின்னர் அதை எடுத்து பொட்டிட வசியம் பார் (எ-று) (44)

பாரடா வையகத்து மாதரெல்லாம் பார்த்தவுடன்மதிமயங்கி முறையுங்கேடடுச் சேரடா வென்பாருங்காலில் வந்து சிறப்பாக விழுவாரும்வணங்குவாரும் கூரடா குலமழிந்து வலதுகெட்டுகுடி கெடுத்துகாமவெறிகொண்டுபின்னே தீரடாபொருள்கொடுப்பார் வேணபட்டுந் திறமாகவசியமது தின்னந்தானே.

(பொ-ரை) இப்படி செய்துகொண்டால் பார்க்கின்ற பெண் களெல்லாம் புத்திகெட்டு சேருவாயென்று சொல்லுபவரிடம் காலில் வந்து விழுபவரும் வணங்குபவரும் ஆக அநேகமான திரவியத்தை உனக்குக் கொடுப்பார்கள் (எ-று) (45)

கற்பம்.

தின்னந்தான் கற்பமென்று சொல்லக்கேளு திறமான விழுதியிலே கிழங்குமுண்டு வண்ணந்தானதை யறிந்தெடுத்துக் கொண்டு வளமாகக்கொண்டுவர மண்டலந்தான் நண்ணந்தான் காயசித்தியாகும் பாரு நலமான வெள்ளறுகுக்கிந்தவிதம்பாரு வண்ணந்தான் வேறில்லைக்கொத்தானுக்கு வன்பாகவதினேரே கிழங்குண்டாமே.

(பொ-ரை) இனி ஒரு கற்பத்தைச் சொல்லுகிறேன் கேள். விழுதியிலையையும் அதின் கிழங்கையும் அறிந்தெடுத்து மண்டலம் வரைக்கும் பாலிலரைத்துத் தின்றுவந்தால் காயசித்தி யுண்டாகும். வெள்ளறுகுக்கும் கொத்தானுக்கும் இந்தக் குணம் உண்டு (எ-று) (46)

ஆகுமே காயசித்தி மண்டலத்தில் அப்பனே யாகுமடா கண்டுபாருபோகுமே நோய்களெல்லா மகன்றுபோகும்பொன் னுலகிற்றேவரெல்லாம் வசியமாவார் வாகுமே ஜெகவசியமாகும் பாரு வளமான சித்தரெல்லாம் கண்ணிற்றோற்றும் நாகுமே போகருட கடாட்சத்தாலே நலமாகப்புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இவ்விதம் ஒரு மண்டலத்தில் காயசித்தியானால் சரீரத்திலுள்ள நோய்களெல்லாம் ஓடிப்போகும் தேவர்களெல் லாம் வசியமாவார்கள், உலக வசியமாகும், சித்தர்களெல்லாம் கண்ணுக்குத் தெரிவார்கள். போக முனிவர் கிருபையின்இவ்விஷ யங்களை யெல்லாம்புலிப்பாணியானநான்பாடினேன்(எ-று) (47)

பாடினே னின்னமொன்று சொல்லக்கேளு பண்பான காய சித்தி சுருக்குமெத்த ஆடினேன்மலைதோறு முண்டுவுண்டு அடை வான பொற்சிந்திக் கிழங்கு மைந்தா தேடியே யுண்ணநரைதிரை யுமாறுந் தெளிவானவயதாவும் பாலையாவாய் நாடியே போக ருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி சொன்னேன்பாரே.

(பொ-ரை) இன்னுமொன்று சொல்லுகிறேன் கேள்:—காய சித்தியின் சுருக்கை நான் மலைகள்தோறும் மிகவும் ஆடினேன். அதாவது:—பொற்சிந்தில் கிழங்கைத் தேடிப் பாலிலரைத்துச் சாப்பிட்டுக்கொண்டுவந்தால் நரை திரைகள் மாறும் பாலிய வய தாகக் கூடும். புலிப்பாணி போகர் கிருபையினால் சொன்னேன் (எ-று) (48)

ரசபற்பம்.

பாரப்பா ரசபற்பஞ் சொல்லக்கேளு பண்பான சுத்திசெய் து ரசத்தையப்பா சேரப்பா குழியம்மி தன்னிற்போட்டுச் சிறப் பான விடத்தலையினிலைதான்வாங்கிக் கூறப்பா வாயிலிட்டு மென் றுமென்று கூசாம லுமிழ்நீரைவிட்டுஆட்டு திரப்பா நால்சாமமரை த்தெடுத்துத் திறமாக பில்லைசெய்து ரவியிற்போடே.

(பொ-ரை) இனி ரச பற்பத்தை சொல்லுகிறேன் கேள்:— ரசத்தை வாங்கி சுத்தி செய்து கல்வத்தில் விட்டு விடதாரி இலை யைப் பறித்து மென்று வாயிலடக்கி உமிழ்நீரைவிட்டு மேற்படி ரசத்தை நான்கு சாமம் வரைக்கும் நன்றாயரைத்துப் பில்லை செய்து உலரப்போடு (எ-று) (49)

போடப்பா விடத்தலையைக் கவசங்கட்டிப் பொங்குமட்டோ ட்டில் வைத்துச் சீலைசெய்து சாடப்பா குக்குடத்தில் வெளுத் துப்போகுஞ்சார்வாக வதையெடுத்து வைத்துக்கொண்டு சடப் பட வியாதியென்ற குணத்துக்கெல்லா மிதமாகப் பணவிடைதா னென்றேயாகும் நாடப்பா பனையிலுட்கருப்புக்கட்டி நலமான பசுவின்வெண்ணை தேனுமாமே

(பொ-ரை) அப்படி உலர்த்தின பில்லைக்கு அந்தஇலையையே அரைத்துக் கவசங்கட்டி ஓட்டில் வைத்துச் சீலைசெய்து 10 எரு வில் புடம்போட்டால் வெளுத்துப்போகும் அதை எடுத்துவைத் துக்கொண்டு சகல வியாதிகளுக்கும் ஒரு பணவெடை வீதம்

பனை வெல்லத்திலாவது பசு வெண்ணெயிலாவது தேனிலாவது கொடுக்கவேண்டும் (எ-று) (50)

ஆமென்றே யாறுநாளிரண்டுவேளை அப்பனேகொண்டவுடனெரிவுகாணும் வாமென்ற வாவின்பால் நெய்யுமாகும் வளமான சீனியுடனிளநீராகும் தாமென்ற குளிர்நீர் வாருவாரு சயவாக விரஞ்சு மூவாறுக்கும் போமென்ற பத்தியந்தானீராய்ப்பா பொங்குமுடன் கொண்டபின்பு வியாதிபோமே.

(பொ-ரை) இவ்விதம் ஆறு நாள் இரண்டுவேளையும்கொண்டவுடன் எரிச்சலுண்டாகும் பசுநெய், பசும்பால், சீனி, இளநீர் குளிர்ந்தநீர் இவைகளை அதிகமாக உபயோகிக்கவேண்டும் பத்தியம் ஆறு நாளிருந்து காத்தால் சர்வ ரோகங்களும்போய் விடும் (எ-று) (51)

வசிய மூலிகை.

போமடா மூலியொன்று சொல்லக்கேளு. பொங்குமுடன் பிளகுசாரணையின் மூலம் ஆமடா வெள்ளியிலே காப்புக்கட்டி அடைவாகப் பொங்கலிட்டு பலிகொடுத்து தாமடா சத்தியில்தானடைத்துக்கொண்டு தயவாக வணங்கிடவே மணப்பாரு வாமடா பெண்களெல்லாம் வசியமாவார் வங்கபெண்கள் தானியங்கி மயங்குவாரே.

(பொ-ரை) இனி மூலிகையொன்று சொல்லுகிறேன் கேள். பிளகுச்சாரணையின் வேரை வெள்ளிக் கிழமையில் காப்புக்கட்டி பொங்கலிட்டு பலி கொடுத்து வைத்துக்கொள்ள சகல பெண்களும் வசியமாவார்கள் (எ-று) (52)

புருஷ வசியம்.

மயங்குவார் புருஷரெல்லாம் வசியமாவார் மைந்தனே யூமத்தை பொன்னாங்கண்ணி தியங்குவார் செம்முள்ளி சிவந்த கஞ்சா திரமான செங்குவளைப் பொன்னுவாரை கயங்குவார் புழுகுரசமையோடு கரியகோரோசனை புல்லாமணக்கு மயங்குமிம் மூலியெல்லாஞ் சாறுவாங்கி வளமாக சரக்கெல்லாம் விராகனென்றே.

(பொ-ரை) புருஷரும் வசியமாவார்கள், ஊமத்தை பொன்னாங்கண்ணி, செம்முள்ளி, செகப்பு கெஞ்சா, செங்குவளை, பொன்னுவாரை, புனுகுரசம், கருப்பு கோரோசனம், புல்லாமணக்கு

இவைகளி லெல்லாம் சாறு பிழிந்து அந்தச் சாறு வகைக்கு விராகனெடை ஒன்று (எ-று) (53)

ஒன்றாக மூலிசெந்நாயுருவிமூலம் உத்தமனே வகைவகைக்கு விராகன்சாறு நன்றாககுழியம்மி தன்னிலிட்டு பண்பாக மைபோலரைக்கும்போது நன்றாக கொம்புத்தேன்காராம்பசுவெண்ணெய் கருவென்ன . சிற்றண்டமுடைத்துவிட்டு நன்றாகச் சிமிழ் தனிலெடுத்துவைத்து நாயகியாள் திலதமிட வசியமாமே.

(பொ-ரை) செவப்பு நாயுருவிவேர், இதற்குஞ் சாறுவாங்கி அந்தச் சாறுகளையெல்லாம் கல்வத்தில் விட்டு மைபோலரைத்து கொம்புத்தேன், காராம்பசு வெண்ணெய், சிற்றண்டக்கரு இவைகளைவிட்டு நன்றாயரைத்துக் கலந்து டப்பியில்வைத்துக்கொண்டு பொட்டிட வசியமாகும். (எ-று) (54)

வசியமப்பா புருஷரெல்லாம் மயங்குவார்கள் வளமாகக் கேட்டதெல்லா மீவார்பாரு உசிதமாய்ச் சேர்ந்தோர்கள் பிரியார்பாரு உத்தமனே யவன்வாசல் காத்துநிற்பான் அசிதமாய் கண்டாக்கால் மயங்குவானே அழுதுநிற்பான் சிணுங்குவானேயோ வென்பான் உசிதமாயிருந்த பெண்ணும் ரதியேயாகும்திம்மை கண்டால் மோகிப்பாள் கண்டுபாரே.

(பொ-ரை) இவ்வசியத்தால் புருஷர்களும் மயங்குவார்கள் கேட்ட பொருள்களை யெல்லாம் கொடுப்பார்கள் கூடினவராற் பிரியமாட்டார் அவனுடைய வாசலைக் காவல்செய்து நிற்பார்கள் அவனைக்கண்டவுடன் பெண்ணானவள் மயங்கியழுவாள், மோகிப்பாள். (எ-று) (55)

பல்லு விழுதல்.

பாரடா உக்காளைப் பிடித்துவைத்து பாவென்ற சத்துருதம் பலத்தை வாங்கி சேரடா அதன்வாயிற் செலுத்திப்போடு செம்மையாய்க் கருகூட்டிப் பேரும் சாட்டி வீடா பாதையிலே தலைமையான விதமான தலைவாசல் தன்னில்தாக்குச் சிரட்டா மண்டலத்தில் பற்களெல்லாம் சிதறியே விழுந்துவிடும் திண்ணமதானே.

(பொ-ரை) ஓர் உக்காளைப் பிடித்துக் கொண்டுவந்து பகைவனுடைய பலத்தை வாங்கி அதின் வாயிற்செலுத்தி கருவைச்சேர்த்து, அவனுடைய பேரைச்சாட்டி தலைவாசல் வைத்து விட்டால் அவனுடைய பற்களெல்லாம் ஒரு மண்டலத்திற்குள் உதிர்ந்துபோகும். (எ-று) (56)

கண்கேடு செய்தல்.

தின்னமா யினொன்று சொல்லக்கேளு திறமான நீரட்டை யரசன்பாலும் வண்ணமாய்ச் சீலையிலே திரிய தாக்கி வஞ்சகமாய் சத்துருவின் விளக்கிற்போடு நன்னயமாய்த் திரியெரிய வெதிரிகண்ணும் நலமான திஷ்டியது மறைந்துபோகும் தின்னயமாய் நாலெட்டு அந்திகாலம் தீனவாகத்தானெரிக்க குருடுமாமே.

(பொ-ரை) இன்னுமொன்று சொல்லுகிறேன் கேள்:—நீரிலிருக்கும் அட்டை, அரசன்பால் இவைகளைச் சீலையில்வைத்துத் திரியாக்கி சத்துருவின் விளக்கில்போட அந்தத்திரி எரிந்தால் அவனுடைய கண்ணொளி குறைந்து குருடனாவான். (எ-று) (57)

வியாதியுண்டாகுதல்.

ஆமடா மூஞ்சூறைப் பையாய்வாங்கி யப்பனே எதிரிநீர் மலமிரண்டும் விடடா அதிற்செலுத்தப் பஞ்சுவெட்டும் விதமான நாற்பதிறு விருக்கிக்கட்டி தாமடா ஓம்நமோ பகவதிகாளி தய வாக யோகினீ சுவாகாவென்று வாமடா லட்சமுரு வோதச் சித்தி வளமாக புத்திகெட்டு வேதமாமே.

(பொ-ரை) மூஞ்சூறைப்பிடித்துப் பைபோலாக்கி அதில் எதிரியினுடைய மலத்தையும் நீரையும் அதிலேயிட்டு நன்றாய்க்கட்டி நாற்பதுநாள் வரைக்கும் ஓம் நமோ பகவதி காளி ஓம் சுவாகா: என்று லட்சமுரு ஜெபித்துவிட அவனுடைய புத்திகெட்டு வியாதி யுண்டாகும். (எ-று) (58)

ஓதவே யின்னமொன்று சொல்லக்கேளு ஒளிவானகருநாபி பச்சைநாபி வாதடா ஊர்தனிலே காற்றுவாட்ட வளமாகவெருவடக்கிப் புடத்தைப்போடு நாதடா புகைபட்ட மனிதரெல்லாம் நடுநடுங்கிக் காய்ச்சலாய் வியாதிகொள்வார்; ஆமடா அவ்வூரில் நீதான்சென்றே யவிழ்தத்தைத் தான்கொடுத்துத் தீர்ப்பேனென்னே.

(பொ-ரை) இன்னொன்று சொல்லுகிறேன் கேள்;— கருநாபி, பச்சைநாபி இவைகளை ஊர்தனில் காற்றுவாட்டமாக எருவடுக்கி புடம்போடு அப்பொழுது உண்டாகும் புகைபட்ட மனி

தர்களெல்லாம் சுரத்தால் வருந்துவார்கள். அப்பொழுது நீ அவ்வூரிற்போய் மருந்து கொடுத்துச் சொஸ்தப்படுத்துகிறேனென்று சொல்லுவாய். (எ-று) (59)

தீரப்பதற்கு நிலவேர் சிறுசிறை வேரும் திறமாக மிளகிட்டுக் கியாழம் வைத்து கார்ப்பதுதான் பஸ்பமொன்று விபூதி போட்டுக் கருவாகத் தான்கொடுக்க மூன்று வேளை சேர்ப்பதடா மூவிரண்டு மொருவர்காணச் செய்யாத பாஷாண மாற்றென்பார்கள் ஆர்ப்பாக சொன்ன பணங் கையில் வாங்கு அன்பாக வின்னமொன்று சொல்லக்கேளே.

(பொ-ரை) அந்தசுரத்தை நீக்க அவிரிவேர், சிறுகீரைவேர், மிளகு இவைகளைக் கஷாயஞ்செய்து அதில் கொஞ்சம் விபூதியை பற்பம் போடுவதுபோல் போட்டு மூன்றுவேளை கொடுக்கத் தீரும். யாவராவது பார்த்தால் பாஷாணத்திற்கு முறிப்பென்று சொல்லுவார்கள், ஆகையால் உடனே பணத்தை வாங்கிக் கொள்வாய். (எ-று) (60)

கேளப்பா கள்ளிச்சார் கார்த்திகையின்மூலங்கெணிதமுடன் பாஷாணத் துருசுசேர்த்து, பாளடா நேர்வாளங் கருந்தநாபி பண்பாக விவையெல்லா மிடித்துக்கொண்டு வீளடா கலசத்தில் சீலையிலேகட்டி விதமானகழுத்தளவு தண்ணீருக்குள் ஆளடா தெரியாமல் கல்லைக்கட்டி அடைவாக வுரைக்கிணற்றில் வைத்திடாயே.

(பொ-ரை) கள்ளிச்சாறு, கார்த்திகைக்கிழங்கு, பாஷாணம், மயில்துத்தம், நேர்வாளம், கருநாபி இவைகளை யெல்லாம் இடித்துக்கொண்டு ஒரு கலசத்தில் தண்ணீர்விட்டு அதில் சீலையில் முடிந்து கழுத்தளவு சலத்திற்குள் கல்கட்டி யாவருக்குந் தெரியாமல் உரை கிணற்றில் வைப்பாய். (எ-று) (61)

வைத்தவுட னீர்குடித்த பேர்களெல்லாம் வாந்தியும் பேதியுமா மயங்குவார்கள் செத்தவுட னவ்வூரில் நீபோய்ச்சென்று செயலான தேவதைக ளிருக்கவேண்டும் ஒத்தவுட னிருத்திவைப்போமென்றுள்ளாமே யுத்தமனே பொன்கொடுப்ப தின்னதென்று ...வதையெடுத் தெரிந்துபோடு நலமான கிணற்று நீரைக்க சொல்லே.

(பொ-ரை) அவ்விதம் செய்யப்பட்ட அந்த சலத்தைச் சாப்பிட்டவர்க ளெல்லாம் ரோகமும் நீங்கி பலவான்களாய் வருவார்கள் அப்பொழுது அங்குபோய் எதிர தேவதையிருக்கிறதென்றும் அதை யொழிக்க இவ்வளவு பணம்வேண்டுமென்றும் பேசிக்கொண்டு அதை யெடுத்துப்போட்டுவிட்டு அந்த ஜலத்தை இறைத்துவிடச் சொல்லவும். (எ-று) (62)

சொன்னபின் கனைதிக்கு வீடுதோறுஞ் சொருசாக அது குடுஞ் சலத்தையாரு மெல்லாமாமிலே பிடித்துக்கொண்டு நன்மாக கிணற்றி லிறையாமற்போமென்னபடி விபூதிகளை தியானித்தே தா னெல்லார்க்குங் கொடுக்கத் தெளிந்துபோகும் அன்னபடி யெல்லாம் பெயர்கவிட்டு அடையாளக் காய்வெட்டத் தீருமென்னே.

(பொ-ரை) பிறகு கிணற்றுக்கு அபிஷேகஞ் செய்து நீலி வேரை பிடுங்கி யாவரு முறைராவடி கிணற்றில்போட்டு விபூதியையும்போட்டு எல்லார்க்கும் விபூதிகொடுக்கத் தெளிந்துபோகும் அப்போது ஊராரெல்லாம் பொங்கலிட்டுத் தேங்காய் உடைத்தால் தீருமென்று சொல்லுது (எ-று) (63)

துரிசு சுன்னம்.

துருமே துரிசுக்குவிணையப்பிம் திரமானவொரு கட்டியாக் குனிவந்து நீருமே கல்வத்திற் சுன்னக்கல்லு விதமாக காற்கலசம் மூன்னேபோட்டு நீருமேசுட்டி தனை மேலேவைத்து நிச்சயமாய் காற்கலசங் கல்லைப்போட சீருமே பாஷாணமிதுச் சுத்தனவிச் சிறப்பாகத்தான் தெளிப்பாய் பெருகுதானே.

(பொ-ரை) பலிஸ்துருசைத்தை வேண்டியவரைக்கும் ஒருகட்டியாக எடுத்து ஒரு கலசத்தில் கல்சுண்ணாம்பு சேர்வாகிபோட்டு மத்தியில் துருசைவைத்து மேலும் கால்கலசம் சுண்ணாம்புக்கல் போட்டு பாஷாண சலத்தைக் கொஞ்சமாகத் தெளிப்பாய். (எ-று) (64)

தாவென்ற கலசத்திலேமேமூடி தயவாகமண்சீலை வலுவாய் செய்து தேவென்ற ரண்டுமுழக் குழியை வெட்டிச்சிறப்பான ஆவாரைலத்தி கழுதைலத்திபாமென்ற கொடிகள்ளி பயறுபோலே பண்பாகத் தொண்வைத்து மூன்றுமத்தே காவென்ற குழியாதி கலந்துகட்டி கனிவாக விருலத்திக் கலந்துவையே.

(பொ-ரை) பிறகு அந்தக் கலசத்தின்மேல் ஒரு ஓடுமூடி சீலைமண் வலிவாகச்செய்து ஒரு ஸ்தலத்தில் 2-முழம் ஆழமிருக்கும் ஒரு குழியை வெட்டி அதில் ஆவாரைலத்தி, கழுதைலத்தி, கொடிக் கள்ளி இவைகளை நன்றாய்ப் பொடியாக்கி மூன்றையும் ஒன்றாய்க் கலந்து அந்தக் குழியில் கொட்டிவை. (எ-று) (65)

வையப்பா கலசத்தை யதின்மேலே நிலைசையாக விருலத்தி கலந்துகொண்டு செய்யப்பா கள்ளியுடன் கத்திலத்தி சிறப்பாகக் குழிநிறைய கொட்டிப்போடு மையப்பா மண்போடு மூட்டிப்போடு பண்பான மண்டலந்தான் கழிந்தபின்பு கையப்பா வெடுத்ததனைத் திறந்து நீதான் கருவாகக் காற்றில்லாவிடத்தில் வைத்தே.

(பொ-ரை) அதின்மேல் கலசத்தை வைத்து மேலேயும் அத் தலத்தி கலந்திருப்பதைப்போட்டு குழியை நிரப்பி மண்ணால் மூட்டிப்போட்டு ஒரு மண்டலம் அப்படியே வைத்திருந்து பிறகு அதை யெடுத்துத் திறந்து காற்றில்லாத விடத்தில் வை. (எ-று) ()

வைத்தகட்டி தனையெடுத்துப் புதுச்சுன்னக் கல்லைமாகப் பாஷாணச் சாறுவிட்டாட்டிச் செந்தபின் பதை யெடுத்துத் திறமாய் மூடிச் செம்மையா மண்சீலை வலுவாய்ச் செய்து வைத்த பின்பு குக்குடத்திற் சுன்னமாகும் பண்பான வதையெடுத்து பவளம் வாங்கி வைத்தபின்பு பீங்கானில் வைத்தமைந்து நாயகனே காற்றுடா விடத்தில் வையே.

(பொ-ரை) அப்படி வைக்கப்பட்ட கட்டியை யெடுத்து சுண்ணாக் கல்லையும் பாஷாணத்தையும் பழச்சாறு விட்டரைத்து அதனால் கவசஞ்செய்து பிறகு சீலை மண்செய்து 10 எருவில் புடம் போட்டெடுத்தால் சுண்ணமாகும். அதை யெடுத்து ஒரு பீங்கானில்வைத்து காற்றில்லாவிடத்தில்வைப்பாய் (எ-று) (67)

வைத்தபின் னெடுத்துப்பார் துருசுசுன்னம் வகையாகப் பொருமியது சுண்ணாம்பாகுஞ் செந்த பின்பு சரக்கெல்லாமித னால் நீரும் செயமாகுமிச் சுன்னம் ரசத்திற்போடு வைத்தபின்பு யுமிநீரால் மத்தித்தே தான் கலமாக ரவியில்வைக்க இறுகும்பாரு உய்த்து நீயுருக்கிடவே வெள்ளியாகும் உற்றமுறைத் தப்பாது கண்டுபாரே.

(பொ-ரை) அப்படி வைத்த பிறகு எடுத்துப் பார்த்தால் துருசி சுன்னமானது சுண்ணாம்பைப்போல நீற்றிருக்கும் இத

ஞல் மற்ற சரக்குகளெல்லாம் நீறும், இவ்விதம் ஜெயமடைந்த இந்தச் சுண்ணத்தை ரசத்தில் [illegible] உமிநீரால் அரைத்து பில்லைதட்டி வெயிலில் வைக்க ரசங் கட்டும். அதை யுருக்கிப்பார்க்க வெள்ளியாகும். இந்த முறையானது தவறாதாகையால் செய்துபார் (எ-று) (68)

வீரச்சுன்னம்.

பாரப்பாசாரமிட்டு வீரமோடு பண்பாகக்காரமிட்டு பூரங்கூட்டுச் சேரப்பா துரிசுசுண்ணஞ் ஜெயநீர்தானுஞ் சிறப்பாகச் சரக்குகளை யரைத்துப்போடு வீரப்பாசரக்குகளுஞ் சுண்ணமாகும் விதமான சரக்குகளுஞ் செந்தூரிக்குந் தீரப்பா தனித்தனியே வேதையாகும் திறமான ஜெயநீரின் செய்கைதானே.

(பொ-ரை) வீரம், காரம், சாரம், பூரம் இவைகளைக் கூட்டி துரிசு சுண்ண ஜெயநீரா லரைத்துப் போட்டால் சரக்குகளெல்லாம் சுண்ணமாகும். இப்படியான சரக்குகளெல்லாம் செந்தூரஞ் செய்யலாகும். அந்த தனித்தனி சரக்குகளால் ரசவேதையாகும். இவ்வளவும் ஜெயநீரின் செய்கையேயாகும் (எ-று) (69)

தானென்ற வீரத்தைக் கல்வத்திட்டுத் தயவாக விலைகள்ளி யிலைச்சார்விட்டு கானென்றே யரைத்தவுடன் முசுறுமுட்டை கனிவாகத் தான்பிழிந் தரைத்துப்போடு கோவென்ற வில்லைதட்டி யுலரும்போது கொடிதான சிற்றண்டங் கருவான மஞ்சள் தேனென்ற கருத்தடவி காயவைத்துத் திறமானகள்ளியுட சாம்பலாமே.

(பொ-ரை) போதுமான அளவு வீரத்தைக் கல்வத்திட்டு அதை இலைக்கள்ளி யிலைச்சாற்றாலரைத்து பிறகு முசுறு முட்டையை பிழிந்து அதனாலரைத்து பில்லை தட்டி அது உலரும்போது கோழிமுட்டையின் மஞ்சள் கருவை அதில் தடவி காயவைத்து வல்லமையுள்ள கள்ளியைச் சாம்பல் செய்வாய் (எ-று) (70)

வாரடா வைத்தெரிக்கும் வகையைக்கேளு வளமான நல்ல கைதானி ரண்டாம்பாரு சீரடா கமலம்போலெரிக்கச் சுண்ணஞ் செயமாக வாறவிட்டெடுத்துக்கொண்டு பாரடா ரசஞ்சேர்த்தே யுருக்கவெள்ளிப் பண்பான சரக்கெல்லாம் பஸ்பமாகுஞ் சீரடா முப்பூவைச் சேர்த்துக்கொள்ளத் திறமான நவலோகம் தேவையாமே.

(பொ-ரை) அந்தக் கள்ளிச் சாம்பலைக் கரைத்து அதில் வார்த்து இரண்டு நாழிகை வரைக்குங் கமலாக்கினியாக எரிக்க [illegible] சுண்ணமாகும். அதை யாறினவுடனே எடுத்துக்கொண்டு அத்துடன் ரசத்தைச் சேர்த்து யுருக்கினால் வெள்ளியாகும், இதனால் சரக்குகளெல்லாம் பஸ்பமாகும். அத்துடன் முப்பூவைச் சேர்த்துக்கொண்டால் நவலோக வேதையாகும் (எ-று) (71)

வங்க வெட்டை.

ஆமடா வுருவியுப்பு மேனியுப்பு அடைவான வுமிநீர் தன்னாலாட்டி தாமடா கருவங்கக்கட்டிக்குப்பா தயவாகக் கவசமிட்டு மண்சீலைசெய்து வாமடா குக்குடத்தில் வங்கவெட்டை வுளமாகத் தங்கமொன்று வங்கமொன்று காமடா வுருக்கியதை பின்னும் பாரு கருவாக செம்பொன்று வெள்ளிமூன்றே.

(பொ-ரை) நாயுருவி உப்பு, குப்பைமேனி உப்பு, இவைகளை சமபாகமாக எடுத்து உமிநீரால் அரைத்து கருவங்ககட்டிக்குப் பூசி சீலை மண் செய்து 10 எருவில் புடம் போட வங்கம் வெட்டையாகும், அந்த வெட்டை யொரு எடை, தங்கம் ஒரு எடை சேர்த்து உருக்கி மறுபடியும் செம்பொன்று வெள்ளி மூன்றும் (எ-று) (72)

மூன்றுடனே தங்கமொன்று தகடுதட்டி மூன்குருவில் விராகனிடை யிதிலே சேர்த்து என்றநீ கொடுத்திடவே மாற்றேழாகு மிதமாகச் செந்தூரம் செய்தாற்கேளு நான்ற தோர்நவலோக வேதையாகும் நாலாறு மாற்றுகுஞ் கண்டுபாருவான்றெழுஞ் சீர்ப்போ கருடைக்கடாட்சத்தாலே வழுத்தினேன் புலிப்பாணிவிளங்கத்தானே.

(பொ-ரை) அவைகளுடன் தங்கம் ஒன்றும் கூட்டி மூன் குருவில் ஒரு விராகனெடை அதில் சேர்த்து உருக்கு முகத்தில் கொடுக்க ஏழு மாற்றாகும், இதை செந்தூரம் செய்தால் நவலோகங்களையும் வேதிக்கலாம். அப்படி வேதிக்கும் நவலோக வேதையானது 10 மாற்று காணும் போகருடைய கடாட்சத்தாலே சொன்னேன் (எ-று) (73)

விளங்கவேசிப்பியின் சுண்ணந் தன்னில் விதமானவெண்காரம் வைத்தெரித்து துளங்கவே யதையெடுத்து மிநீராலே சுதமா

கத் தானவைத்துக் காரியத்திற் புனுங்கவே கவசமிட்டுச் சிப்பிசு ண்ணம் புகுமுடனே கீழ்மேலும் வைத்துமூடி அளங்கவே போட்டில் வைத்துச்சீலைசெய்து அடைவாகப்புடமிரண்டில் வெட்டையாமே

(பொ-ரை) சிப்பிச் சுண்ணத்தில் வெங்காரம் சேர்த்து எரித்து அதை எடுத்து உமிழ்நீரில் அரைத்து காரியத்திற்குக் கவசமிட்டுச் சிப்பிச் சுண்ணத்தைக் கீழுமேலும் வைத்து நடுவில் இதை வைத்து ஒரு ஓடு மூடி. மண்சீலை செய்து இரண்டுபுடம் போடக் காரியம் வெட்டையாகும்.(எ-று) (74)

ஆமப்பா நாழிகைதானிரண்டாம்பாரு அடைவாக முன்வெட்டைப் படியேசெய்தீ வாமப்பாவங்க வெட்டைதங்க வெட்டை ளமான லிங்கத்தின் கட்டுச்சேர்த்து தாமப்பாரசங்கெந்தி கூட்டியேதான் தயவாகச் செந்தூரஞ் செய்துபாரு ஈமப்பா வென்னசொல்வேனம்வேதைமார்க்கம் நவலோகமெல்லாமுந்தங்கமாமே

(பொ-ரை) இவ்விதம்செய்ய இரண்டுநாழிகை நேரமாகும் ஆகையால் முன்செய்த வெட்டையைப் போலவே செய்த வங்க வெட்டை, தங்கவெட்டை, லிங்கக்கட்டு இவைகளைச் சேர்த்து அதில் ரசம், கந்தகம் இவைகளைச் சேர்த்து செந்தூரஞ் செய்து பார் இதனால் நவலோக மெல்லாம் தங்கமாம், (எ-று) (75)

சாரக்கட்டு.

தங்கவேதிருகுகள்ளிச் சாம்பல்வாங்கித்தயவாகவீரேழுபலந் தானப்பா பங்கமிலாச்சிப்பி சுண்ணமீரேழாகும் பாங்கானவெடியுப்பு மீரேழாகும் அங்கமாய்ச் சாம்பலது கீழுகு மடவான் சிப்பியது கீழேயாகும் சங்கமாயுப்பதுவுங்கீழேயாகுஞ் சார்வாக வடுக்கடுக் காயுநன்னவையே,

(பொ-ரை) திருகுகள்ளிச் சாம்பல் பதினான்குபலம் சிப்பிச் சுண்ணம் பதினான்குபலம் வெடியுப்பு பதினான்குபலம் இவைகளில் சாம்பல் முதலியவைகளை முதல்சாம்பலைக் கீழாகவும் அதன்மேல் சிப்பியையும் அதன்மேல் உப்பையும் அடுக்கடுக்காக வைக்கவேண்டும். (எ-று) (76)

வ்வப்பா சாரமது பலந்தான் ரெண்டு வளமாக வுப்பிட்டு முன்போல் வைத்து மையாகவே மண்சீலை யேழுஞ்செய்து பாங்கான தீபமொரு சாமமப்பா கையவே கமலமது சாமமொன்று

கருதரிய காடாக்கினி சாமம் ரெண்டு உயர்வே யாறவிட் டெடுத்துப்பாரு உத்தமனே தந்தம்போற் கட்டுந்தானே,

(பொ-ரை) நவாச்சாரம் இரண்டுபலம் எடுத்து உப்புசேர்த்து முன்போலவே வைத்து ஏழுமண் சீலைசெய்து ஒருசாமம் வரைக்கும் தீபாக்கினியாகவும், கமலாக்கினி ஒருசாமமும் காடாக்கினி இரண்டு சாமமுமாக எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் தந்தத்தைப்போல் உருகிக்கட்டும்.(எ-று) (77)

தானடா நாகமது [illegible] தப்பாக உருகையிலே சாமம்ரண்டு வேனடா கொடுத்திடவே நாகங்கட்டும் விதமாக செம்பிலே பத்துக்கொன்று கோனடா வய்தனுவு மெட்டுதாகுங் குணமாக ரசகெந்தி [illegible] மைந்தா மானடா செந்தூரஞ் செய்தாயானால் [illegible] வலோகம் வேதையாமே.

(பொ-ரை) நாகம் உருகும்போது இரண்டு [illegible] முன்சொன்னதை நிராசங்கொடுக்க நாகமானது கட்டும், அதை செம்பு பத்துக்கொன்று கொடுக்க வயதுஎட்டாகும், அதில் ரசமும் கந்தகமும் சேர்த்து செந்தூரஞ் செய்தால் நவலோகங்களும் வேதிக்கலாகும்.(எ-று) (78)

சிறுகண்ணுகச் செந்தூரம்.

வேதையிலே யின்னமொரு போக்கைக்கேளு சிறியவெணுங் கண்ணுகமப்பா பேதையிலே கருவங்க ரசமுங்கூடப் பொங்கமுடன் வரியப்பா லிந்தாரமும் ஆதையிலே சமனிடையாய்க் கூட்டிநீ மன்பாகப் பனங்கள்ளிற் சாமம்நாலு நிதையிலே பொற்கை யான் சாமம்நாலு திறல்மயுடன் தானரைத்து வில்லைதட்டே,

(பொ-ரை) சிறுகண்ணுகம், வங்கம், ரசம் நெரி இந்நான்கு சரக்குகளையும் சம எடையாக எடுத்து பனங்கள்ளினால் நான்குசாமமும் கரிசலாங்கண்ணிச் சாற்றினால் நான்குசாமமும் அரைத்து வில்லைதட்டு. (எ-று) (79)

தட்டியே யுலர்த்தபின் போடுமூடி தயவாகச் சீலைசெய்து குக்குடத்திற் போடு தட்டியே யாறவிட் டெடுத்துப் பாருகனிந்த மிலைச் செந்தூரமென்னசொல்வேன் தொட்டிநீ செம்பதுவும் எழுங்கட்டித் தொழுதுவெள்ளி பதுவுந்தான் மூன்றதாகுஞ் சட்டமாய் நாரீட்டறுன் கூடுமென்று சார்வாகக் கொடுத்தவுடன் வேதையாமே.

(பொ-ரை) அப்படி தட்டின பில்லையானது உலர்ந்தபின்பு ஒரு அகலில்வைத்து மேலோடு மூடி மண்சீலைசெய்து பத்தெருவில் புடம்போடச் செந்தூரமாகும் அதுவொன்றும் செம்புஏழும் வெள்ளிமூன்றுஞ் சேர்க்கவேணுதயாகும். (எ-று) (80)

தாளக பற்பம்.

ஆகுமே தாளகத்தைச் சுண்ணக்கல்லில் அப்பனே யமுரி விட்டுச் சுத்தியேழு வாகுமே தும்பையிலைச் சாறு படியொன்று வளமான சுருக்கிட்டு கட்டியொன்றாய் தாகுமே சாவல்ரத்த மிதக்கவிட்டுத் தயவாக ரவிதனிலே காயக்காய லாகுமே ரத்தமெல்லாங் கட்டியிற் றுவட்டி நலமாகக் காயவைத் தோடுமூடே.

(பொ-ரை) தாளகத்தைச் சுண்ணாம்புக் கல்லில் அமுரிவிட்டு ஏழுமுறை சுத்திசெய்து தும்பையிலைச்சாறு படி ஒன்று அந்தத் தாளகத்திற்குச் சுருக்கு கொடுத்து அந்தக்கட்டிக் குச்சாவல் ரத்தம் மிதக்கவிட்டு வெயிலில் காயவைத்து ரத்தத்தை யெல்லாம் கட்டியில் துவட்டி நன்றாய்க் காயவைத்து மேலோடுமூடு. (எ-று) (81)

மூடியே மண்சீலை வலுவாய்ச் செய்து முழப்புடத்திற் பஸ்பமாயிருக்கும்பாரு வாடியே க்ஷயமெட்டும் விஷபாகங்கள் வளமான சோகையொடு பித்தபாண்டு ஆடியே காய்ச்சலென்றவைகளெல்லாம் அப்பனே யெலிகடியும் பிரமைதீரும் காடியே போகருட கடாக்ஷத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) அவ்விதம் மூடி சீலைமண்ணை வலிவாச்செய்து முழப்புடம்போட அதுபஸ்பமா யிருக்கும் அதனால் எட்டுக்ஷயமும் விஷபாகங்கள் சோகை பித்தபாண்டு, சுரங்கள், எலிக்கடி, மயக்கம்,இவைகள் தீரும்.(எ-று). (82)

சிலாசத்து பற்பம்.

பாடினேன் நாயுருவி யிலையையாட்டிப் பண்பான சிலாசத்துக் கவசங்கட்டி நாடியே சீலைசெய்து புடத்தைப்போடு நாயகனே பற்பமா யிருக்கும் பாரு ஆடியே நிச்சயமா யிந்தபற்பம் அடைவாகப் பாலையுட கிழங்குநீரில் காடியே வெடியுப்பு விராகனென்று சார்வாகப் பற்பமொன்று கொடுக்கப்போமே,

(பொ-ரை) நாயுருவியிலையை யரைத்து சிலாசத்துக்குக் கவசஞ்செய்து மண்சீலைசுற்றி புடம்போடப் பற்பமாகும். அந்தப் பற்பத்தை பாலைக்கிழங்கினீரில் வெடியுப்பை வராகனொன்று நிறுத்துப்போட்டுப் பற்பமொன்று கொடுக்கவேண்டும், (எ-று) ()

போமப்பா செம்பாலை யரைத்துமைந்தா பொங்கமுடன் வெடியுப்பை யதனில்விட்டு ஆமப்பா வெள்வங்கம் வேணமட்டும் அன்பாக உருக்கியொரு கட்டிவைத் தாமப்பா ஓட்டில்வைத் தெருவடுக்கித் தயவாக கெஜபுடத்திற் பற்பமாகும் வேமப்பா மேகமது இருபத்தொன்றும் விதமாகப் பணவெடைதான் வெண்ணெயாமே,

(பொ-ரை) செம்பாலையை யரைத்து வெடியுப்பை அதினிவிட்டு வெள்வங்கம் வேண்டியவுரைக்கும் உருக்கி ஒரு கட்டிவைத்து அதை ஓட்டில்வைத்து எருவடுக்கிக் கஜபுடத்திற் போடப் பற்பமாகும். இதை ஒரு பணவெடை வெண்ணெயில் தின்ன இருபத்தொரு மேகங்களும் நிவிர்த்தியாகும். (எ-று) (8)

லோக வசியம்.

ஆமையா ரீம்ஐயுங் கிலியுமென்றே அடைவாக ஸ்திரீயுடனே சவ்வுங் கூட்டித் தாமையா இறீம்கிலீம் ஓமென்று சொல்லித் தான்செபிக்க லக்ஷத்திற் சித்தியாகும் வாமையா வறுமையெல்லா மகன்றுபோகும் வளமான தேவதையு மன்னர்தாமும் நாமையா லோகமெல்லாம் வசியமாகும் நலமாகத் தொழில்களெல்லாம் சித்திதானே,

(பொ-ரை) ரீம், ஐயும், கிலியும், ஸ்ரீம், சவ்வும், இறீம், கிலீம், ஓம் என்று சொல்லி ஒரு லட்ச உருசெபிக்க அம்மந்திரம் சித்தியாய் தரித்திர மெல்லாம் ஒழிந்துபோகும். இதனால் யாவரும் வசியமாவார்கள். சர்வகாரியங்களும் சித்தியாகும். (எ-று) (85)

அஷ்ட கர்மம்.

தானென்ற தலைமஞ்சள் கொடியுமாகத் தயவாகத் தான்பூசியுலரப்போட்டு ஊனென்ற முப்பூவும் ரவிப்பிரியின் பீஜம் உத்தமனே யுடன்கூட்டித் தயிலம் வாங்கி ஆனென்ற அஷ்டகர்மமெட்டெட்டுக்கும் அடைவான தொழில்முறைக்கு மெல்லாமாகும் நானென்ற போகருட கடாட்சத்தாலே நலமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) தலைமஞ்சம், கொடியும், மாவும், பூசி உலர வைத்து முப்பூ, ரவிபீசம், மதிபீசம், இவைகளைச்சேர்த்து இறீம் கிலீம், ஓம் என்று சொல்லி லட்சம் உரு ஜெபிக்க சித்தியாகும். இந்த மந்திரம் அஷ்டகர்மம் சர்வதொழில்கள் எல்லாவற்றிற்கும் உபயோகமாகும். (எ-று) (86)

பாடினேன் சிவகிரியின் தண்டாயுதபாணி பாருலகிற் பூசித்தோர் சொல்லக்கேளு. ஆடினேன் பிரமாவு மீசனப்பா அடைவான போகருட கிருபையப்பா நாடினேன் கலியுகத்தி லிருநூற்றைந்தில் நாயகனே புலிப்பாணி பூசித்தேனப்பார் நீடினேன் பூசைமடந்தன்னில் வாழ்ந்து நிலைபெற்றேன் போகருட வருள் பெற்றேனே.

சிவமலையில் தண்டாயுதபாணியா னவனைப் பூசித்தவர்களே! நான் சொல்லுவதைக் கேளுங்கள்:—பிரமர், ஈசன், போகர் இவர்களுடைய கிருபையினால் நான் அந்த ஆட்டங்களை யெல்லாம் ஆடினேன் கலியுகம் இருநூற்றைந்தாவது ஆண்டில் புலிப்பாணி யான நான் பூசை செய்தேன். அப்பொழுதே பூசைமடத்தில் வாழ்ந்து உண்மைநிலையை யடைந்தேன் போகருடைய கிருபையையும் பெற்றேன். (எ-று) (87)

அருளாலே பிரமனுட வழியைத் தள்ளி அடைவாக நாமிருந்தோங் கிரியில் வாழ்ந்து பொருளாலே சட்கோணத் தாலயமுங் கட்டி நெறிவிளங்க ஆண்டவனை நேசித்தேன்பார். பொருளாலே வெகுகோடி சித்தி செய்து பூசைமடந் தன்னில்வந்து போகநாதர் மருளாலே யாவரையு மயக்கியாட்டி மதிமயக்கஞ் செய்யுமென்றார் வேறிலன்றே.

(பொ-ரை) பிரமதேவனுடைய செய்கைகளை நீக்கிக்கொண்டு மலையில் வாழ்ந்துகொண்டிருந்தோம். ஆறுகோணத்தால் கோவில்கட்டி ஆண்டவனைத் தெரிசித்தோம் வெகுகோடி சித்திகளைச்செய்து யாவரையும் மயங்கச்செய்து போகநாதருடைய கிருபையால் ஆடினோம் (எ-று) (88)

மூட மாக்குதல்.

வேலாலே யின்னமொரு தொழிலைக்கேளு விறமான கிரணமது நின்றபோது காலான வெட்டிமரங் காப்புகட்டிக் கரு

வர்க்குத் தூபமிட்டு வேரை வாங்கி ஆலான நாகமது விடும்போதப்பா, அடைவாக வேறொன்று வாங்கிவைநீ சேலான மற்றவேருருப்போற் செய்து செவ்வையா யுருத்துவாரம் போடே.

(பொ-ரை) கிராணமுண்டாகின்ற சமயத்தில் எட்டிமரத்துக்கு காப்புகட்டி தூபதீபங்கொடுத்து அதின்வேரை எடுத்து நாகம்விடும்போது ஒருவேரை எடுத்துவை, மற்றவேரை உருவபோல்செய்து உருத்துவாரஞ்செய் (எ-று) (89)

போடப்பா விடுவேரை முளைபோற் சீவிப் பொங்கமுடன் பாவையு முளையுங்கொண்டு ஆட்டப்பர் வாசலது வெள்ளையாக அடைவாக நீருகே யென்றுநின்று சாடப்பா வாசலது மேட்டிற்கட்டிச் சார்வாகத் தண்ணீரிற் கழுத்துமட்டும் நாட்டப்பா ஆதாரமது செய்விப்பாய் லகுடங்கலழாக முடித்தவுடன் சாவல் சாமே.

(பொ-ரை) அந்தவேரின முளையைப்போற் சீவி விளக்கமுடன் பாவையும் முளையையும் எடுத்துக்கொண்டு வாசலுக்குச் சமீபம்சென்று, தண்ணீரில் கழுத்துவரைக்கும் முழுக்கி தெப்பல்போல் வைத்திருந்தால் சாவலானது சாவும் (எ-று) (90)

சாகுமே செபிக்குமட்டும் பாவைதன்னைச் சார்பாகக் கைவைத்து செபத்தைசெய்நீ சேருமே செதுக்குமுளை கூறதாகத் திரமான வெதிரியுடகருவைக்கூட்டி ஆகுமே துவாரமெல்லா முளையோட்ட அடைவாகக் குற்றலாய் முடமாய்ப் போவானு நாகுமேசத்துருவும் வணங்கிவிட்டால் நாயகனே முளைபிடுங்கி நீராலாட்டே.

(பொ-ரை) அந்த தட்டுக்கள் செபிக்கின்றவரைக்கும் பாவையில் வைத்துக்கொண்டு செபஞ்செய்யவேண்டும் முன்னர் செதுக்கிவைத்த முளையைக் கூறாக்கி எதிரியின் கடவுளைச் சேர்த்து துவாரத்திலெல்லாம் அந்த முளையை நாட்டமூடமாய்ப் போவான் பிறகு பகைவனானவன் வணங்கினதால் முளைபிடுங்கிச் சுத்தஞ்செய்துவிடவேண்டும் (எ-று) (91)

கூடன்சுண்ணம்.

ஆட்டப்பா சிப்பியுட சுண்ணந்தன்னி லடைவாகக் கூடமொரு கட்டிவைத்து நாட்டடாமேலுமிந்தச் சுண்ணம்போடு நலமாக

சட்டிவாய் சீலைசெய்து கூட்டடா கமலமது காலுசாமம் குணமாக வெரித்தவுடன் சுண்ணமாகும் வாட்டடா பிந்த சுண்ணஞ்சேற்றிற் போட வலமானசுத்த சடலத்தின் மேலாமே.

(பொ-ரை) சிப்பிச் சுண்ணத்தில் கர்ப்பூரம் ஒரு கட்டிவைத்து அதற்கு மேலும் இச்சுண்ணத்தைப்போட்டு சட்டிமூடி சீலை செய்து கமலாக்கினியாக 4-சாமமும் எரித்தவுடன் சுண்ணமாகும் இந்தச் சுண்ணத்தைச் சேற்றில்போட சுத்த சலமாகும் (எ-று) (92)

கெந்தகநீர்.

ஆகுமே கெந்தகந்தான் பலந்தானைந்து அடைவான குழியம்பிதன் னிற்போட்டு சாருமே யெருக்கிலையின் பாலுப்பின்சாறு தயவாகத்தான் பிழிந்து ஜாமம் நாலுவாகுமே வந்துமட்டு மரைத்து மைந்தா வளமான வம்மியினில் தானேவைத்து நாகுமேயுதயத்திற் பார்க்கும்போது நலமாகச் சலமதுவாயிருக்கும்பாரே.

(பொ-ரை) கந்தகம் 5-பலம் கல்வத்திலிட்டு எருக்கம்பருப்பு சாற்றால் நான்குஜாம மரைத்துப் பனியில்வைத்து காலையில் பார்த்தால் சலமாயிருக்கும் (எ-று) (93)

பாரப்பாசலந்தன்னைப் பதனம்பண்ணு பக்குவமாயிம்முறையை பார்க்கும்போது வீரப்பாராக்காலம் வைத்துப்பார்க்க விதமானசலமதிலே யிருக்கும்பாரு நீரப்பா வரைத்தரைத்துச் சலத்தைவாங்கிச் சிவசிவா குப்பியிலே யடைத்துக்கொண்டு சாரப்பா லிங்கத்திற்சுருக்குப்போடத் தயவாகக்கட்டியது வலுத்துப்போமே.

(பொ-ரை) அந்தச் சலத்தை எடுத்துவைத்துக்கொண்டு அந்தச் சலத்தை லிங்கத்திற்குச் சுருக்குகொடுக்க லிங்கம்கட்டி வலிவாகும் (எ-று) (94)

போமேநீயரைத்த கெந்தி தனைவழித்துப் பொங்கமுடன்பீங்கானில்ரவியில் வைத்துத் தீமேநீவெயிற்பட்டுத் தயிலமுண்டாந்திரமாகச் சுருக்கிட சரக்கெல்லாங்கட்டும் தாமேநீரசத்துக்குத் தாக்கில்மைந்தா யவுடனே சமமாகக்கரமுங்கட்டும் நாமேநீ போகருடகாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இப்படி யரைத்த கந்தகத்தை பீங்கானிலிட்டு வெய்யிலில் வைக்க தயிலமிறங்கும் அந்தத் தயிலத்தால் சுருக்குக்

கொடுக்க எல்லாச் சரக்குகளுங் கட்டும். இதனால் ரசமும் கட்டும் (எ-று) (95)

பாடினேன் ஜாலமது தொண்ணூற்றாறு பண்பாக வைத்தியந்தானைந்நூறும் ஆடினேன் சோதிடந்தான் முந்நூறும் அடைவாகவாடையதின்கூடச் சொன்னேன் கூடினேன் சண்முகத்தின் பூசைமார்க்கம் குணமாகமுப்பதிலே கூறினேன்பார் நாடினேன் மதனநூல்கிருபையாலே நலமான நூற்றிரண்டும் பாடிமாச்சே.

(பொ-ரை) ஜாலம் தொண்ணூற்றாறும் வைத்தியம் ஐந்நூறும், சோதிடம் முந்நூறும் வாடைவித்தை அவைகளோடுகூடச் சொன்னேன். முருகர்பூசை விதி முப்பதில் சொன்னேன். மதனநூல் நூற்றைம்பதும் சொன்னேன். (எ-று) (96)

ஆச்சப்பாபலதிரட்டு நூறுமாக அடைவான சிமிழ்வித்தை யிருபத்தஞ்சு வீச்சப்பாஜாலவித்தை யிருநூற்றுள்ளே விரும்பினாற் கண்ணாடி முகமுமாகும் பேச்சப்பா சாஸ்திரத்தைப் பேணிப்பாரு பேதமில்லைபேதமில்லை நூல்களியாவும் வாச்சப்பாபோகருட கடாக்ஷத்தாலே வளமாகப் புலிப்பாணிவிளம்பினேனே.

(பொ-ரை) பலதிரட்டுநூறு, சிமிள்வித்தை இருபத்தைந்து, ஜாலவித்தை இருநூறு, இவைகளைச் சொன்னேன், கண்ணாடி போல் தோன்றுவதாகும். இந்தச் சாஸ்திரங்களை யெல்லாம் பார். இந்த நூல்களை யெல்லாம் போகருடைய கடாட்சத்தால் சொன்னேன். (எ-று) (97)

வீரலேரசம்.

விளம்பினேன் ரசம்வாங்கி குகையில் வாரு விதமானகுகையதுவும் பறங்கிப் பூப்போற் சளம்பினேன் சாணத்தை வைத்துமூடில் தானுமே ரசமேறுஞ் சாணிக்குள்ளே குளம்பியே சாணத்தை சலத்திற்போட்டுக் குணமாகக் கரைத்தெடுக்க ரசமுமாகும் இளம்பியே வாலைரசம் போலேயாகும் கிருபையுள்ள பழமுதலனைத்துமாமே.

(பொ-ரை) ரசத்தை ஒரு மூசையிலிட்டு சாணம் வைத்து மூடில் ரசமானது சாணிக்குள் ஏறும் அந்தச் சாணத்தைச் சலத்

தில் போட்டுக் கரைத்தெடுக்க ரசம் வெளிப்பட்டு வாலைரசம்போ லாகும் பற்பம் முதலியவற்றிற்காகும் (எ-று) (98)

ஆமப்பா சாஸ்திரத்தை வெளிவிடாதே அவையடக்கம் வெகுபதனம் ஐயா வையா வாமப்பா காமிகட்குக் காட்டொ ணாது வஞ்சகர்க்கும் பொல்லார்க்குஞ் சொல்லொணாதாமப்பா தந்தைதாய் குருக்களானோர் தயவாக மாதரொடு சிசுக்களென் னும் நாமப்பா இவர்களையே கொலைகள் செய்தோர் நாசமாய் நரகத்தி லழுந்துவாரே.

(பொ-ரை) ஆகையால் இந்தச் சாஸ்திரத்தை வெளியில் விடாதே வெகுபதனமா யிருக்கவேண்டும் காமிகளுக்கு காட் டக்கூடாது. வஞ்சகர்க்கும், கெட்டவர்களுக்கும் சொல்லக்கூ டாது. பஞ்சமாபாதகஞ் செய்தோர் முதலியவர்களுக்கும் கொ டுக்கக்கூடாது. (எ-று) (99)

அழுந்தியே சாஸ்திரத்தை நிஜமென்றெண்ணி யடைவான பெரியோரை வணங்கிக் காரு நழுந்தியே பொய்யொன்றுஞ் சொல்லொணாது நரகினுக்கே யானாகா திருப்பாயாகிற் கொழுந் தபோ வுள்ளொளியை நோக்கிப்பாரு கோபமொன் றுமாகாது. குணமேவேணும் செழுந்தருவாய் போகருட கடாட்சத்தாலே, சிறந்த புலிப்பாணி பலதிரட்டு முற்றே.

(பொ-ரை) சாஸ்திரம் உண்மையாமென்று எண்ணி பெரி யோர்களை வணங்கிக் காத்து பொய்யை யொன்று சொல்லாமலிரு க்கவேண்டும். உள்ளொளியை நோக்கிப்பார், கோபம் வேண் டாம் குணத்தைக் கைப்பற்று போகருடைய கிருபையினால் புலி ப்பாணி பாடினேன். (எ-று) (100)

புலிப்பாணி பலதிரட்டு முற்றிற்று.

உ

சிவமயம்.

புலிப்பாணி முனிவர்.

திருவாய் மலர்ந்தருளிய

ஜாலத் திரட்டு ௨௱.

—(*)—

காப்பு-பாயிரம்.

சத்தியே பராபரியே ஞானநூலில் சாம்பவியே மனோன்ம ணியே கபாலிசூலி நித்தியே வேதாந்த பரையே யம்மாள் முக்கு ணமே முச்சுடரே மாயாவித்தி, வெற்றியே மூவருக்கு மருளாய் நின்ற வெளியே சாமளையே பொன்னே மின்னே, சித்தியே ஜாலத்திற் றிருநூறுஞ் சின்மயமாந் கணபதிதான் காப்பாம் பாரே.

(பொ-ரை) சத்தியே! தயாபரியே! ஞானநூற்களில் சொல் லப்பட்ட சாம்பவியே! மனோன்மணியே! கபாலி! சூலி! வேதாந்த பரையே! அம்மா! திரிகுணவஸ்துவே! முச்சுடரே! மாயாவித்தி! வெற்றியே! மூவருக்கு மருளாய்நின்ற வெளியே! சாமளையே! பொன்னே! மின்னே! இருநூறு பாடலைக்கொண்ட ஜாலத்தைப் பாட ஞானமயமான கணபதியின் திருவடி காப்பாம் (எ-று) (1)

பாரப்பா சாலமொடு சல்லியொட்டியம் பாங்கான தொட்டி யம்தொட்டர்விசித்த சாரப்பா கொடியானு மொழியான்வித்தை சார்வானதிரி கருணையெட்டார்த்தான் ஜாரப்பா சித்திலட் சக்கலக டவித்தைகருவான தக்கிஷமும் பஞ்சபட்சி வாரப்பா சின்வித்தை மார்தருக்கும் வளமான படுபட்சிகைவல்யமாமே.

(பொ-ரை) சாலம், சல்லியம், ஒட்டியம், தொட்டியம், கொ டியான், ஒடியான், திரிகருணை எட்டாகம், கலகடவித்தை, தக்கி ஷம், பஞ்சபட்சி, சின்வித்தை, படுபட்சி இவைகளெல்லாம் செப ல்லுகிறேன். (எ-று) (2)

ஆமப்பா பேதாவண்ணன் கேசரிப்பித்தம் அடைவான ஆஷ் டகர்மவித்தைகாருடன் தாமப்பா கண்டனம் பேதனமுஞ் சிப்பு தயவானவட்சணியுந் தர்க்கசாஸ்திரம் யோமப்பாயட்சணி தட்ச

ளியுங்கூடப்புகழ்வாதஞ்சோதிடங்காவியத்திநோடு காமப்பாவை த்தியத்தோடிலக்கணந்தான் நல்லசூடாமணியு மின்னங்கேளே.

(பொ-ரை) பேதார்வண்ணன், கேசரியதீதம், அஷ்டகர்ம விநோதம், ஆரூடம், கண்டம், ஏபனம், சிப்பு, எட்சணி, தர்க்க சாஸ்திரம், பட்சணி, தட்சணி, வாதம், சோதிடம், காவியம், வை த்தியம், இலக்கணம், சூடாமணி இவைகளும் (எ-று) (3)

கேளடா சித்தராரூடங் கன்னம் கெணிதமாய் சிமிழ்வித்தை கம்பிசூஸ்திரஞ் சூளடாசூனியமுந் திறவுகோலுஞ் சுகமானமந்தி ரமு நறுக்கிச் சல்லியம் வாளடாமதனூற் சாத்திரந்தான் வள மானபெருநூற் சல்யமதாகும் தாளடாவிருப்பென்ற கடலைப் பா தயவாகமலை நிகண்டு சொல்லக்காணே.

(பொ-ரை) சித்தர் ஆரூடம், கன்னம், சிமிள்வித்தை, கம்பி சூஸ்திரம், சூனியம், திறவுகோல், மந்திரம், நடுக்குசல்லியம், தன நூல், பெருநூல் சல்லியம், இருப்புக்கடலை, மலைநிகண்டு இவைக ளும் (எ-று) (4)

காணவேசித்தர் சத்தியஞ்சல்யமந்திரங் கருவானகூட்டுடைய கருத்தானப்பா மாணவேசலமா நிகண்டுபாலை மலைவளப்பூருவ மாங்கண்டத்தோடு ஊணவேகலைக்கியானம் ரேகைவித்தையுத்த மனே யாகமங்கள் விஸ்வாமித்திரம் தோணவே யின்னம்வெகு நூல்களுண்டு தொழிலான போகருட வருள்தான்காணே.

(பொ-ரை) சித்தசுத்தி, அஞ்சல்மந்திரம், கருக்கூட்டு, நிக ண்டு, மலைவளம், பூர்வகண்டம், கலைக்கியானம், ரேகைவித்தை, ஆகமங்கள், விஸ்வாமித்திரம், இவைகளும் இன்னும் அநேகநூல் களுமுண்டு. இவைகளெல்லாம் போகருடைய கடாட்சத்தினால் சொன்னதாம். (எ-று) (5)

காணப்பா விந்நூலி லொன்றுனுங் கனிவாகசித்தி செய் வோன வனேநாதன் ஊணப்பா பாதவித்துப் பார்த்துப்பார்த்தே யுத்தமனே சித்திசெய்ய விதியில்லாதார் நாணப்பாசாஸ்திரத் தைப் பொய்யென்பார்கள் நலமாக விதியிருந்தால் பலிக்கும்பாரு ஆணப்பா ஜகஜாலங் கூத்துகூத்து ஆரறியப்போகிறாரப்பாகேளே.

(பொ-ரை) இந்நூல் வித்தைகளில் ஒன்றையாவது சித்தி செய்பவனே தலைவன் அப்படி சித்திசெய்ய வழியில்லாதவர்கள்

சாஸ்திரத்தைப் பொய்யென்று சொல்லுவார்கள். விதியிருந்தால் பலிக்கும், இல்லையானால் பலிக்காது, இவைகளெல்லாம் ஜகஜாலக் கூத்தாகும். இவைகளை யார் உணரப்போகிறார்கள்? (எ-று) (6)

கேளப்பா ஞானமொழிப்பல திரட்டுவாளட கெணிதமென்ற சோதிடமும் வயித்தியமுங்கூட வாளப்பாசிதம்பரத்தின் பூசை யோடுவளமான் தேவியுட பூசையப்பா சூளப்பாசண்முகத்தின் பூசையாக்கஞ் சுகமான சிமிழ்வித்தை கொக்கோகந்தான் விளம் பாபோகாது சாலசாலம் வெகுநூருக்கு இருநூறுந் தெளிந் துபாரே.

(பொ-ரை) ஞானம், பலதிரட்டு, வாடை கெணித சோதி டம், வயித்தியம், சிதம்பர பூசை, தேவி பூசை, சண்முகத்தின் பூசை, சிமிள் வித்தை, கொக்கோகம், இவைகள் சொல்லி இது மேன்மையாகையால் மிகவும் அருங்கானவைகளேயாம். இந்த இருநூறையும் ஆராய்ந்து பார் (எ-று) (7)

பாரடா பெருநூல்தான் கோர்வையாகப் பார்த்தவர்க்குப் பலனுண்டு சித்தியாகும் வீரடாபலதிரட்டு ஐங்கோலந்தான் விள ம்பினேன் தயிலத்தை யெடுத்துக்கொண்டு சேரடாதொழில் மு ஞ்சுக்கெல்லாஞ்சேரு செயமாகும் வித்தையில்லை யென்னசொ ல்வேன் கூறுமாகண்கட்டு வித்தையொன்று கூறுகிறேனன்றாகக் கேளுகேளே.

(பொ-ரை) என்னுடைய நூலைக் கோர்வையாகப் பார்ப்ப வர்க்கு பிரயோஜனமுண்டு. சித்தியாகும் பலதிரட்டு ஐங்கோ லத்தால் சொன்ன தைலத்தை யெடுத்துக்கொண்டு எல்லா வித் தைகளையும் சித்தியடையலாம். இனி கண்கட்டு வித்தையைச் சொல்லுகிறேன் (எ-று) (8)

பாயிரம்-முற்றிற்று.

கண் கட்டு வித்தை.

கேளோநீ யூர்க்குருவி பிடித்துவந்து கெணிதம்ாய பானத்
தைத்தைத்து பின்னே சூளேநீகால் களஞ்சி சூதம்வாரு சுகமாக
க் கால்கழஞ்சி வெண்ணெயோடு பாளோநீ வாயைத்தான் தைத்து
ப்போடு வளமான சிறுபானைக் குள்ளேபோடு பானைநீ போகா
மல் மூடி நாள்கள்ளு பாங்காகத்தான் வார்த்திட்டெரித்திடாயே.

(பொ-ரை) ஊர்க்குருவியைப் பிடித்துக்கொண்டுவந்து அதன் அபான வாயைத் தைத்துவிட்டு அதில் கால் கழஞ்சு இரசத்தைக் கால் கழஞ்சு வெண்ணெயோடு கலந்துவிட்டு வாயையும் தைத்து ஒரு சிறிய பானைக்குள் போட்டு மூடி அதில் கள் வார்த்து எரிப்பாய் (எ-று) (9)

எரிப்பாயே யொருமரத்து விறகுகொண்டு எட்டொன்றுய்
குறுக்கியே பதத்தைப்பார்த்து தெரிப்பாயே அஸ்திமுதலுரோ
மந்தள்ளித் தெளிவாகத் தானெடுத்து கல்வத்திட்டுச் செரிப்பாயே
பேய்க்கருப்பன் சாற்றைவிட்டுச் சேர்த்தரைப்பாய் மைபோலே
யாகுமட்டும் விரிப்பாயே தாணிமேலே பரப்பிமைந்தா விதமாகக்
காயவிட்டுத் திரிபாய்ச்சுத்தே.

(பொ-ரை) ஒரு ஜாதி மரத்து விறகினால் எரித்து எட்டுக் கொன்றாகக் குறுக்கிப் பிறகு பதத்தைப் பார்த்து எடுத்து அஸ்தி, உரோமம் இவைகளை நீக்கி எடுத்துக் கல்வத்திலிட்டு பேய்க்கரும்புச் சாறுவிட்டு மைபோலாகும் வரைக்கும் அரைத்து ஒரு தாணியின்மேல் பரப்பிக் காயவைத்து [illegible]. (10)

சுற்றப்பாவைங் கோலத்தயிலம் வாருவருக்காகச் சிரசோடு
டில் மையைவாங்கி சிற்றப்பாதயிலைத்தி விழைத்து நன்றாய் திரி
யில்வைத்து சாலக்காள் பூசைசெய்து அற்றப்பாமையெடுத்து வித்
தையடா அப்படவாகச் சொல்லுகிறேனன்றாய்க்கேளு முற்றப்பா
பச்சை வைக்கோல் தன்னிற்றேய்த்து முன்போடப் பாம்பாகுங்
கண்டுபாரே.

(பொ-ரை) இலுப்பைக்கோலத் தைலம் வாங்கித் திரியில் வார்த்து தலையோட்டில் வைத்து மைவாங்கி சிமிழில் வைத்து சாலக்காள்

பூசைசெய்து அந்த மையை எடுத்து பச்சை வைக்கோலில் தேய்த்து முன்னேபோடப் பாம்பாகும். (எ-று) (11)

பாரடா பனிபிலைக்குக் குளவியாகும் பண்பான வேப்பிலைக்
குத் தேன்தேளாகுஞ் சீரடாநாட்டு வக்காவியாகும் சிறப்பான
பலகுருவி சிறகிற் பூசில் கூரடா அந்தந்தப்பட்சியாகுங் குணமாக
வோட்டி விட வராகனுகும் வீரடாமண் ணெலிப் பூசினுக்கால்
விதமான கெந்தபொடி வாசந்தானே.

(பொ-ரை) பனிபிலைக்கு குளவியதும், வேப்பிலைக்குத்தேளும், நட்டுவக்காலியும், பலகுருவிச் சிறகில் பூசினால் அந்தப்பட்சியும், ஓட்டிவிட வராகனும், மண்ணெலி பூசினால் கந்தபொடி வாசனையுமாகும். (எ-று) (12)

தானென்ற அம்பியிலே பூசினக்கால் தயவாக அம்பியது
நடக்கும் பாருமென்றக்கழற்சிக்காய் வேணமட்டும் உத்தமனே
பூசியதை கீழேபோடு சோமென்ற கழற்சிக்காய் மோதிக்கொள்
ளுங் கொற்றவனே சிறுபிள்ளைக்கு பிந்தபாகங் தேனென்தபோக
ருட கடாட்சத்தாலே தெளிவாக புலிப்பாணிப் பாடினேனே.

(பொ-ரை) அம்பியில் பூசினால் அம்பிநடக்கும் கச்சைக்காய் வேண்டியவரைக்கும் பூசியதைக் கீழேபோடு அப்பொழுது அந்தக் கச்சைக்காய் மோதிக்கொள்ளும், சின்னகள்களுக்கும் இக்தப்புரளும் ஆகும். (எ-று) (13)

ஜாலக்காள் பூசை.

பாடினேன் ஜாலக்காள் பூசைமார்க்கம் [illegible]
கிழங்குபாவை சூடிநீ பெண்போலிருப்பருஞ்செய்து சுகமாகக்கொடி
மூலமேலே சுற்றி ஆடியேபூசையப்பா சத்திபூசை அடைகாக்கு
செய்தபின் தியானமோது தேடியேசாகினி டாகினி சாலக்காள்
தேவிநீரூருவென்றோதே.

(பொ-ரை) ஜாலக்காள் பூசையாவது மஞ்சட் கிழங்கைப் பாவையாகப் பெண்போல் செய்து சித்திரமூலம் கொடியை மேலேபோட்டு சத்திபூசை செய்தபிறகு தியானமாக சாகினி, டாகினி, சாலக்காள்தேவி நீரா, ரா என்று சொல்லு ஓது. (எ-று)(14)

ஓதிவேமந்திரந்தான் லட்சமோது உன்னிடத்தில் விளையாடி யிருப்பாள்பாரு வாதமேயிவளுடைய ஜாலம் ஜாலம் வையகத்தோர் மதிமயங்கி யிருப்பாரப்பா சூதுதான் சொல்லவில்லைச் சாலவித்தை சொன்னபடி தாணுங்கண்டுபாரு நாதனார்போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இவ்விதம் லட்சம் உரு செபித்தால் அவள் உன்னுடன் விளையாடிக்கொண்டிருப்பாள். இந்த ஜாலத்தால் உலகத்தார் மயங்கியிருப்பார்கள். நான் சூது சொல்லவில்லை சொன்னபடியே இது ஆகும், (எ-று) (15)

பச்சைப்பாம்பு வித்தை.

பாடினேனின்னமொன்று சொல்லக்கேளு பண்பானபச்சையென்ற பாம்பைக்கொன்று ஆடியேயதின்வாயிற்கெட்டைமுத்து அப்பனே பூநாவின் பருத்திக்கொட்டைகூடவே யடுக்கடுக்காய் செலுத்திப்போடு குணமாக மண்ணிலிட்டுநீரைவாரு மூடிவேவித் தெடுத்திந்தப்பாக மூன்றுதிரம்போட்டு நீயெடுத்துக்கொள்ளே.

(பொ-ரை) இன்ன மொன்று சொல்லுகிறேன் கேள்:— பச்சைப்பாம்பு ஒன்றைக் கொன்று அதினுடைய வாயில் முத்துக்கொட்டை, பருத்திக்கொட்டை இவைகளை ஒன்றன்பின்னொன்று அடுக்கடுக்காய் போட்டு மண்ணில் வைத்துச் சலத்தை வாரு, இவ்விதம் மூன்று தடவைசெய்து எடுத்துக்கொள். (எ-று) ()

கொள்ளப்பா மூன்றுதிரங் கழற்சிமுத்தின் குணமான வெ[illegible]த்துக்கொண்டு தெள்ளப்பா மூன்றுதிரம் வெடித்தபஞ்சு தெளிவாகத் தா[illegible]த் திரியாய்ச்செய்து தள்ளப்பா திரியெடுத்து விளக்கிலேற்றித் தனிவாகவைங்கோலத் தயிலஞ்சற்றே அள்ளப்பாவிளக்குதனிலிந்த வெண்ணை அடைவாகத்தான் வார்த்துதீபமேற்றே.

(பொ-ரை) இவ்விதஞ்செய்தபின் அந்த முத்துக்கொட்டை எண்ணெயை வடித்துக்கொண்டு மூன்று முறை வெடித்தபஞ்சு தெளிவாக எடுத்து திரியாகச்செய்து அந்தத் திரியை எடுத்து விளக்கிற்போட்டு ஏற்றி ஐங்கோலத் தயிலம்விட்டு விளக்கேற்ற வேண்டும். (எ-று). (17)

ஏற்றப்பாராக்கால மனிதர்கூட்ட மிருக்கையிலே பொருந்திவிடு பாம்பாய்த் தோணுங் கூத்தப்பாவெகுபாம்பு பச்சைப்பாம்பு கொற்றவனே வெகுபேர்கள் மிரளுவார்கள் தாத்தப்பாதிரியணைக்க மறைந்துபோகுஞ் சமர்த்துதானென் சொன்வேனிந்த வித்தை ஆற்றப்பாபோகருட கடாட்சத்தாலே அடைவாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இராத்திரிகாலத்தில் மனிதர்களுடைய கூட்டம் கூடியிருக்கும்போது இந்தத் திரியை ஏற்றினல் பாம்பாய்க்காணப்படும். இதைக் கண்டு அநேகர்கள் மருள்வார்கள். உடனே திரியை யணைத்துவிட்டால் அது மறைந்துபோகும். இந்த வித்தையை போகருடைய கடாட்சத்தினல் சொன்னேன் (எ-று) ()

மூலிகைஜாலம்.

பாடினேனின்ன மொருஜாலவித்தை பண்பாகச் சொல்லுகிறேனன்றாய்க்கேளு ஆடியேயிருளென்ற மூலிதன்னை அப்பனே காப்பிட்டுப் பிடுங்கிவேரை நாடியேகாதிலே வைக்கும்போது நலமாக வொருபொருளைச் சொல்லுதைத்தாற் கூடியேயவ்வண்ண ரூபமாகுங் குணமானவதன் பெருமைகூறக்கேளே.

(பொ-ரை) இன்னமொரு ஜாலவித்தையைச் சொல்லுகிறேன் கேள்:—இருளியன்கிற மூலிகைக் கொம்புகட்டி பிடுங்கி அவ்வேரைக் காதில் வைக்கும்போது ஒரு பொருளைச் சொல்லினைத்தால் அப்பொருளாகவேகாணப்படும். (எ-று) ([illegible])

கேள்டாபுலியாவாய் கரடி[illegible]ய் கெடியான குரங்காவாய் மந்தியாவாய் காளடா பெருமை [illegible]தலெருதுமாவாய் நலமான ஆனையொடு நாயுமாவாய் ஆளட[illegible] பூனையொடு கோழியாவாய் அடைவான குதிரையொடு கழு[illegible]தயாவாய் வான[illegible]றியாய் மாணுமாவாய் வளமான ஆடுமா[illegible]ல் லாவாயே.

(பொ-ரை) அதனால் புலியாவாய், கரடியாவாய், குரங்காவாய், எருமை, எருது இவைகளாவாய், ஆனை, நாய் இவைகளாவாய், பூனையும் கோழியுமாவாய, குதிரையும் கழுதையுமாவாய், பன்றியும் மானுமாவாய், ஆடும்பாம்பும், கல்லுமாவாய். (எ-று) ()

ஆவாய்நீயாணுவாய் பெண்ணுமாவாய் அப்பனேராஜனொடு குருவுமாவாய் தாவியேசித்தரென்ற முத்தராவாய் தபோதனர்கள் தாமுமாய் தவசியாவாய் வாவியுங்குளமாவாய் கிணறுமாவாய் வளமானபாம்பாவாய் பட்சியாவாய் மேவியேகிளர்ந்த படியெல்லாமாவாய் மேதினியிலின்ன மொருப்புது மையாமே.

(பொ-ரை) ஆண், பெண், ராஜன், குரு, சித்தர், முத்தர், தபோதனர்கள், தவசி, குளம, கிணறு, பாம்பு, பட்சி, இவைகளாக இவ்வுலகத்தில் ஆவாய். (எ-று) (21)

ஆமப்பாஇச்சாலஞ் சுருக்குமெத்த ஆரறியப்போகிறாருமை மெத்தகாமப்பா புண்ணியருக் கெய்துமப்பாரு கன்மிகளுக்கென்னுங்காணுதப்பா தாமப்பாயிம் மூலிகாய்ந்ததானுல் தயிலமிட்டுக் காற்றில்வைக்க விரமாகும் வாமப்பாபோகருட கடாட்சத்தாலே வளமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இந்தச் சலத்தினுடைய சுருக்கு மெத்தவாம். இதின் பெருமையை யாவரறிவர் இது புண்ணியர்களுக்கு கைகூடும், காமிகளுக்கு எப்போதும் காணப்படாது. இந்த மூலி காய்ந்ததினுல் தயிலமிட்டுக் காற்றில்வைக்க விரமாகும். இது போகருடைய கடாட்சத்தால் சொன்னேன். (எ-று) (22)

தெய்வ ஞாலம்.

பாடினே னின்னமொன்று சொல்லக் கேளு பாங்கான சிறுமுன்னைக் காப்புகட்டி ஆடியே பொங்கலிட்டுத் தூபதீபம்அப்பனே பலிகொடுத்து வேரை வாங்கி கூட்டியே பொடியாக்கிக் கருச்சிலை தன்னில் [illegible] திரியாக்கி யைங்கோலத்தால் வார்டியே விளக்கிட்டுத் தீபந்தன்னை [illegible] ஆவினெய்யி லேத்திடாயே.

(பொ-ரை) இன்னமொன்று சொல்லக்கேள், சிறுமுன்னையைக் காப்புகட்டி பொங்கலிட்டுத் தூபதீபம், பலி இவைகள் கொடுத்து அவ்வேரை எடுத்துவந்து பாடிப்பண்ணி சீலையில் தடவித் திரியாக்கி ஐங்கோலத் தைலத்தால் விளக்கேற்றி ஆவினெய்யில் ஏற்றுவாய். (எ-று) (23)

ஏற்றியே கோவிலுக்குள் மாளிகைக்குள் இன்பமாய்த் தானிருக்கு மிடத்திலப்பா பார்த்திடே [illegible]த்தான் வரவழைத்து பாரென்று சொல்ல [illegible] வாய்மூடிமென்னே வாத்தியே

தேவரெல்லாங் கண்ணிற் காணும் வையகத்தோர் தான்மயங்கிப் பார்ப்பார் பாரு சாத்திரியே திரியவனைக்க மறையும் பாரு சார்வாக போகருட கடாட்சந்தானே,

(பொ-ரை) இதை கோவிலுள்ளும், மாளிகையுள்ளும் ஏற்றினால் தேவர்களையெல்லாம் கண்களில் பார்க்கக்கூடும். வையகத்தோர் மயங்கிப்பார்ப்பார், திரியவனைக்கமறையும் இது போகருட கடாட்சமாகும். (எ-று) (24)

சீலைக்குடை பிடிக்க

தானென்ற கருவீழி காப்புகட்டி தயவாகப் பொங்கலுடன் பலியுமிட்டு தேனென்ற திக்குபந்தனமோ டெட்டுஞ் செய்தவுடனைதவெட்டியுக் கிழங்குவாங்கி கோனென்ற சோமனிலே விராகனொன்று குணமாகத் தானறுக்கி மூடித்துக்கொண்டு வானென்ற ஆகாசந்தன்னில்போட வன்மூக்க் குடைபிடித்து வரும்பாரே

(பொ-ரை) கருவிழுதியிலைச் செடிக்குக் காப்புகட்டி பொங்கலிட்டு பலிசெய்து திக்குபந்தனஞ் செய்து அதை வெட்டிக் கிழங்குவாங்கி சோமகாயத்தில் ஒரு வராகனெடை நறுக்கி முடிந்துகொண்டு ஆகாசத்தில் போட அது குடை பிடித்துக்கொண்டு வரும். (எ-று) (25)

எலுமிச்சம்பழ வித்தை.

பாரேநீ யின்னமொன்று சொல்லக்கேளு பாங்காக கந்தரம் புணரும்போது சேர்சேர்வார்மயிரை வெவ்வேறே வாங்கி திகழு மோதிரம்போல் வெவ்வேறே சுற்றித் தேரேநீ யைங்காய [illegible] திறமாக தங்கத்தை [illegible] லாண்டானப்பா இடது [illegible] தான் காணே.

(பொ-ரை) இன்னும் ஒன்று சொல்லக்கேள்:—கழுதையானது சம்போகிக்கும்போது அவைகள் வால்மயிரைத் தனித்தனியேவாங்கி மோதிரம்போல வெவ்வேறே சுற்றி ஐங்காயம்மேலே பூசி வலதுவிரலில் ஆண்மயிர் மோதிரமும், இடதுவிரலில் பெண்மயிர் மோதிரத்தையும் போடு. (எ-று) (26)

காணப்பா லெலுமிச்சம் பழத்தைவாங்கிக் கனிவாக பாதரசந் தன்னிற்போடு மாணப்பாவிடக்கையை கிழேமூடி வாங்கிதுள்ள

கனியதுவும் வீழாதப்பா தானப்பாவிடக்கையை நிமிர்த்திக்காட்டத் தான்வீழுங் கனியதுதான் கண்டுபாரு வேணப்பாபோகருட கடாட்சத்தாலே விதமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) எலுமிச்சம் பழத்தை வாங்கிப் பாதரசத்தில் போட்டு இடக்கையை வைத்துக் கீழ்மேழ்டி ஆகாயத்தில் கிளம்பின கனியும் கீழேவீழாது. இடக்கையை நிமிர்த்திகாட்ட கனி வீழும் போகருடைய கடாட்சத்தால் புலிப்பாணியானவன் பாடினேன். (எ-று) (27)

நோக்கு வித்தை.

பாடினேனின்ன மொன்று சொல்லக்கேளு பண்பான குன்றுடை தாங்கிமூலம் நாடிநீகோழியது போலேயப்பா நாட்டிலே மெத்தவுண்டதியார்பாரு கூடியே யதைச்சுருட்டி மேலேயப்பா குணமாக ஆள்பாரங் கல்லைவைக்க ஆடியேபார்த்திருக்க அந்தக் கல் தான் அப்புறத்திற் போய்வீழுங் கண்டுபாரே.

(பொ-ரை) இன்னுமொன்று சொல்லுகிறேன் கேள்:—மலைந்தாங்கி மூலம் என்பது கோழியைப்போலிருக்கும் அதை எடுத்துச் சுருட்டி ஆள்பாரமான கல்லை அதின்மேல்வைக்க, ஆட்டிப் பார்க்க அந்தக் கல்லானது அப்பால் போய்விடும். (எ-று) (28)

பாரடா கிராணமது தீண்டும்போது பண்பாக நெருப்பிட்டுப் பொங்கலிட்டுச்சிரடாபலியிட்டுத் தூபதீபஞ் ஜெயமாகக் கொடுத்து மிகு வேரைவாங்கி தீரடாகுளிசிமா யாடிக்கொண்டு திரமாக சிரசுதனில் வைத்துநீயுங் கூரடாபாரமதை யேற்றிப்பாரு குணமாகத் தானெடுக்க கனக்காதென்றே.

(பொ-ரை) [illegible] போது நெருப்பிட்டுப் பொங்கலிட்டு பலியிட்டு தூபதீபங்கொடுத்து [illegible] குளிமாடிக்கொண்டு சிரசில் வைத்து மரத்தை யேற்றிப்பார்த்தால் பளுவில்லாதிருக்கும். (எ-று) (29)

கனக்காது உலக்கைகழுதல் கட்டிலையா கனிவாகப் பல்லாக்கொம்பிறேடு அனக்காதுபிதுகளெல்லாம் நோக்கும்போதிலப்பனே வாயிலிறேக்கிப்பாரு இனக்காது ஆனைதான் வாலைப்பற்றி இழுத்தாக்கால் பின்னகர்ந்து வருநீமாவி கனக்காது கல்லை உதைத்தாயானால் நகருமப்பா பெரும்பாரம் பின்னைதானே.

(பொ-ரை) உலக்கை கட்டில், பல்லாக்கு இவைகளெல்லாங் கனக்கமாட்டா? இது செய்பவன் ஆனையின் வாலைப்பற்றியிழுத்தால் பின்னாலேயே நகர்ந்துவரும், கல்லை உதைத்தாலும் நகரும். (எ-று) (30)

தானேதானின்ன மொன்று சொல்லக்கேளு தயவாச்சவத்தினுட வாயினுள்ளே மானேதானிருப்பாணியுள்ளே விட்டு மைந்தனே மார்பினில்தான் வெள்ளியாணி தேனேதானுந்தியிலே செப்பிணாணி தெளிவாகத்தானெடுத் தின்னங்கேளோ வானேதான் சவங்கிடந்து வெந்தபின்பு வளமாக மறுநாளி லெடுத்துக்கொள்ளே

(பொ-ரை) இன்னுமொன்று சொல்லுகிறேன் கேள்:—பிணத்தினுடைய வாயில் இரும்பாணி யுள்ளும், மார்பில் வெள்ளியாணியும் தொப்புளில் செம்பாணியும் வைத்து அந்தப் பிணம் வெந்த மறுநாள் இந்த ஆணிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். (எ-று) (31)

கொள்ளவோ காடாற்றுமுன்னேநீயுங் குணமாகத் தானெடுத்து பூசைசெய்து தெள்ளவே பிரம்பில்வெள்ளி கட்டாய்போடு தெளிவாக விரும்புதனை முன்னேபோடு கள்ளவேசெப்பது தான் முன்னேபோடு சுடிதாக விவ்வகைநீ செய்தபின்பு அள்ளியேயைங் கோலக்கருவும்பூசி அடைவாக ஜாலக்காள் தியானமோதே.

(பொ-ரை) காடாற்றுதற்கு முன்னமே அவைகளை எடுத்து பூசைசெய்து ஒரு பிரம்பில் வெள்ளிகட்டாய்போட்டு இரும்பை முன்னேபோடு செம்பு பின்னேபோடு, இப்படி நீ செய்தபின்பு ஐங்கோலத் தயிலம்பூசி ஜாலக்காள் தியானஞ்செய். (எ-று) (32)

ஓதியேலட்சமுரு முடிந்தானால்வானஜாலக்காள் பூசை செய்து வாதாகப்பிரம்புதனை யெடுத்துக்கொண்டு வளமாக பிரம்பிருக்கும் பெட்டிமேலே காதியேயன்பாகத் தட்டும்போது பாம்பெல்லாங் வெளியாகும் கண்டுபாருதாதியே பிரம்பைத்தான்திருப்பி தட்டத்தானிருக்கும் பெட்டியுள்ளே பாம்புதானே.

(பொ-ரை) இது லட்சம் உரு முடிந்தானால் ஜாலக்காள் பூசையைச் செய்து பிரம்பை எடுத்துக்கொண்டு ஒரு பெட்டியின் மேல் தட்டினால் அதற்குள்ளிருந்து பாம்புகள் வெளிப்படும், அந்தப் பிரம்பைத் திருப்பித்தட்டினால் பாம்பு மறையும் (எ-று)(33)

வாத்திய ஜாலம்.

தானே தானின்னமொன்று சொல்லக்கேளு தயவாகப்பள்ளியர்கள் மரணமானால் கோனேதானவர் கையிலிரும்பினாலே கொற்றவனே வளையலது போட்டிருப்பார் தேனென்ற தானவர் ளைத்தான் தானம்பண்ணிச் சேருகையில் வளையலுடன்வைப்பார் பாருமானே தான்காடாற்று முன்னேயப்பா வகையாகத்தானெடுத்து வைத்துக் கொள்ளே.

(பொ-ரை) இன்னமொரு ஜாலத்தைச் சொல்லுகிறேன் கேள்:—பள்ளியர்கள் என்னும் ஓர்வகைச் சாதியார் மரணமடையும்போது அவர்களுடைய கையிலிருக்கும் இரும்பு வளையலைத் தகனஞ் செய்தபின் காடாற்றுவதற்குமுன் அவ்வளையல்களையெடுத்து வைத்துக்கொள் (எ-று) (34)

கொள்ளப்பா பாக்குவெட்டி யதனாற்செய்து கொற்றவனே கிரணமது தீண்டும்போது தள்ளப்பா சங்கம்வேர் காப்புகட்டித் தயவாக பலிபூசை நடத்தியப்பா தெள்ளப்பா வடவேரை வாங்கிக்கொண்டு தெளிவான மைங்கருவும் பூசிதள்ளப்பாபாக்கு வெட்டி தன்னால் வெட்டிக்கனிவாக வதின்பெருமை சொல்லப்பாரே.

(பொ-ரை) அப்படி எடுத்துக்கொண்ட இரும்பினால் பாக்கு வெட்டியென்னும் ஆயுதத்தைச் செய்து கிரணம் பிடிக்கும் பொழுது சங்கம் வேர்க்கு காப்புகட்டி பலி, பூசை முதலியவைகளை செய்து வடக்குப் போகிற வேரை யெடுத்து ஐங்கோலக் கருவைப்பூசி அந்த வேரை அந்தப் பாக்குவெட்டியினால் வெட்ட வேண்டும் (எ-று) (35)

பாரடா பேரிகையும் நகராமுதலாய் பண்பான நகராமுதலக் கந்தாளும் சேரடா தம்பட்ட கனகதப்ப செயலான தவிலோடு தவண்டையப்பா கூறடா துத்திமல்லாரி தாரைகுணமான பம்மையொடு பூரியப்பா சீரடா சந்திரவாத்தியஞ் சூரியவாத்தியந் தெளிவான வுடுக்கைமுதல் முழங்குந்தானே.

(பொ-ரை) பேரிகை, நகரா, தம்பட்டம், தவில், தவண்டை, துத்தி, மல்லாரி, தாரை, பம்பை, பூரி, சந்திரவாத்தியம், சூரிய வாத்தியம், உடுக்கை முதலியவைகள் சத்திக்கும் (எ-று) (36)

தானென்ற உடுக்கைமுதல் தப்பினோடு தயவாக யின்னம்வெகு வாத்தியங்கள் கோனென்றவேரைத்தா னடுக்கடுக்காய் கொற்றவனே வெட்டுகையில் முழங்கும்பாரு தேனென்ற வாத்தியத்தின் காலம் ஜாலந் தெளிவாகக் குருமுறையால்தெளிந்துசெய்நீ ஆனென்று போகருட கடாட்சத்தாலே யடைவாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) உடுக்கை முதலிய அனேக வாத்தியங்கள் அந்த வேரை வெட்டும்போது சத்திக்கும். இந்த வாத்தியங்களின் காலம் ஜாலம் இவைகளைக் குருவின் கிருபையினால் நீ செய். நான் போக முனிவருடைய கிருபையினால் சொன்னேன் (எ-று) (37)

எக்காளஜாலம்.

பாடியே யின்னமொரு வித்தைசொல்வேன் பண்பாக-ஆம் ஓம்-கம்வாயவென்று ஆடியே லட்சமுருசெபித்தாயானால்அப்பனே ஜாலக்காள் பூசைசெய்து கூடியோத்தையாஞ்சூரி வேரைக்கொண்டுவந்தே மைங்கோலக் கருவும்பூசி நாடியே முந்தியிலேவைத்துநீயும் நலமாக நீட்டியதை முறுக்குவாயே.

(பொ-ரை) இன்னும் ஒரு வித்தையைச் சொல்லுகிறேன் கேள், ஆம்ஓம் கம் வாயவென்று லட்சமுரு செபித்துக்கொண்டு ஜாலக்காள் பூசையைச் செய்து நத்தைச்சூரி வேரைக் கொண்டுவந்து ஐங்கோலக் கருவை அதற்குப் பூசி அதை முறுக்குவாய் (எ-று) (38)

முறுக்கையிலே மந்திரந்தா னோதிமுனிவாதாமண்ணெடுத் தெதிரேபோடு இருக்கையிலே யெக்காளத்தாரை சின்னம் எனிதானகானவும் வாங்காதப்பா திருக்கையிலே நாகசுரம் கொம்பினோடு தெளிவான மகுடியொடு சங்கநாதக் கருக்கையிலே யிவைகளெல்லாம் படைக்கும்பாரு கனிவாகபோகருட கடாட்சத்தானே.

(பொ-ரை) அப்படி முறுக்கும்போது மந்திரஞ் சொல்லி மண்ணெடுத்து எதிரே போடு அப்படி செய்தால் எக்காளம் தாரை சின்னம் கானா நாகசுரம் கொம்பு மகுடி சங்கத்தொனி இவைகளெல்லா முண்டாகும் (எ-று) (39)

அக்கினி ஜாலம்.

தானையா யின்னமொருவித்தை சொல்வேன் தயவாகப் பச்சையென்ற தவளைநெய்யில் மாணபாகலசத்தில் வைத்துக்கொண்டுமைந்தனே துணிபதிலேவைத்து மைந்தாவானையா மண்வெட்டிபழுக்கக்காய்ச்சி வளமனவுரலின்மேல் வைக்கச்சொல்லித் தேனையா எண்ணெ யிலேகையைத் தோய்த்துத் திறமாகத் தானடிப்பாயின்னம்பாரே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தையைச் சொல்லுகிறேன் கேள் பச்சைத் தவளையின் நெய்யை அகலில் வார்த்து அதிலே துணியை வைத்து மண்வெட்டியைப் பழுக்கக் காய்ச்சி உரலின்மேல் வைத்து எண்ணெயில் கையைத் தோய்த்து அதின்மேலடிப்பாய் (எ-று) (40)

பாரடாவனைவோரும் பார்த்திருக்கப் பண்பாகத் துணியதிலே துடைத்துப்போடு தோடா வெண்ணெயிலே தோய்த்துத் தோய்த்துத் தெளிவாகத் தானடிப்பாயனைவோர்பார்க்கச் சீரடா குண்டதனைக் காய்ச்சச்சொல்லி சிறப்பாகவாய்தனிலே யிந்தவெண்ணெய் நிரடா நிரம்பவிட்டுமிழ்ந்துவிட்டுத் திறமான குண்டதனைக்கடித்துத் தூக்கே.

(பொ-ரை) யாவரும் பார்க்கும்படி அந்தத் துணியில் கையைத் துடைத்துக்கொள் மறுபடி அவ்விதமே செய்து அடித்துவா, யாவரும் பார்க்க ஒரு குண்டைக் காய்ச்சச்சொல்லி வாயில் இந்த எண்ணெயை நிறைய வார்த்து உமிழ்ந்துவிட்டு அந்தக் குண்டைக் கடித்துத் தூக்கு (எ-று) (41)

தூக்கப்பா வனைவோரும் பார்க்கும்போது துணிவாக வைக்கோலில் வெய்துக்கட்டி தூக்கப்பா வைக்கோலி லெண்ணெய்தோய்த்து வகையாகத் தான்கட்டி முன்னேபோடு போக்கப்பா வைக்கோல்தான் வேகாதப்பா பொலிவாகத் தானவிழ்த்துப் பின்னுமங்கேயொரு தூக்கப்பா வைக்கோல்மேல் போட்டாயானால் றயவாகத் தான்பிடித்து வேகும்பாரே.

(பொ-ரை) அதை வைக்கோலில் வைத்துக்கட்டி அந்த எண்ணெயைத் தடவிப்போட்டாயானால் வைக்கோல் வேகாது. அந்த வைக்கோலை யவிழ்த்துவிட்டு வேறே வைக்கோல்மேல் போட்டால் தீப்பிடித்து வேகும் (எ-று) (42)

பாரடா சங்கிலியைக் காயப்போட்டுப் பண்பாக நெய்யெடுத்துருக்குவாய் நீரேட்ட பாதத்திற்றடவிக் கொண்டு சிறப்பாக வக்கினிமேல் நடக்கலாகும் கூடாகைதனிலே தடவிக்கொண்டு ருமானவக்கினி சட்டிதன்னை வீரடாவெடுக்கலாங் கண்டுபாரு விதமான போகருட கடாட்சந்தானே.

(பொ-ரை) ஒரு இருப்புச் சங்கிலியை நன்றாய்ப் பழுக்கக் காய்ச்சி இந்த நெய்யை யுருக்கி காலில் தடவிக்கொண்டு அந்த அக்கினியின்மேல் நடக்கலாம்: அதே நெய்யைக் கையில் தடவிக்கொண்டு அக்கினி சட்டியை எடுக்கலாம். இவை யனைத்தும் போகருடைய கடாட்சமே யாகும் (எ-று) (43)

ஜலஸ் தம்பனம்.

தானுன இன்னமொரு வித்தைகேளு தயவாகச்சலதிரட்டுக் கூட்டுமூலி லாகை உலர்த்தியதைத் தூளாய்ச்செய்து வளமாக இங்கோலத் தைலந்தனில் மாறுகணைபோல நாரைத்தமைந்தா மருவுபாதக் குறடுதன்னிற் பூசிக்கோணுக தண்ணீர்மேல் நடக்கலாகும் ருசக்கினைதே யல்லாம லாருகாதே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தை சொல்லுகிறேன் கேள் ஜலத்திரட்டுக் மூலிகையை யுலர்த்திப் பொடிசெய்து இங்கோலத் தைலத்தால் மைபோலரைத்து பாதக்குறட்டில் பூசிக்கொண்டு ஜலத்தின்மேல் நடக்கலாம் ஞானம் இவைகளிலும் செய்யலாம். ஞான உதவாது (எ-று) (44)

ஆறுவகைகள் தன்னிற் பயப்பனே சலத்தின்மேலிருக்கலாம் தித்தலை மைமெழுக்க கொற்றவனே புலகத்தோர் காதலென்பார் தேறு லின்திராஜாலந் தேறினோர் சகல சித்துங் கைக்குள்ளாகும் வீரானபோகருட கடாட்சத்தாலே விதமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) பீடங்களின்மேல் பூசி சலத்தின்மே லிருக்கலாம், இவைகளெல்லாம் அருமையான வித்தைகளாகும். இவைகளை உலகத்தார் கண்டு மிகவும் மெச்சுவார்கள் (எ-று) (45)

எட்சணிஜாலம்.

தானுனைபச்சோந்திப் பிச்சையவாங்கித் தயவாகத்திசை மயக்கப்பொடியும் கூட்டியானுனை மதிமயக்குத் தானுங்கூட்டி மந்தம்

வேர்த்தூளதுவுங் கூடச்சேர்த்து வாறுவங்கோலத் தாட்டிமைந் தாவளமாகச் சிமிழதனில் வைத்துக்கொண்டு சோறுனமேதி னியைத் தியானஞ்செய்து குணமான ஜாலக்காள் பூசைசெய்யே.

(பொ-ரை) பச்சை ஒணுனுடைய பிச்சை வாங்கி திசைமயக் கப் பொடியைச் சேர்த்து மதிமயக்கத் தூளையுங் கூட்டி ஊமத் தம் வேர்த்தூளையும் கூடவே சேர்த்து ஐங்கோலத் தைலத்தா லரைத்து தியானஞ்செய்து ஜாலக்காள் பூசை செய் (எ-று) (46)

செய்யப்பாமாய மோகினி நமாவென்று செயலாகத்திகைமி டப் பெண்போல் தோன்றும் வையப்பாவுலகத்தோர் வாய்வா ண்டு மதிமயங்கியோ கித்துநிற்பார்பாரு ஐயப்பாரம் பையூர்வசி பெண்தானோ அடைவான திலோர்த்தமையோ தெய்வப்பெண் ணே கையப்பா பிடிப்பாருங் காலில்வந்து கனிவாக வீழ்வாருன் கண்டுபாரே.

(பொ-ரை) மாயமோகினி நமாவென்று சொல்லி பொட் டிடப் பெண்போல் காணப்படும், அதைக்கண்டஜனங்கள் மருண் டிருப்பார்கள். பிறகு தெய்வப் பெண்கள் நால்வரில் யாரோ தெ ரியவில்லை யென்று காலில் விழுவார்கள் (எ-று) (47)

பாரடா திலகத்தை யழித்தபோது பண்பான பெண்ணையுங் காணே மென்பார் வீரடாபிந்தமங்கை புலிஇருண்டோ விதமான மேதினியில் காணலாமோ தீரடாமனம்பதறி யழுவார்பாரு தெய் வமே யென்றுசொல்லி மயங்குவார்கள் வீரடாவிப்பெண்ணை நினை ந்தபோதே நெஞ்சுருகி வேகு[illegible]று புலம்புவாரே.

(பொ-ரை) மைப்பொட்[illegible] கலைத்துவிட்டால் ஒன்றுந் தோன்றாது. அப்போது அப்பெண்ணைக் காணோமேயென்றழு வார்கள். தெய்வமே யென்றுசொல்லி மயங்குவார்கள். இப் பெண்ணை நினைத்தபோதே மனமுருகுகின்றதென்று புலம்புவார் கள். (எ-று) (48)

வாறான வின்னமொரு வித்தையப்பா வளமான வெட்சணி யின் மார்க்கங்கேளு கூறான ஸ்ரீம் இரீம்கிலியுமென்று குணமான அவ்வுமுவ்வு மவ்வுந்தேறு விருனமசிவய வென்றுநீயும் வித மான ஓமென்று சொல்லிப்பின்னே சிறுன அகந்தாபரி மளஞ்சாதிக் காய் திறமான கிராம்புவால் மிளகுந்தானே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தை சொல்லுகின்றேன் கேள். அதாவது எட்சணி வித்தையாகும். ஸ்ரீம் இரீம் கிலியும் அவ்வும் உவ்வும் மவ்வும் நமசிவாய ஓம் என்று சொல்லி வாச னைகள் சாதிக்காய், லவங்கம், வால்மிளகு இவைகள் (எ-று) ( )

மிளகோடு யடைக்காய் சர்க்கரை கற்கண்டு மிதமில்லாக் கனி வகைகள் பலகாரமன்னம் அன்னோடு இவையெல்லாம் வேண்டு மென்றே அடைவாக எட்சணியின் றியானமோது புளகோடு தெப்பக்கால் மூலிகைக்குப் போங்கமுடன் வெள்ளியிற் காப்பு கட்டி நளகோடு எட்டுநாளந்தி சந்திநலமாக எட்சணியின் தியா னமோதே.

(பொ-ரை) வெற்றிலைபாக்கு, சர்க்கரை, கற்கண்டு பலவ கைப் பழ இனங்கள் பலகாரம் சோறு இவைகள் வேண்டு மென்று மூன் தியானத்தைச் சொல்லி. தெப்பக்கள் மூலிகைக் கு வெள்ளிக்குழலில் காப்புகட்டி. எட்டுநாள் காலைமாலை தியானஞ் செய் (எ-று) (50)

ஓதியபின் பொங்கல்பலி தூபதீபம் ஒளிவாகத்தான் கொடு த்து வேரைவாங்கி ஆதியாமைங் கோலக்கருவுபூசி அடைவாக கருவைமேல்சுற்றி நாதியே தங்கத்தா லடைந்துக்கொண்டு நல மாக எட்சணியை லட்சமோதி திடமாய்பூசைபாதுபலக்கச்செய்து செய்வினை விலவுமில்லா மறைப்பார் பாரே.

(பொ-ரை) அப்படி ஜபஞ்செய்தபின், பொங்கல் பலி தூபம் தீபம் இவைகளைக் கொடுத்து அந்த வேரை வாங்கி ஐங்கோலக் கருவை அதற்கு பூசி கருவை அதற்குமேல் சுற்றி தங்கத்தில் அடைத்துக்கொண்டு எட்சணியை லட்சம் உரு செபித்து இவை களை பெல்லாம் அழைப்பார் (எ-று) (51)

பாடினேனின்னமொரு வித்தைகேளு பண்பகத்தலைமைத் தாளவரங்கவிக் கூடியே பிடித்திருக்கும் வேலைபார்த்து [illegible] மற் றலையை வெட்டிப்போடு ஆடியேயதனுடைய தலையங்கட அலட்டான தலையைத் தானெடுத்துக்கொண்டு தேடியே வாங்கி அச்சுப்பட்டைக்கொண்டு நலமானவைத்து [illegible] தயிலங்கட்டிட.

(பொ-ரை) இன்னுமொரு வித்தையைச் சொல்லுகிறேன் கேள், தவளையைப் பாம்பு பிடித்துக்கொண்டிருக்கும் வேளை.

யைப் பார்த்து தலை விழும்படி வெட்டி இரண்டு தலைகளையும் எடுத்து செவப்பு சகலாத்துப் பைவைத்து தைத்து ஐங்கோலத் தைலஞ் சேர். (எ-று) (52)

கூட்டியே சகலாத்தில் வைத்துத் தைத்துக் குணமாக வரலி ன்கீழ் வைத்துக்குத்து காட்டியே குத்தையிலே வாயும்போகும் நலமாக வதையெடுத்து வைத்துக்கொண்டு ஆட்டியே யிப்பாக கிளைத்தபோது அடைவாகச்செய்து விளையாடிப்பாரு வாட்டியே யவமானப்பட்டுப் போவார் வையகத்தோர் தான்பார்த்து நகை ப்பார்பாரே.

(பொ-ரை) அந்த சகலாத்தில் வைத்து தைத்து உரலில் வைத்து குத்தினல் வாயும்போகும். உடனே அதை யெடுத்து வைத்துக்கொண்டு சகல வித்தைகளையு மாடிப்பார் (எ-று) (53)

சீலைத்திரைய.

பாரடா கர்த்தபந்தான் புணரும்போது பரிவாக வாண்கழு தை வாலுரோமஞ் சீரடா பிடுங்கியதை வைத்துக்கொண்டு சிறப் பானகண்ணில் எரப்புற்றுமீதில் தீரடாகண்டுடைய கொடிதானை ப்பா நிறமாகக் கிரானத்திற் காப்புகட்டி கூரடாபலி பொங்கல் தூபதீபம் கொடுத்து நீகொடியதனைப் பிடுங்கிக்கொள்ளே.

(பொ-ரை) கழுதையானது புணரும்போது ஆண் கழுதை யின் வால் மயிரைப் பிடுங்கி வைத்துக்கொண்டு கண்விட்டிராத புற்றின்மேல் படர்ந்திருக்கும் கட்டுக்கொடிக்கு கிராணத்தில் காப்புகட்டி பலி பொங்கல் தூபம் தீபம் இவைகளை கொடுத்து கொடியைப் பிடுங்கிக்கொள் (எ-று) (54)

கொள்ளவே வளையமாய்ச் சுருட்டிக்கொண்டு குணமாக ரோமமுங் கூடவைத்தே தெள்ளவே தங்கத்தால் வெள்ளியாகத் தண்டி னுட மேலேசுற்றி கள்ளப்பா சுற்றுமுன்னே கழியும்பூசிக் கனிவாகச் சாலக்கால் பூசைசெய்து மெள்ளவே கையதனிலேற் றும்போது மேன்மையாய் சீலையது திரையும்பாரே.

(பொ-ரை) அந்தக்கொடியை வளையமாட்டி அதில் கழுதை மயிரையுஞ் சேர்த்து தங்கத்தாலும் வெள்ளியாலும் தண்டின் மேல் சுற்றி காலக்கால் பூசை செய்து கையில் போடும்போது சீலை திரையும (எ-று) (55)

தீவெட்டிஜாலம்.

பாரப்பா வெட்டுண்ட முண்டந்தன்னைப் பத்திருக்கு மிடம் பார்த்து ஊனைவாங்கி நேரப்பா திகைப்பூடு பொடித்துப்போடு நேரானவைங்கோலத் தயிலஞ்சேர்த்து தீரப்பா தீவெட்டி தனில ணைத்து திறமாகப் பொருத்திவிளக் கெண்ணெய்வாரு வீரப்பாரா க்காலமனிதர்கூ வீராகவருகையிலே சொல்லக்கேளே.

(பொ-ரை) முன்வெட்டுண்ட முடத்தைப் பார்த்து அதின் மாமிசத்தை எடுத்து திகைப்பூண்டு பொடித்துச் சேர்த்து விளக் கெண்ணெய் வாரு, இராக்காலங்களில் மனிதர்கள் வீராப்புடன் வரும்போது (எ-று) (56)

கேளாத தீவெட்டி தான்பிடிக்க கெட்டுதடாவனைவோருமு ண்டமாவர் நாளடாகூட்டங்க ளோடிப்போகும் நாமென்ன செய் வோமென்று நகப்பாருளடா யென்னவிதி யிந்தகூத்து சொல் லுவா மென்பார்கள் அனைவோருந் தான் ஆளடாயிந்த ஜாலமத்த ஞர்போகருட கடாட்சந்தானே.

(பொ-ரை) இந்தத் தீவட்டியைப் பிடிக்க யாவரும் முண்டங் களாகவே காணப்படுவார்கள். அப்போது கூட்டங் கலைந்து ஓடிப்போகும். இதைப்பற்றியாவரும் பலவிதமாகப் பேசிக்கொ ள்ளுவார்கள் (எ-று) (57)

பாரப்பா சபைநடுவே யிருந்துகொண்டு புண்பான முக்கா ட்டுபோடு நீயும் சீரப்பா நீலகண்டி தியானமோது சீக்கிரத்திற் கொண்டுவருமெட்ட சனிதான் கூறப்பா வெல்லார்க்கும் கொடுக் கச்செய்நீ குற்றம்வருமீ யொன்றும்புசிக்கவேண்டாம் நேரப்பா போகருட கடாட்சத்தாலேநிச்சயமாய் புலிப்பாணிபாடினேனே.

(பொ-ரை) சபையின் மத்தியி லிருந்துகொண்டு முக்காடு போட்டு நீலகண்டியின் தியானஞ் செய்தால் எட்சணியானவள் சர்வ பொருள்களையும் கொண்டுவருவாள். அதை யவருக்குங் கொடு, நீ சாப்பிடவேண்டாம் (எ-று) (58)

மாம்பழ ஜாலம்.

பாடினே னின்னமொரு வித்தைகேளு பரிவான யோகமிஞ்சி வித்தைவாங்கி ஆடியேபூக் கயிலமாகவாங்கி அன்பான மாங்கனி

தான் சொல்லப்பா கூடியே கனிந்தபழம் கொண்டுவந்து சுகமாகப் பிழிந்துநீனத் தோலைக்கிக்கூடியே யைங்கோலக் கருவுங் கூட்டிக் குணமாகத்த தயிலத்தி லூறப்போடே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தை சொல்லுகிறேன் கேள், எழிஞ்சில் விதையை வாங்கித் தயிலமாக்கி ஒரு மாம்பழம் கனிந்ததாய்க் கொண்டுவந்து செம்பில் பிழிந்து அந்தத் தோலைத் தள்ளி ஐங்கோலக் கருவைக் கூட்டி தயிலத்தில் ஊறப்போடு. (எ-று) (59)

போடப்பா ஒருநாள்தான் கடந்துவாங்கிப் பெலக்குழவி முழுவதுந் வைத்துக்கொண்டு நாடப்பா சபைதனிலே யிருந்த கொட்டை நலமாக யாவருக்கும் கண்ணுறக்காட்டிப் பார்ப்பா குழித்தோண்டிவித்தை கட்டுச்சார்வாகச் சலம்வார்த்து கடைமூடி கூடப்பா நாலுநாழிகைதான் தண்ணீர்வார்த்து [illegible] மூடே.

(பொ-ரை) இப்படி ஒருநாள் ஊறினபின் அதை எடுத்து நிழல் உலர்த்திவைத்துக்கொண்டு சபையில் அதனுடைய கொட்டையை எல்லாருக்குங்காட்டி குழிதோண்டி அதில் அதை நட்டு சலம்வார்த்தால் கூடைமூடு பிறகு நான்கு நாழிகைக்கு மேல் நாலுநாழிகை திறந்து மூடு (எ-று) (60)

மூடவே பின்பாகிக் கொழுந்துமாகி முக்கியமாய்த் தழையாகிப் பூவுமாகித் தேடவே பிஞ்சாகிக் காயுமாகி தெளிவான கனியாகி மதிரும்பாரு ஆடவே அனைவருக்குங் சொல்லச் செப்பு அப்பனே நாழிகைதான் மூன்றேமுக்கால் கூடவே யிதற்குள்ளே மாமுமாகிக் குணமானகனியாகி யிருந்தானே.

(பொ-ரை) அந்தக் கொட்டை இலைகொழுந்து முதலியவை விட்டு பூவுமுள்ளதாய் பிஞ்சு, காய் இவைகளோடு கூடிய செக்க யாகும் அதை மூன்றே முக்கால் நாழிகைக்குள் யாவருக்கும் காட்டிவிடவேண்டும். இல்லையானால் அது உயிர் நீங்கிப்போய்விடும். (எ-று) (61)

இந்திரஜாலம்.

தானே தானின்னமொரு ஜாலவித்தை தயவாகச் சொல்லுகிறேன் என்றுய்க்கேளு மானே தான் மாயமென்ற பூனையென்ற

மைந்தனே பாலையென்ற சிரியொன்று தேனே தானிரட்டைவா லரனை யொன்று தெளிவான திகைப்பூடு பூசிப்பத்து கோனே தான் பேய்பீர்க்கன் விதைதானப்பா குணமுடன் இரண்டுபலம் நிறுத்துப் போடே.

(பொ-ரை) இன்னுமொரு ஜாலவித்தை சொல்லுகிறேன் கேள்:—மாயப்பூனையும், பாலையென்னும் கிறிப்பிள்ளையும் இரட்டைவாலரணையும், திகைப்பூடும், பூச்சி பத்தும் பேய்ப்பீர்க்கன் விதை இரண்டுபலம் நிறுத்துக்கொள். (எ-று) (62)

போடவே புல்லாமணக்கு விதைதானப்பா பொங்கமுடனிரண்டு பலம் நிறுத்துப்போடு ஆட்டேவயிவையெல்லா நறுக்கியப்பா அடைவாகப் பேய்க்கரும்புஞ் சாற்றிற்போடு நாடவே ஜாமமது கடந்துவாங்கி நலமாக நிழல்தனிலே யுலரப்போடு கூடவேயாதளையின் பாலை வாங்கி குணமாக ஒருஜாமமூறப்போடே.

(பொ-ரை) புல்லாமணக்குவிரை இரண்டு பலம், இவைகளை நறுக்கிப் பேய்க்கரும்புச் சாற்றில் ஒரு ஜாமம்வரைக்கும் ஊறப் போட்டுப் பிறகெடுத்து உலரப்போட்டு பின் அம்மட்டிப்பால் வாங்கி அதில் ஒரு ஜாமம் ஊறப்போடு. (எ-று) (63)

போட்டப்பா விவையெல்லாம் பண்டத்திட்டுப் பொங்கமுடன் பூத்தயில மாகவாங்கி தேட்டப்பா யைங்கோலத் தயிலநேரே தெளிவாகச் சேர்த்துநீ யரைப்பாயப்பா தாட்டியாயரைக்கையிலே ரசமும் வெண்ணெய் சார்வாக வகைவகைக்கு கழஞ்சிபோடு வாட்டமிலா முப்பூவுங்கழஞ்சி போட்டுவளமாக வரைத்தெடுத்து சிமிளில் வையே.

(பொ-ரை) இவைகளை யெல்லாம் ஒரு பாத்திரத்தில்போட்டு குழித்தயிலமாக வாங்கி ஐங்கோலத் தயிலத்தைச் சரியாகச் சேர்த்து ரசம், வெண்ணெய் இவை வகை யொன்றுக்கு கழஞ்சும் முப்பூகழஞ்சும் சேர்த்து அரைப்பாய். (எ-று) (64)

வையப்பா ஜாலக்காள் பூசைசெய்து வளமான [illegible] தியானமோது மையப்பா ஹ்ரீம் கிரீம் கிலியும் சவ்வும் தனித்த ஐயும் அவ்வுமுவ்வுங் கூட்டி ஐயமின்றி யவ்வுடனே கூசுவென்

றே யடைவான நீலகண்டியம்மாவென்று மையவேலட்சமுரு செபித்தாயாகுற் பாங்கானமையது முயிர்தாச்சே.

(பொ-ரை) ஜாலக்காள் பூசைசெய்து, ஸ்ரீம், கிரீம், கிலியும், சவ்வும், ஐயும், அவ்வும், உவ்வும், அவ், கூகூ நீலகண்டியம்மா வென்று லட்சமுரு ஜெபித்தால் உமக்கு உயிருண்டாகும். (எ-று) (65)

ஆச்சப்பா நீலகண்டி பூசைசெய்து அடைவாகமையெடுத் தாட்டகேளு பாச்சப்பா நாலேணியொன்று பாங்காக மேற்போடப் படியாய் நிற்கும் விச்சப்பாமையெடுத்து கையில்தேய்த்து விதமாக மண்ணை யள்ளித்திசையிற்போடு கூச்சப்பா வெகுபடைகள் வருகுதென்று கூறுவாய் வெகுபடைகள் வருகும்பாரே.

(பொ-ரை) இவ்விதம் நீலகண்டிபூசை செய்து மையெடுத்து இட்டுக்கொண்டு நாலேறி ஒன்றுபோடப் படியாய் நிற்கும், அந்தமையை எடுத்துக் கையில் தடவி மண்ணையள்ளித் திசைகளில் போட்டு வெகு சேனைகள் வருகின்றனவென்றால் அநேக படைகள் வரும் (எ-று) (66)

பாரடி நீலகண்டியம் மாநீயும் பாங்காக நாலேணிதன்னைக் கொள்ளு சாரடி யென்று நாலேணிதன்னைத் தயவாகச் சொல்லு நீ கோடுபோடு தீரடியந்திரத்திற் சண்டையாகத் தெளிவாகச் செய்யென்று தியானமோது கூரடிபகையெல்லாம் போகுமென்று குணமாகத் தானுரைக்கப் போகும்பாரே.

(பொ-ரை) நீலகண்டியம்மா! நீ நாலேணியைக் கொள்ளென்றும் சேர் என்றும் சொல்லிப் பேசி, யந்திரத்தில் சண்டை செய் யென்று தியானஞ் செய், பகைகளெல்லாம் போகுமென்று சொல்லு அவ்விதமே போய்விடும். (எ-று) (67)

பாரடா நாலேணி மேலேயப்பா பாங்காக வெகுபடைகள் போகும்பாரு சீரடா வெல்லார்க்குங்கண்ணிற்காணுந் திறப்பாக யாவருமே புதுமை யென்பார் கூரடா மையெடுத்து திலதமிட்டு குணமாக நீலகண்டி தியானமோது ஆரடா அந்தரத்திற் சண்டையாக அடைவாக நினைத்து குளாவச் செய்யே.

(பொ-ரை) அந்த நாலேணியின்மேல் அநேக படைகள் போகும் இது எல்லாருடைய கண்களுக்குந் தெரியும் இதை

யாரும் புதுமையென்றே சொல்லுவார்கள். பிறகு அந்த மையை எடுத்து பொட்டிட்டு நீலகண்டியின் தியானஞ் செய்து அந்தரத்தில் சண்டைபோடுவதாக நீ நினைத்து அவ்விதம் செய்யச்செய். (எ-று) (68)

செப்புமே வானத்தில் முழக்கமெத்த செயலாக வாள்பரிகள் கனைக்கும்பாரு, கையிலே வாளுடனே தண்டையாங்கிக்கனிவாகமையூசி வெட்டும்போது, ஐயமின்றி பொடிபொடியாய் வெட்டிவீசு ஆள்தலைகள் வருமென்பாரறிந்துபாரு, மையிலே கூழ்பாண்டத்தடவி வெட்டிமகத்தான ஆனையுடதலை யென்பாரே.

(பொ-ரை) அவ்விதமே ஆகாயத்தில் திசை முதலியவைகள் கனைக்கும், கையில் வாள் தண்டு இவைகளை வாங்கி மையூசி வெட்டும்போது சந்தேகமில்லாமல் பொடிப் பொடியாய் வெட்டி வீசும் ஆளின் தலைகள் வரும். அதில் பூசினிக்காயை வெட்டினால் ஆனைத்தலையென்று சொல்லுவார்கள். (எ-று) (69)

பாரப்பா பூசினிக்காய் பூசிவெட்டப் பாங்கான குதிரையுடதலையென்பார்கள் காரடா கெச்சக்காய் தன்னிற்பூசிக் கடிதாகத் தான் வெட்டச் சொல்லக்கேளு ஆரடா கோடிபடை மிறந்ததென்பார் அப்பேனை மகேந்திரஜாலந்தான் ஜாலம் நேரடா தலைகளெல்லாமெடுத்து மூடிநிச்சயமாய்ப்படைகளெல்லாம்போவென்பாயே.

(பொ-ரை) அதைப் பூசினிக்காயில் தடவி வெட்டினால் குதிரைத்தலையென்று சொல்லுவார்கள். கெச்சைக்காயிற் பூசி வெட்ட அநேக சேனைகள் இறந்ததென்று சொல்லுவார்கள் இதுவே உயர்ந்த ஜாலமாகும். ஆகையால் அந்த தலைகளையெல்லாம் எடுத்து மூடி போவென்று சொல்லுவாய். (எ-று) (70)

மயேந்திரஜாலம்.

என்னப்பா மிருகமெல்லா மறைந்து போகுமெழில் நீலகண்டி நாலேணியீவாள் தென்பாகத்திலதந்தை பழித்துப்போடு தெளிவாக இன்னமொரு வித்தைகேளு வன்பான ஜாலக்காள் தியானமோதி வன்மான மையெடுத்துக் கையிற்பூசி அன்பாக மண்ணள்ளித்திசையிற்போடு அதைவாகமலையாகத்தோற்றும்பாரே.

(பொ-ரை) அப்படி சொன்னவுடனே அவைகளெல்லாம் மறைந்துபோய்விடும் அதற்கு நீலகண்டியால் வெளிசொடுப்பாள்.

அப்பொழுது பொட்டைக்கலைத்துவிடு. இன்னுமொருவித்தை யைக்கேள். ஜாலக்காரனாத் தியானஞ்செய்து மையை யெடுத்துக் கையிலேபூசி மண்ணையள்ளி அஷ்டதிசைகளிலும் போட அது வே மலையாகக் காணப்படும். (எ-று) (71)

பாரடா அஷ்டகுல பர்வதங்கள் பாங்கானமகமேரு கயிலைய ப்பா சீரடா பொதிகைமுதல் மலைகள்தோற்றுஞ் சிறப்பாக வதி லிருக்குந் தேவர்சித்தர் நேரடா முத்தரொடு முனிவர்தாமும் நெ டியவிருட்சங்கள் குகைவாசல் தானுங்கூரடா விதுகளெல்லாங் கண்ணிற்றோன்றுங் குணமான போகருட கடாட்சந்தானே.

(பொ-ரை) அஷ்டகுல பர்வதங்கள், மகமேரு, கயிலை, பொ திகை இவை முதலாகிய மலைகள் காணப்படும். அவைகளிலிருக் கும் தொனிகள், சித்தர்கள், முத்தர், முனிவர் நெடிய விருட்சங் கள் இவைகளெல்லாம் கண்ணுக்குக் காணப்படும். போகருடை ய கடாட்சமாகும. (எ-று) (72)

சமுத்திரஜாலம்.

தானென்ற மகேந்திரத்தின் ஜாலமாச்சு தயவாகச் சாகரத்தின் ஜாலங்கேளு வாவென்ற மையெடுத்துக் கையிற்பூசி வளமாகமண் ணள்ளித் திசையிற்போடு கோவென்ற சத்தசாகர மேழரேழும் குணமாக முன்காண வருகும்பாரு தேனென்ற தீவாந்திரமெல் லாந் திருமாலும் லட்சுமியுந் தோற்றும்பாரே.

(பொ-ரை) மகேந்திரஜாலம் தீர்ந்தது. இனி சமுத்திரஜா லம் சொல்லுகிறேன் கேள். அந்த மையை எடுத்துக் கையிற்பூசி மண்ணையள்ளித் திக்குகளில் போடு எழுசமுத்திரங்களும் காணும் படி வரும், தீவாந்தரங்களெல்லாங் காணப்படும். விஷ்ணுவும், லட்சுமியுங்கூடப் காணப்படுவார்கள். (எ-று) (73)

பாரடா கப்பலொடு படவுதோணி பலமச்சம் நீர்வாழுஞ் சாதியெல்லாம்நேரடாசெகத்தோர்க ளெல்லாம்பார்த்து நிச்சய மாயிவனல்லோ தேவனென்பார் ஆரடா சாகரத்தில் ஜாலஞ்சா லம் அன்பான சாலக்காரன் வித்தையப்பா தீரடாபோகருட கடா ட்சத்தாலே திரமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) கப்பல், படவு, தோணி, மச்சங்கள், நீர்வாழு சாதிகள், இவைகளெல்லாம் காணப்படும். இவைகளை உலகத் தவர்கள் பார்த்து இவனல்லவோ தேவன் என்று சொல்லுவார் கள். இது ஜாலக்காரனுடைய வித்தையாகும். (எ-று) (74)

சங்கிலிஜாலம்.

பாடியேயின்னமொரு வித்தைசொல்வேன் புரங்காக மையெ டுத்துக் கையிற்பூசி ஆடியே நால்கயறுசங் கிலிதானப்பா அறிய வெட்டிப் பாறைமந்திரவாளுங் கூடியே வாய்மேலே கையைவை த்துக் குணமாகப் பின்னிழுத்துக் கீழேயோடு நாடியே யனைவோ ரும் பார்த்துப் பார்த்து [illegible] விழுங்கிவிட்டா னென்பார் தானே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தை சொல்லக்கேள் மையை யெடுத்துக் கையில்பூசி [illegible]போல சங்கிலியை வெட்டி மந் திரவாளும் கூடிவாய் [illegible] வைத்து பின்னே இழுத்துப் போடு அதை யாவரும் எல்லாரையும் விழுங்கிவிட்டானென்று சொல்லுவார்கள். (எ-று) (75)

பட்டணஜாலம்.

தானென இன்னமொரு வித்தைகேளு தங்கராக்காலமும் வெ ளியிற்சென்று மானன வேரிடத்தி லிருந்துகொண்டு மைந்தனே மையெடுத்துக் கையிற்பூசி வானன மண்ணள்ளித்திசையிற்போடு வளமான பட்டணமாய்த் தோற்றும்பாரு தேனென தெருக்க ளொடு தெருவுந் தோற்றுந்திறமாகக்கடைவீதி தோற்றும்பாரே

(பொ-ரை) இன்னுமொரு ஜாலத்தைக் கேள்:—யாவரும் காணாதபடி ஒரு இடத்திலிருந்துகொண்டு மையை எடுத்து கையி ற்பூசி மண்ணள்ளி திக்குகளில் போடு அப்பொழுது அது யாவ ருக்கும் பட்டணமாய்க் காணப்படும், அதில் தெருவு தெருக்களு வும் தெரியும். (எ-று) (76)

பாரடா மனுக்கூட்ட மனந்தந்தோற்றும் பகுத்தகோபுரங் கோவிற் குளமுந்தோற்றும் சீரடா வேதியர்கள் வீதிதோற்றுஞ் சிறப்பான ராஜமனுசருமதோற்றுங் கூட்டமெங்க பேனேதோ ற்றுங் குணமான செல்[illegible] தோப்புந் தோற்றும் வீரடா போகருட கடாட்சத்தாலே திடமாகப் புலிப்பாணிபாடினேனே.

(பொ-ரை) மனுஷாள் கூட்டம் அநேகர் தெரியும், பெரிய கோபுரம் கோவில், குளம் இவைகள் தெரியும், பிராமணவீதி, ராஜசமுகம், சதுரங்கசேனை, செந்நெல், தோப்பு இவைகளெல்லாங் காணப்படும். (எ-று) (77)

பாடினே னின்னமொரு தொழிலைக்கேளு பண்பான கொடிதனிலைங் கோலஞ்சேர்த்து நாடியேசாம்பிராணி தயிலங்கூட்டி ந-ம-சி-வ-ய-ஓம்-கிலீம்-சவ்வும்-ஐயும்-கூடியே சர்வபாசாசாக்ருஷ்ணியென்று குணமாக லட்சமுரு செபித்துத்திருஆடியே யிதை செபித்துத் தூபம்போட ஆடுவார் புகைபட்ட ஜெனங்கள் தானே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தையைக் கேள். ஒரு கொடியில் ஐங்கோலத்தைக் கூட்டி சாம்பிராணி தைலத்தையுங்கூடச் சேர்த்து ந, ம, சி, வ, ய, ஓம், கிலீம், சவ்வும், ஐயும், சர்வபசாசஆக்ருஷ்ணி என்று லட்சமுருசெபஞ்செய்து தூபதீபங்கொடுக்க இந்தப்புகைபட்ட ஜெனங்களெல்லாம்ஆடுவார்கள். (எ-று) (78)

குறளிஜாலம்.

தாமென்ற குறளியுட தியானங்கேளு தயவாக ஓம் அவவும் உவ்வு மவ்வும் தேனென்ற ஸ்ரீமுடனே இரீமுங்கூட்டித் தெளிவாகிலியுடனே வயநமசியென்று கோவென்ற குறளிவரவாயுரியும் குணமாகச் சொன்ன தெல்லாம் செய்வாயென்று வாவென்ற இந்திரஜால மையையப்பா வகையாகத் தாமெடுத்துச் சொல்லக்கேளே.

(பொ-ரை) இனிக் குறளிதியானத்தைக் கேள்! ஓம், அவ்வும், உவ்வும், மவ்வும், ஸ்ரீம், இரீம், கிலியும், வயநமசி ஓம் குறளி வருவாய் வந்து நான்சொன்னதெல்லாம் செய்வாய் என்று சொல்லி இந்திரஜால மையை எடுத்து (எ-று) (79)

கோகரணஜாலம்.

கேளப்பா குறளியைத்தான் லட்சமோதி கெணிதமாய்ப் பலிபூசை நடத்தியப்பா சூலப்பா மையெடுத்து விரலிற்றொட்டுச் சுகமாகக் குறளியைத்தான் தியானமோது வாளப்பா மேலெங்குந் தொட்டாயானல் வகையாகத் தொட்டவிடங் கிழிக்கவேண்டும் ஆளப்பா செய்யென்று நினைத்துக்கொண்டு அப்பனே தொட்டவிடங் கிழிக்குமப்பாமே.

(பொ-ரை) இவ்விதம் லட்சம் உரு செபித்து பலி, பூசை இவைகள் செய்து மையை விரலிற்றொட்டு குறளியைத் தியானஞ் செய்து மேலே எவ்விடங்களிலுந் தொட்டு அப்படி தொட்டவிடமெல்லாம் கிழிக்கவேண்டுமென்று நினைத்தால் அவ்விடமெல்லாம் கிழியும், (எ-று) (80)

கஜகர்ண ஜாலம்.

பாரென்ற கோகரண வித்தானப்பா பண்பான கெஜகரணஞ் சொல்லக்கேளு சேரென்ற மையெடுத்து விரலிற்றொட்டு செம்மையாய்க் குறளியுட தியானஞ்செய்து வேறென்ற இருகாதுந் தொட்டபோது விதமான இருகாது மாடுமப்பாரு தானென்ற கஜகரண வித்தானப்பா தயவான போகருட கடாட்சந் தானே.

(பொ-ரை) இதுதான் கோகரணவித்தை, இனி கஜகர்ணஞ் சொல்லுகிறேன் கேள். மையை எடுத்து; விரலிற்றொட்டு குறளி தியானம் பண்ணி இரண்டு காது காதையுந் தொட்டால் இரண்டு காதுகளும் ஆடும். இதுவே கஜகரணவித்தையாகும் (எ-று) ()

தானையா காளியுடைய தியானங்கேளு தயவான அரிகாளி யாகாசகாளி ஏனையா ஒடிகாளி வீரகாளி உற்பனமாஞ் சூலகபாலகாளி மூனையா மோடிதேவி பூமிகாளி முதன்மையாம் ஓங்காளியொடு பிடாரி வாரையா மாகாளி போடிகாளி வளமான மந்திரமா காளியென்னே.

(பொ-ரை) இனி காளிதியானங் கேள். அரிகாளி, ஒடிகாளி, சூலகபாலகாளி, மோடிதேவி, பூமிகாளி, ஓங்காளி, ஓம் பிடாரி, மாகாளி, போடிகாளி, மந்திரமாகாளி என்று சொல். (எ-று) (82)

என்னவே ஓம்-ஆம்-கோதண்டரூபி ஒளிதானையாளி வாகனத்திலேறி வெண்ணவே யரசெரம் சடைகள் மெச்ச இருதலைகை கொடியுடன் வேதாளஞ் சூழ அன்னவே யாங்காரசத்தி கொண்டு அடைவாக வாவென்று லட்சமோதிப் பண்ணவே பூசைசெய்து வெள்ளிதோறும் பாங்காக செய்தாக்காற் சித்தியாமே.

(பொ-ரை) ஓம், ஆம், கோதண்டரூபி, ஆளிவாகனத்தின் மேலேறிச் சபையார்கள் மெச்சகொடி முதலியவைகள் பிடித்துக் கொண்டுவர ஆங்காரசத்திகொண்டுவா வென்று லட்சமுரு செபித்து வெள்ளிக்கிழமைகளில் பூசைசெய்தால் சித்தியாகும் (எ-று) (83)

செப்பிடு வித்தை

சித்தியாம் வித்தையொன்று சொல்லக்கேளு செம்புஞ்சபஞ்சுக் கோல்தானென்று வெற்றியாய் சபைதனிலே யிருந்து கொண்டு விளையாடுங் காளியுட தியானமோது பத்தியாய் சாலைமையக் கோலிற்றேய்த்துப் பண்பான செம்பஞ்சு மாடும்பாரு சத்தியா சபைதனக்குத்தும் லட்சம்பந்தாய் தூர்வாக ஆடுமடா தாழ்வில்லாதே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தை சொல்லுகிறேன் கேள். செம்பஞ்சுபஞ்சு இஞ்சம், கோல் மூன்றும் இவைதனைக் கொண்டு சபையில் இருந்துகொண்டு விளையாடுகின்ற காளி தியானஞ்சொல்லி சாலைமையைக் கோலில்தேய்த்துவிட்டால் செம்பஞ்சும் ஆகேசபந்தாக ஆடும் (எ-று) (84)

எட்டிமுளி வித்தை

இல்லப்பா அறுபத்துநாலுமோடி இதமாக வைத்தமட்ட வித்தகாளி யெல்லப்பா யின்னமொரு வித்தைகேளு வளமான கொடியுஞ் சிலை சேர்த்து கொள்ளவெலி சலத்தினுட தயிலங் கூட்டிக் குணமான வெங்கோலத் தயிலஞ்சேரு செத்தவே மூன்றையுங் கருத்தித்து கொண்டு செம்மையா யம்பிலே யரைத்திடுமே.

(பொ-ரை) இந்தக்காளி அறுபத்துநான்கு மோடிவித்தை சொல்லிப் இன்னமொரு வித்தையைக்கேள், கொடியுஞ் சிலையையுஞ் சேர்த்து சலத்தின் தயிலத்தைக்கூட்டி வெங்கோலத் தயிலத்தையுங் கூட்டிச்சேர்த்து இவை மூன்றையுங் கருக்கிக்கொண்டு அம்பில் அரை. (எ-று) (85)

அரைத்தெடுத்துச் சிமிழதனில் வைத்துக்கொண்டு அடைவாக மந்திரத்தைச் சொல்லக்கேளு கிரையாம யங்கவ்வும் சிவாகாவென்று கிரமாக லட்சமுரு செபித்துப்போடு கருத்துடனே

எட்டிமுளை தன்னைச் சீவிக் களிவாக மந்திர மாயிரந்தானுரு நிறைத்தம்கா பூசைபலி பெலக்கச்செய்து நினைவாக முளையெடுத் துக் கடாவுவாயே,

(பொ-ரை) அவ்விதம் அரைத் தெடுத்து சிமிளில்வைத்து யாமை, யங், வங், சிங்சுவாகா வென்று லட்சமுரு செபித்து கருவைந்தடவி எட்டிமுளையைச் சீவி ஆயிரமந்திரஞ்சொல்லி பூசை பலிமுதலியவை செய்து முளையை யடிப்பாய். (எ-று) (86)

கடாவுவாய் கண்டமுன்னே கடையில்லாது களிவாகச் செக்கடியி லெண்ணெயில்லை அடாவுவதியபடி சாவுமில்லை யப்பனே இன்னமொரு முன்னதாகக் கிடாவசவே லஸ்துவைதும் பிறக்கா தப்பா இருக்கையுள்ள குளையது வேகாதப்பா கடாவியே கொல் லுலை சுண்ணாம்புச் சூளை நல்மான செங்கல்லின் சூளைதானே.

(பொ-ரை) இப்படி செய்தால் ஒருகண்டமுன் ஒருகடையில் லாது செக்கடியிலும் எண்ணெயிராது கரும்பாலையில் சாறுமில் லை, வஸ்துவும் இறக்காது சூளைவேகாது கொல்லனுலை சுண்ணாம்புச்சூளை செங்கல் சூளை இவைகளும். (எ-று) (87)

தானே தான் பானைமுன்பு பிணம் வேகாது தயவான மக்க மடி யிசைவுமில்லை தேனே தான் தச்சனொடு கன்னான் தட்டான் தெளிவாகப் பட்டாடை முன் தாக்கிடுபசு மானை தான் பரி காரி சிலைக்குளும் பக்கல் மைந்தனே யிப்படியில் வேகாதென் றும் வானின்றி னிதுவெல்லாந் தம்பஞ்செய்யும் வளமான பேர்கருட ஆடாடச்சந்தானே.

(பொ-ரை) பிணம், தச்சன், கன்னான், தட்டான், இவை முதலியவர்கள் அடுப்பில் ஒன்றும் வேகாதபடி இவைகளை யெல் லாம் ஸ்தம்பனஞ் செய்யும் (எ-று) (88)

தாவென்ற வெள்ளாவி வேகாதப்பா கோவென்ற விசுற களத்தில் ராசி குன்றுங் குளமான உப்பளமும் விளையும்பாதம் தேவென்ற ராசியது குறையும்பாரு தெளிவான மீன்கரையில் மீன் கிட்டாது ஆவென்ற கொட்டணத்தில் நெற்களெல்லாம் அப்பனே மசியாது கண்டபோமே.

(பொ-ரை) வெள்ளாவி வேகாது நெற்களம், உப்பளம், இ வைகளில் செய்தால் அவைகள் ராசிகாணமல் குறையும், மீன்க

ரையில் மீன், அகப்படாது. நெல்கொட்டணத்தில் மசியாது. (எ-று) (89)

பாரடா நாவிதுன்னைச் சுட்டகோதும் பண்பான மூளை செதுக்கு உகாரம்நாட்டி சீரடா வைங்காக் கருவும்பூசி சிறப்பான வெதிரி மலத்தன்னில் தாக்க வீரடா முன்பின்னு மடைக்கும் பாரு விதமாக காரணமாய்ப் போவானையா கூாடா மூளையிடுங்கி நீரிற்போடக் குணமாகு மடிந்ததெல்லாம் நிவிர்த்திதானே.

(பொ-ரை) நாபியைச் சுட்டகோதும், மூளைசெதுக்குக்கு உகாரம் நாட்டி ஐங்கோலக்கருவையும்பூசி எதிரியின் மலத்தால் போட மலசலங்களை யடைத்துவிடும். உடனே மூளையை சலத்தில் போட்டுவிட அவையெல்லாம் விர்த்தியாகும். (எ-று) (90)

சண்டைஜாலம்.

தானென்ற யிஞ்செடியில் காக்கையென்ற தயவான மூலிகை யொன் றென்னசொல்வேன் ஊனென்ற லிங்கையிலே குரங்கு மூலி யுத்தமனே மலைதோறு முண்டுமுண்டு வானென்ற விருமூலி வேணமட்டும் வகையாகப் பிடுங்கிவந்து சொல்லக்கேளு ஆனென்ற யிஞ்செடியில் காக்கைமூலி அப்பனே யொருசாக்கில் கட்டி மேல் வையே.

(பொ-ரை) காக்கைப்பூண்டு என்கிறமூலிகையும், கொரங்கு மூலிகையும் மலைகளிலெல்லாம் உண்டு. இவ்விரண்டை வேண்டிய வரைக்கும் பிடுங்கிக்கொண்டுவந்து இவைகளை ஒரு சாக்கில் கட்டி கடைமேல் வை. (எ-று) (91)

வையடா லிங்கையிற் குரங்கையப்பா வளமான ஒரு சாக்கில் வைத்துப்போடு பையவே யாருகருங் காணவிட்டால் பண்பாக விருமபிலே பதித்துப்போடு ஐயோதா னிதன்கொடுமை சொல்லப்போமோ அப்பனே யிருகடையிலே யடித்துக்கொள்வார் கைவே தம்பியென்று கூப்பிட்டாலும் கடுமொழித்தா னென்று கண்டிப்பாரே.

(பொ-ரை) இலங்கையின் குரங்கு மூலிகையை ஒருசாக்கில் வைத்துப்போடு யாருக்குங் காணவிட்டால் இரும்பில் பதைத் துப்போடு இதனுடைய கொடுமையைச் சொல்லக்கூடுமோ? இர

ண்டுகடைக்காரர்களும் அடித்துக்கொள்வார்கள். தம்பியென்று கூப்பிட்டாலும் கடுமொழிகள் சொன்னதாகவே சொல்வார்கள். (எ-று) (92)

மாடன் மந்திரம்.

பாரடா நஞ்சுண்டு மரித்துப்போன பரிவான மனிதரைத் தான் தகனம் பண்ணிச் சீரடா காடாற்று முன்னேதானுஞ் சிறப்பாகக் கரிபதிலே யெடுத்துக்கொண்டு வீறான வைங்கோலக் கருவதனைத் தொட்டு விதமாக வாகாய்போலே மண்டையீறித் நேராக முகமதுதான் குறித்ததாகத் திறமாகச் சுவரில்தனி லெழுதிப் போடே.

(பொ-ரை) விஷத்தின்று இறந்துபோன மனிதனை தகனம் பண்ணிக் காடாற்றுமுன்பே அதிலுள்ள கரியை எடுத்துக்கொண்டு அதில் ஐங்கோலக்கருவைப்பூசி மணியைகீறி முகங்கீறினாற் போல் சுவரிலெழுதிவிடு. (எ-று) (93)

போடப்பா வெதிரியின்பே ரதின்கீழ்நாட்டிப் பொங்கமுட னுகரச நாமேனு கூடப்பா லட்சமுரு செபித்துப்போடுவ. குணமான மந்திரந்தான் சொல்லக்கேளு நசிப்பா ஓம்நமோபகவதே நலமாக ஓம் படு சுவாவென்று ஆமப்பா பூசைபலி பலக் கச் செய்து அடைவாக மந்திரந்தா னோதக்கேளே.

(பொ-ரை) எதிரியின்பேரை அதின்கீழ் எழுதி ஆகாயமாடனைக்குறித்தொரு லட்சமுருசெபித்துவிடு. அதற்குமந்திரம் ஓம், நமோ பகவதே ஓம், படு-சுவாகா வென்று சொல்லி பூசைபலி கொடுக்கவேண்டும். (எ-று) (94)

தேனடா கரியைத் தகட்டிலப்பா செனிதமாய் மந்திரத்தை யெழுதிப்போடு கோனடா வெதிரியுட பேரைநாட்டுந் சுகமான வைங்காயங் கோலஞ்சேர்த்து ஆனமா சுடலையுட கருவுங்கூட்டி அப்பனே மந்திரத்தைத் தகட்டிற்பூசி மானடா பூசைபலி பலக்கச் செய்து வளமாக மாடனைத்தான் தியானம்போதே.

(பொ-ரை) கரியைத் தகட்டில் மந்திரத்தையெழுதி எதிரியின் பேரை நாட்டி ஐங்கோலஞ்சேர்த்து சுடலையின் கருவையுங்கூட்டி எல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து தகட்டில்பூசி மாடனைத் தியானஞ் செய். (எ-று) (95)

ஓதியே மாடனைத்தான் கட்டிக்கொண்டு வெளிவான வாகாச மாடனையும் வாதியாக் கல்லிந்தா விந்தாவென்று வகை யாகச் சொல்லியபின் கல்லுதானும் ஆதியாந் தகட்டின்மேல் வைத்தாயானால் அப்பனே கல்லதுவு மளவராது பாதியேயொரு கோடி பூதமெல்லாம் பார்த்திருக்கத் தானெறியுங் கல்லுதானே.

(பொ-ரை) கட்டிக்கொண்டு, ஆகாசமாட கல்இந்தாவென்று சொல்லிய பின்னை கல்லைத்தகட்டின்மேல் வைத்தால் பூதமெல் லாம் பார்த்திருக்க கல்லுகளை வாரி எறியும். (எ-று) (96)

தானேதான் மண்ணெடுத்துச் சாலைக் கற்கள் தயவாக மாட் டெலும்பு செங்கல்முட்டை மானேதா னவபாண்ட மரிசியுப்பு வளமான மிளகுபொடி நிட்டுச்சிலை வானேதான் குப்பையொடு கண்டதெல்லாம் வாரியே தானெறியும் பின்னர்தன்னில் கோனே தானெதிரியோ மிடங்களெல்லாஞ் சொற்றவனே யவனருகே போகும் பாரே.

(பொ-ரை) மண்ணை எடுத்து, சாலைக்கற்கள், மாட்டெலும் பு, செங்கல்முட்டை, நவபாண்டம், அரிசி, உப்பு, மிளகுப்பொ டி நிட்டுச்சிலை, குப்பை இவைகளோடு கண்டவைகளை யெல்லா ம் வாரிவாரி எறியும், எதிரிகள் போகின்ற இடங்களிலெல்லாம் அவைகள் கூடவேபோகும். (எ-று) (97)

பாரடா சத்துருவும் வணங்கி வந்தால் பண்பான மாடனை யழித்துப்போடு விரடாமாடனை கல்லைத்தானும் விதமாகத் தா னென்றே கெடுத்துப்போடு சீரடா சரணமிட்டு யெழுதிப்போடு திறமாகச் சக்கரத்தைக் கழுவியும் கூரடா ஜலந்தனிலே விட்டுப் போடு குணமாக மாடனைத்தான் பூசைசெய்யே.

(பொ-ரை) பகைவனானவன் வணங்கிவந்தால் மாடனை அழி த்துவிட்டுக் கல்லைக்கெடுவென்று கேட்டு சரணஞ் செய்து எழு தி சக்கரத்தைக்கழுவி மாடனைப் பூசைசெய். (எ-று) (98)

கொள்ளி ஜாலம்.

செய்யவே பின்னமொரு வித்தைகேளு சொன்னகொள்ளி வாயினுட ஜாலமப்பா பையவே சிவவசி யென்றுலட்சம் பாங்கா கத்தான்செபித்துப் பூசைசெய்து உய்யவே அக்கினியைத் துணி

யிற்சுற்றி யுத்தமனே தகட்டிலட்சரைத் கீறிக் கையவே வயங் காயமைங்கோலந்தான் கனிவாகச் சுடலையுட் கருவும்பூசே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தைகேள். இது கொள்ளிவாய் ஜாலமாகும். சிவவசி என்று லட்சம் உரு செபித்துப் பூசைசெ ய்து அக்கினியைத் துணியில் அன்றி தகட்டில்கீறி அட்சரை போட்டு ஐங்கோலம் சுடலைக்கரு இவைகளைப் பூசுவாய். (எ-று) (99)

பூசியேயெதிரினிட பேரைநாட்டிப் பொங்கமுடன் பூசித் துக்கொள்ளிவாய்க்கு ஆசியேபந்தெடுத்துத் தகட்டில்வைத்தே யப்பனேயிருதலைக் கொள்ளிதானும் வாசியேயுசத்துருவின் மனை கள்தோறும் வைத்துக்கொளுத்தென்று தியானமோது காசியே கொளுத்துமடா திரியும்பந்து கடிதாகக் கொளுத்திவிடுங் கண்டு பாரே.

(பொ-ரை) எதிரியின்பேரை எழுதி பூசைசெய்து கொள்ளி வாய்க்கு பந்து எடுத்து தகட்டில்வைத்து இருதலைக்கொள்ளி ப கைவர்களுடைய வீடுகளைக் கொளுத்தென்று சொல்லி தியானஞ் செய், அதுவும் அப்படியே கொளுத்திவிடும். (எ-று) (100)

மலக்குட்டி.

பாரடா மலக்குட்டி தியானங்கேளு பாங்கான ஓம் இரீம் வாவென்று கூறடா மலக்குட்டிச் சாத்தானென்று குணமாக தான்வைத்த பூசைகொண்டு வீரடா நான்சொல்லும் வேலைகேட்டு வீணாகமலமதனை வாரியும் சேரடா நானினைத்த விடத்திற்போடு செப்பியிது ராஜபூசி பலக்கச்செய்யே.

(பொ-ரை) மலைக்குட்டியின் தியானத்தைக் கேள். ஓம், இரீம், வாகுட்டிச் சாத்தானென்று சொல்லி பூசைசெய்து நான் சொல்லும் வேலையைக் கேட்டு மலங்களை யெல்லாம் வாரி நான் நினைத்த விடத்தில் போடு என்று சொல்லி ராஜபூசைசெய். (எ-று) (101)

மலக்குட்டிஜாலம்.

செய்யவே மந்திரத்தை தகட்டிலேகீறி செம்மையாயைங்காய மைங்கோலஞ் சேர்த்து வையகத்திற் சுடலையுட கருவுங்கூட்டி

வளமாகமத்தித்துத் தகட்டிற்பூசிப் பையவே யெதிரிபேர் தகட்டில் நாட்டி பாங்காகமந்திரத்தை லட்சமோது ஐயமின்றிப் பூசை பலிபலக்கச்செய்து அப்பனே மலமெடுத்துத் தகட்டில்வையே.

(பொ-ரை) மந்திரத்தைத் தகட்டிற்போட்டு ஐங்கோலம் இவைகளைச் சேர்த்து சுடுகாட்டுக்கருவையும் சேர்த்து மர்த்தித்து தகட்டில்பூசி எதிரிபேரை தகட்டில்போட்டு மந்திரத்தை லட்சமுரு செபித்து பூசை பலிமுதலியவைசெய்து மலத்தை யெடுத்து தகட்டில் வை. (எ-று) (102)

வைக்கையிலே மலமிந்தா மலகுட்டியென்று வைத்தல்லோ மந்திரத்தைத் தியானஞ்செய்நீ வலக்கையிலே மலமதனைவாரிக் கொண்டு அடைவாக நீநினைத்த விடங்கள் தோறுஞ் சொக்கையிலே தகமெடுத்துக் கழுவிப்போடு சொகுசாகப் போகுமடா தீர்க்கமாக உக்கைலேயிதுவல்லோ வுலகபேத முத்தமனே மலக்குட்டிச் செய்கைதானே.

(பொ-ரை) வைத்து ஒமலக்குட்டி.மலம் இந்தா என்றுசொல்லி மந்திரத்தைத் தியானஞ்செய்து பிறகு வலது கையில் மலத்தைவாரி, நீ நினைத்த விடங்களெல்லாம் சேர்த்துத் தக்டை எடுத்துக் கழுவிவிடு இதுவே மலக்குட்டியின் செய்கையாம். (எ-று) (103)

கவச மந்திரம்.

தானேதான் கவசமொன்று சொல்லக்கேளு நயவாக ரீங்காரம் வெள்ளிமுகட்டில் மானேதான் இம்-உம்-கம்-ரமாங்-சிங் கென்று மைந்தனே யாயிடாகினி மாங்கினி ஊனேதான் விஷ்ணு சகோதரி சர்வாணியுமைதேவி பாரசத்தி நவசியென்று கோனே தான் லட்சமுரு செபித்துப்போடு கொற்றவனே சத்திசிவ பூசைசெய்யே.

(பொ-ரை) கவசமந்திரமொன்று சொல்லுகிறேன் கேள்:— ரீங்காரம், இம், உம், கம், ரடகாங், சிங் என்றும், ஆயி, டாகினி, மாகினி, விஷ்ணுசகோதரி, சர்வாணி, உமை, தேவி, பாரசத்தி நவசி என்று வெள்ளிக்கிழமைகளில் லட்சமுரு செபித்து சத்தி, பூசை சிவபூசை இவைகளைச் செய். (எ-று) (104)

செய்படா தியானமிட்டு விபூதிபூசிச் செகதலத்தி லேவல் முதல் பிசாசுபூதம் பையவே புதையிலே வேர்பிடுங்கிப் பகர்ந்த கருத்தடவிச் சக்கரங்கல்லாட்டல் நையவே பார்வையுடன் சூறணி கூட்டி நலமாக மற்றுள்ள சூனியங்கள் கையவே கல்லெறிக்கு நீக்குமப்பா கனிவாக மந்திரத்தை எழுதிக்கட்டே.

(பொ-ரை) தியானஞ்செய்து விபூதியைப்பூசி, ஏவல், பசாசு, பூதம், இவைகளுக்கு வேர்பிடுங்கி கருவைத்தடவி சக்கரத்தில் கல்லாட்டில் பார்வை, சூறணி இவைகளைக்கூட்டில் மற்றுமுள்ள சூனியங்கள் கல்லெறி இவைகளை நீங்கும். ஆனால் மந்திரத்தை எழுதிக்கட்டுவாய். (எ-று) (105)

ஒண்டிமூலிகை.

கட்டப்பா மூலியொன்று சொல்லக்கேளு கனிவாக வொண்டியுட மூலிக்கேதான் கிட்டப்பா அமாவாசைக் கிராணகாலங்கிருபையுள்ள அருக்கனுளே தொன்றுல் கெட்டப்பா பொங்கல்பலி பூசைசெய்து நேராக வேரெடுத்துக் கட்டிக்கொண்டால் பட்டப் பார்வை முதலெதுவாலும் பரத்திலணுகாமல கன்றுபோமே.

(பொ-ரை) ஒரு மூலிகையைச் சொல்லுகிறேன் கேள்:— ஒண்டிமூலிகைக்கு அமாவாசையிலாவது கிராணகாலத்திலாவது காப்புகட்டி ஞாயிற்றுக்கிழமையிலாவது காப்புகட்டி, பொங்கல் பலி பூசை இவைகளைச்செய்து வேர்பிடுங்கி கட்டிக்கொண்டால் பார்வைமுதல் யாவுந் தீரும். (எ-று) (106)

பார்வைமை.

போமப்பா ஆமையொன்று மணத்தவளை யொன்று பொங்கமுடன் கோழியுட முட்டை யொன்று தாமப்பா புதைத்தெலும்புபலந்தான் ரெண்டு தயவானஈசலது பலந்தான்ரெண்டு நாமப் பாகிலவாகை விதைதானப்பா நாயகனே பலமிரண்டு நிறுத்துப் போடு ஆமப்பா மரக்கொடிதான் வரகன் மூன்று அனைடவர்கட்கூத்தயில மாகவாங்கே.

(பொ-ரை) ஆமையொன்று, தவளையொன்று, கோழிமுட்டையொன்று, புதைத்த பிண எலும்பு இரண்டு பலம், ஈயம் இரண்டுபலம், நிலவாகைவிதை இரண்டுபலம் மதுக்கொடி மூன்று வராகனெடை இவைகளை யெல்லாம் [illegible] வாங்குவாய். (எ-று) (107)

வாங்கிய தயிலத்தை யெடுத்துக்கொண்டு வள்மர்ன் குழி யம்மிதன்னிற்போடு தாங்கியே யஞ்சனக்கல்வராக னென்றுதான் போடு ஆள்காட்டி முட்டைநெய்யிற் பாங்கியே கொஞ்சமது கூடவிட்டுப் பரிவாகவொரு சாமந்தானரைத்துக் காங்கியே சிமிழில்வைத் தனுமா நுக்குங் கனிவாக அஞ்சனிக்கும் பூசைசெய்யே

(பொ-ரை) அந்தத் தயிலத்தை கல்வத்திலிட்டு அஞ்சனக்கல் வராகனென்று ஆள்காட்டி குருவிமுட்டை நெய் கொஞ்சம்கூட விட்டு ஒருசாம மரைத்து சிமிளில்வைத்து அனுமாருக்கும், அஞ்சனதேவிக்கும் பூசைசெய். (எ-று). (108)

செய்யப்பா மையெடுத்துப் பார்க்கும்போது செயலான எவமுதலேவலப்பா வையப்பா தொழில்முன்றையுந் தெய்வபூத வளமான பிசாசு,ராட்சதகணங்கள் மையப்பா மோடிதானொரு வன் செய்தால் பாங்காகயவன் செய்கைதோற்றமாகுங் கையப் பாபிதுபார்வை மைதானப்பா கனிவாக சொல்லுமட்டா கருத் தாய்த்தானே.

(பொ-ரை) அந்த மையைப் போட்டுப்பார்க்கும்போது, ஏவல், ஏவல், தல்லமுன்ற தெய்வம், பூதம், பிசாசு, ராட்சச கணங்கள், தோன்றும் மேற்படி வித்தை தெரியவரும் ஆகையால் இது பார்வை மையாகும். (எ-று) (109)

அவை மடக்கம்.

தானே தானின்னமொன்று சொல்லக்கேளுதயமாக அவை யடக்கம் அங்கமடக்கமானே தானங்கமேற் பங்கமடக்க மென்று டன வழியடிக்கச் சுவாகாவென் கேள்னேதான் தலீணிபிட்டான் கிழங்குக்கப்பா கொற்றவனே யருக்கான் காப்புக்கட்டி வாரே தான் பொங்கபலி பூசைபிட்டெவ்வாமான்மந்திரமாயிரநூறுசெபியே.

(பொ-ரை) இன்னுமொரு வித்தை சொல்லுகிறேன் கேள். அவை யடக்கம், அங்க அடக்கம், வழியடிக்க சுவாகா வென்று சொல்லி தண்ணீர்விட்டான் கிழங்குக்கு ஆதிவாரத்தில் காப்புக் கட்டி பூசைபலி செய்து மந்திரத்தை ஆயிரம் உரு செபிப்பாய். (எ-று) (110)

ஓதியே பிடுங்கிமுன்கருவைப்பூசி ஒகோகோகாலடியில் பிடித்துக்கொள்ளு சோதியேயவனமது வயதிரேது சுறுக்காக மந்தி

த்தை போதினில்லு ஆதிபேயவணமது வெட்டுமும்பாரும் அந்தி ரத்திற் செல்லாது அதிநிளித்தை வாதியேபோகருடகடாட்சத் தாலே வளமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) பிறகு அந்தவேரைப் பிடுங்கிக் கருவைப்பூசி கர ஷிடியில் பிடித்துக்கொண்டால் வெட்கமுண்டாகும். இந்தவித்தை அந்தரத்திற் செல்லாது. இது போகமுனிவர் கடாட்சமாகும். (எ-று) (111)

பாதாள அஞ்சனம்.

பாடினே னூசியொன்று காந்தம்நீலம் பண்பான ஆமைக யில் மஞ்சளப்பா ஆடியேவேசினை வெற்றிலையுங்கூட அடைவான செங்கழுநீர் வேருமையா நாடியேதலைமஞ்சள் மாவுங்கூட்டு நல மான கோரோசனை குங்குமப்பூ கூடியேவகைவகைக்கு விராக னென்று குழியம்மிதனிலரைக்க வகையைக்கேளே.

(பொ-ரை) ஊசிக்காந்தம், நீலம், ஆமை, கைமஞ்சள், தேவ டியாள் கைவெற்றிலை, செங்கழுநீர்வேர், தலைமஞ்சம், மாவு, கோ ரோசனம், குங்குமப்பூ, இவைகள் வகைவகைக்கு வராகனெடை யொன்று கல்வத்தி லரைக்க வகையைக் கேள். (எ-று) (113)

கௌடா மாட்டின்ற புருவின்ரத்தம் கெணிதமாய் யொன் றாத்துக் கூடவாரு. கூளடாசெவந்த பசுவெண்ணெய்யுப்பாதி மாக விருகண்டு பனிரெண்டாகும் கள்டா மூன்றுநாளரைத்தெ டுத்து நாயகனே சிமிழில் வைத்துக்காளிமுன்னில்வாளடா புதை த்தெடுப்பாய்நாளெட்டாகும்வளமானபுழுகுடன் சவ்வாதுசேரே.

(பொ-ரை) மாடப்புறாவின் ரத்தத்தையுங்கூட வார்த்து வெ ண்ணெய் பன்னிரண்டு வராகனெடை போட்டு மூன்றுநாள் அரைத்தெடுத்து சிமிளில் வைத்து காளிமுன்னில் புதைத்து எட்டு நாளான பின்பு எடுத்து சவ்வாது புனுகு இவைகளை அத்துடன் சேர். (எ-று) (113)

சேரப்பா வகைவகைக்கு விராகனென்று சேர்க்கமுத்தித்து மந்திரந்தான் பாரப்பா சர்வலோக வசிகரி யென்று பண்பாக யாயிரத்தெட்டுஞ் செபித்து நேரப்பா திலகமிடு புருஷர் பெண்கள் நிச்சயமாய்க் கேட்டதெல்லா மீவாரப்பா கூறப்பா புகையெல்லா நசித்துபோகுங் குற்றமொன்று மில்லையடா ஜெகத்தில் தானே;

(பொ-ரை) வகைக்கு வராகனெடை யொன்று சேர்த்து மர்த்தனஞ்செய்து சர்வலோகங் கிறீம், ஓம் என்று ஆயிரத்தெட்டுரு செபித்து திலகமிட புருஷர்களும் பெண்களும் கேட்டவைகளெல்லாவற்றையும் கொடுப்பார்கள். விரோதங்களெல்லாம் ஒழிந்து போகும். குற்றம் ஒன்றுமில்லை. (எ-று) (114)

தானப்பாவேர் வெடித்த பலாவின் கொட்டைதான் கருக்கிவிராகனிடை பத்ததாகும் தேனப்பா அஞ்சன பாஷாணமென்று தெளிவாகக் குழியம்மி தன்னிற்போட்டு வானப்பா விளக்கெண்ணெய் தன்னிலாட்டு வளமாக வொருசாம மரைத்தபின்பு கோனப்பா சிமிழில்வைத் தஞ்சனிக்குங் குணமான வனுமார்க்கும் பூசைசெய்யே.

(பொ-ரை) வேர்ப்பலாக்கொட்டையைக் கறுக்கினது வராகனெடை பத்து அஞ்சன பாஷாணமொன்று இவைகளைக் கல்வத்திலிட்டு விளக்கெண்ணெய் வார்த்து ஒருஜாம மரைத்து சிமிளில் வைத்து அனுமார்க்கும் அஞ்சன தேவிக்கும் பூசைசெய். (எ-று) (115)

செய்தபின்பு கையிலிட யெவரும்பார்க்கச் செகத்திலுள்ள நிதிகளெல்லாங் கண்ணிற்காணும் எய்தபின்பு வேண்டியதை யெடுத்துக் கொள்ளு இதமாக இகபரத்துக் குதவியாகும் உய்தபின்பு நாழிகைதான் பாதாளத்தி லுத்தமனே நிகழுமுன்னாறுமாதம் வைத்தபின்பு யிம்மைதா னுறுதிமெத்த பார்த்தவருக்குப் பலனுண்டு பலிக்கும்பாரே.

(பொ-ரை) அதை இட்டுக்கொள்ள சர்வநிதிகளும் தோன்றும், அப்போது வேண்டியதை எடுத்துக்கொள். இது இம்மைக்கும் மறுமைக்கும் உதவியாகும். இம் மையானது பழகப் பழக உறுதியாகும். (எ-று) (116)

குறிசோல்ல.

பாரடா ஆடையொட்டி சமூலமப்பா பண்பானநின்றிடந் தீஞ்சமூலி சேரடாகருச்சிலை யிந்தமூன்றுஞ் செம்மையாய்க் கருக்கியல்லோ மைபோலாட்டி சீரடா சடலையென்ற தயிலஞ்சேர்த்துச் செவ்வியதாய ரைத்துநீ சிமிழில்வைத்து வீரடா அனுமாரைத் தியானஞ்செய்து விதமாகத்திலகமிட்டுக் குறிதான் சொல்லே.

ஆடையொட்டி சமூலமும் நின்றிடம் தீய்ந்த மூலிகையும், கருச்சிலையாகிய இந்தமூன்றையும் சடலைத் தயிலத்தைச்சேர்த்து அரைத்து சிமிளில் வைத்து அனுமாரைத் தியானஞ்செய்து மையிட்டுக் குறி சொல்லுவாய். (எ-று) (117)

சொல்லப்பா அஞ்சனதேவிபுத்திரா சொகுசான வாய்வுமைந்தா புருஷரூபாவல்லவா அனுமந்தா ராமதூதா வந்துகுறிசொல்லென்று வணங்கிக்கொள்ளு இல்லைப்பா நினைத்ததெல்லாஞ் சொல்வான்பாரு என்னசொல்வேனுமனுட குறித்தான்மைந்தா நல்லப்பா போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) அஞ்சனதேவி புத்திரா வாயுமைந்தா! புருஷரூபி! வல்லவா! அனுமந்தா! ராமதூதா! நீவந்து குறிசொல்லு என்று வணங்கிக்கொள். அப்போது அவர்நினைத்த எல்லாவற்றையுஞ் சொல்லுவார். இதுபோகருட கடாட்சத்தால் புலிப்பாணி பாடினேன் (எ-று) (118)

ஈடுமுறை

பாடிவேயீடொன்று சொல்லக்கேளு பண்பான அடைக்கலாங் குருவியாண்தான் ஆடியேபிடித்துவந்த பானந்தைத்து அதின்வாயிலூசியென்ற கர்ந்தவெள்ளை கூடியேவாயை நீ தைத்துப் பின்பு குணமான சிறுபாண்ட மதிலேவிட்டு காடியே வஸ்தவொரு படிதான்வார்த்து நலமாகவாய்மூடிச் சீலைசெய்யே.

(பொ-ரை) ஈடுசொல்லக்கேள்: ஆண் அடைக்கலாங்குருவி பிடித்துவந்து அபானவாயைத்தைத்து அதின்வாயில் ஊசிக்காரம் வெள்ளை இவைகளைப்போட்டு வாயையுந்தைத்து ஒருசிறிய பாண்டத்தில் வைத்து ஒருபடி கள்வார்த்து வாய்மூடி மண்சீலை செய். (எ-று) (119)

செய்தபின் படிப்பேற்றித் தீமூட்டி சிறப்பாக ஒருசாமமிரண்டிலே வைத்தபின் பற்றியபின் பெடுத்துக்கொண்டு வளமான குழியம்மி தன்னிற்போட்டு கொய்தபின்பு ராமமூட னஸ்தன்றிக் குலவுமாக் கொடியுமடைத்தணைத்தும் பைதபின்பு சுழல்வண்டு பின்னைப் பூச்சிப் பருந்து குழியாலே யிந்திரகோபந் தானே.

(பொ-ரை) பிறகு அதை அடுப்பில்வைத்து ஒருசாதி விறகினால் எரித்து வற்றினபின் எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டு மயிர் எறும்பு இவைகளைத் தள்ளி மாவும், கொடியும் ஊமத்தை விதையும், சுழல்வண்டும், மின்னல் பூச்சியும் குழியானையும் இந்திரகோபமும் (எ-று) (120)

தானென்ற தொட்டாற்சுருங்கி வாடிவேறுந் தயவானநாயுருவி கையான்வேருந் தேனென்ற திகைபூடு பூச்சியுப்பா திறமாகவகை வகைக்கு விருகனொன்று கோனென்ற ஈப்புலியு மீயுங்கூடக் கொற்றவனேயாடை யொட்டி ஐவிரலின்கஞ்சா வானென்ற பேய்கரும்பஞ் சாற்றினாலே வகைவகைக்குச் சரியிடையாய்விட்டு ஆட்டே.

(பொ-ரை) தொட்டாற் சுருங்கியும், நாயுருவி கரிசலாங்கண்ணி இவைகளின் வேரும் திகைப்பூண்டும், பூச்சியும், வகைக்கு வராகனெடை ஒன்றும் ஈப்புலியும், ஈயும் ஆடையொட்டியும் ஐவிரல்கெஞ்சாவும் சரியெடை பேய்க்கரும்புச் சாற்றால் அரைப்பாய் (எ-று) (121)

ஆட்டப்பா குளிகையது துவரைபோலே அப்பனேசெய்து நீ நிழலுலர்த்தி நாட்டப்பா மந்திரந்தான் சொல்லக்கேளு நமோ இங் இங் கிங் சிங் சுவாகாவென்று மாட்டப்பா விந்துவிட்டுக் குழைத்துநீயும் மங்கையருக் கருசுவையில் தாம்பூலத்திற் கூட்டப்பா மங்கையர்கள் விரகமீறிக் கொம்பனே யார்தாமனைய வருவார்பாரே.

(பொ-ரை) துவரையைப்போல மாத்திரைசெய்து நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு நமோ இங், இங், கிங், சிங், சுவாகாவென்று மந்திரஞ் சொல்லிவிந்து விட்டுக் குழைத்து அறுசுவைப் பதார்த்தத்துடன் கலந்து பெண்களுக்குக் கொடுத்து விட்டால் அவர்கள் மன்மத விகாரம்மீறி வருவார்கள். (எ-று) (122)

பிரிவு.

பாரடா பிரிவுசெய்யுங் குளிகையொன்று பாடுகிறேனன்றுகச் சொல்லக்கேளு வாரடாசெத்தாடு வுண்ணியப்பா வளமான விடத்தாலம் பட்டைகூட்டி நீரடாதண்ணீர் விட்டரைத்துமைபோல் நினைவாகத் துவரைபோற் குளிகைசெய்து கூரடா நினைத்தவுடன் முறிந்துபோகுங் கொற்றவனே யறுசுவையில் தாக்கிப்போடே.

(பொ-ரை) பிரிவுசெய்யுங் குளிகையொன்று பாடுகிறேன், செத்த ஆட்டு உண்ணியையும்விடத் தேர்பட்டையையுந் தண்ணீரால் அரைத்து துவரைபோல் மாத்திரைசெய்து அறுசுவையில் கொடுக்க நினைத்தவுடன் முறிந்துபோகும். (எ-று) (123)

வசியம்.

போடவே யின்னமொன்று சொல்லக்கேளு புகன்றபொன்னுலாரை மூலம்வாங்கி ஆடவே கருக்கியதை நிழலுலர்த்தி அப்பனே குழித்தயிலமாகவாங்கி கூடவே குழியம்மி தன்னில்விட்டுக் குக்குடத்தின் வெண்கருவுங் கூடவிட்டுச் சாடவே மரக்கொடியும்புழுகும்பூரம் தக்ககோரோசனையும் வகைக்குவெசன்றே.

(பொ-ரை) இன்னொன்று சொல்லுகிறேன் கேள். பொன்னூமத்தை வேரை எடுத்து நிழலுலர்த்தி குழித்தயிலமாக வாங்கி கல்வத்திலிட்டு கோழிமுட்டையின் வெள்ளைக் கருவையுங்கூட விட்டு மரக்கொடி, புழுகு, பச்சைக்கர்ப்பூரம், கோரோசனம் வகைக்கு ஒரு வராகனெடை. (எ-று) (124)

நன்றான வகைவகைக்கு விருகனொன்று ஒழுங்காகத் தானரைத்துச் சிமிழில்வைத்து நன்றாகத் திலகமிடப் புருஷரெல்லாம் நாயகியாள் கேட்டதெல்லா மீவான்பாரு ஒன்றாகவவர்வந்து வாசல்காப்பார் உனக்கடிமையாயல்லோ வேலைசெய்வார் பன்றாக வவனையேகாணவிட்டால் பதறுவாள் சிணுங்குவாள் கோபிப்பாளே.

(பொ-ரை) இவ்விதம் சேர்த்து, அரைத்து சிமிழில் வைத்து திலர்தமிட புருஷர்களெல்லாம் பெண்சாதிகள் கேட்ட பொருள்களை யெல்லாங் கொடுப்பார். அவர் வாசலையுங் காவல் செய்வார் அவனைக் காணவிட்டால் பதறியும் சிணுங்கியும், கோபித்து மிருப்பாள். (எ-று) (125)

வேறுமொரு விதம்.

கோவிதமா யின்னமொரு மார்க்கங் கேளு குமைமாம்புல்லாமணக்குச் சமூலம்வாங்கி ஆவிதமாய்மாதவிடாய் மூன்று நாளும் அப்பனே கட்டிவைத்து காலைநாளில் தாவிதமாய்பாக்கொ

டியும் வருகனென்று தனியாக முன்சிலை மருகனென்றுபூவிதமா யவனிரா லரைத்து மைபோல் பொங்கமுடன் அவரைபோற் குளிகை செய்யே.

(பொ-ரை) இன்னுமொருவிதம் சொல்லுகிறேன் கேள்:— புல்லாமணக்கு சமூலத்தை எடுத்து மாதவிடாயான மூன்றுநாளும் அல்குலில் வைத்துக்கட்டிக்கொண்டிருந்து நான்காநாளில் மரக்கொடி ஒருவராகனெடை முன் சிலை வராகனெடை அவளுடைய கிறுநீரினா லரைத்து அவரைபோல் மாத்திரை செய். (ஏ-று) (126)

செப்பப்பா குளிகையது தாம்பூலத்திற் செயலான வறுசுவையி னன்னப்பாலில் வையப்பா கொடுத்தவுடன் மயங்குவார்கள் வாணுதலார் தான்பிரியார் மறுமுகம் பாரார் கையப்பா மகிழ்வாக மருவி வாழ்வார் கடன்வாங்கித் தான்கொடுப்பா ரே வலானாய் ஐயனே யவர்பிரியுச் சிந்தைசெய்வா ரப்பனேஇனிப்பிரியுங் குளிகையாட்டே.

(பொ-ரை) இதில் ஒருமாத்திரை தாம்பூலத்துடனாவது அறுசுவையிலாவது அன்னப்பாலிலாவது கொடுத்தவுடன் மயங்குவார்கள் பெண்கள் பிரியமாட்டார். வேறுமுகம் பாரார், இன்னும் வேண்டிய பொருள்களைக் கடன்வாங்கியாவது கொடுப்பார். (எ-று) (127)

பெண்பிரிவுக்குக் குளிகை.

மாட்டடா பெண்பிரிவுக்கெல்லா மைந்தனே கடுகோடு மயானச்சாம்பர் கூட்டடா குடிபோன வீட்டின்மண்ணும் குணமான வருக்கனெரிகவேலை நாட்டடா கர்தப்பந்தான் புரண்டமண்ணும் நலமான தச்சனுளிச் சிறுயுந்நமுறி ஆட்டடா மூப்பரைந்த பிறிந்தமண்ணு மப்பனே மந்திரத்தைச் சொல்லக்கேளே,

(பொ-ரை) பெண்கள் பிரிவுக்கெல்லாம் கடுகு மயானச் சாம்பர் குடிபோன வீட்டின்மண், ஆகிவாசத்தில் கழுதை புரண்டமண், தச்சன் உளிச்சிறு மூச்சந்திமண் இவைகளைச் சேர்த்து. (எ-று) (128)

கேளடா ஓம்-ஸ்ரீம் பிரியசிகசியென்று கெணிதமுடனிருவருட பேருமாறிச் சூனியவந்தாய மரைத்துப்பூசி சுருக்காக

மந்திரமாயிரந்தானேறி வாளடா சிலையிலே வைத்துக்கட்டி வளமாக பூசைசெய் திறப்பின்முன்பில் கேளடா வைத்துவிடு இருவர்தாமுங் கொற்றவனே பிரிபட்டுப் போவார்பாரே.

(பொ-ரை) ஓம், ஸ்ரீம், பிரிய நசிநசி என்று இரண்டு பேருடைய பேரைமாறி ஐங்காயம் அரைத்துப் பூசி, ஆயிரம் உரு செபித்து சிலையில் வைத்துக்கட்டி பூசைசெய்து கதவின் முன்னே வைத்துவிட்டுவிட்டால் இருவரும் பிரிந்துபோவார்கள். (எ-று) ()

தாதுபுஷ்டி.

பாரப்பா சந்தனமுந் தேற்றான்வித்தும் பண்பான பூசி சர்க்கரையின் மூலஞ் சேரப்பா பூனையென்ற காலின் வித்துஞ் செயலான முருங்கைவேர்ப் பட்டைகூட்டி கூறப்பா வகைவகைக்கு விராகனிரண்டு கொற்றவனே தானரைத்துத் தேங்காய்ப் பாலில் நிரப்பா சீனிசர்க்கரையுந்தானும் நிரமாகக் குடிப்பாயீராறுநாளே.

(பொ-ரை) சந்தனம், தேற்றான்கொட்டை, பூசர்க்கரைக்கிழங்கு, பூனைக்காலிவித்து, முருங்கைவேர்ப்பட்டை இவைகள் வகைக்கு இரண்டு வராகனெடை எடுத்துத் தேங்காய்ப்பாலில் அரைத்து சீனிசர்க்கரை சேர்த்து 12-நாள் குடிப்பாய். (எ-று) (130)

ஆமடா குடித்தவர்த் தாதுபுஷ்டி அப்பனே வீரியந்தான் விளையும்போது தாமடா ரூடிகள்தான் தணியும்பாரு தளதளப்பாய் தேகமது காந்தியுண்டாம் வாமடா பெண்களைத்தான் புணர்ந்தாயானால் வளமான மன்மதனே யிவனென்பார்கள் நாமடா போகருட கடாட்சத்தாலே நல்மாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இவ்விதம் குடித்துக்கொண்டுவந்தால் வீரியம் விர்த்தியாகும், ரூடிகளெல்லாம் தணியும், தேகம் தேஜசடையும், ஸ்ரீபோகஞ் செய்தால் இவன் மன்மதனே யென்று சொல்லுவார்கள். (எ-று) (131)

வஸ்து யாண்டமுடைய.

பாடியே யின்னமொரு வித்தைக்கேளு பதிவான சாறுயமூறும்பட்டை நாடியே கொணர்ந்துத் சிலைசுற்றி நாயகனே காளிகோயில் முன்பில்வைக்க ஆடியே பானையெல்லா முடையும்

பாரு அடைவாக விற்காது கெட்டுப்போகுங் கூடியே எடுத்தெரி த்து போட்டாயானல் குணமாகப் பானையது விளையும் பாரே.

(பொ-ரை) இன்னமொரு வித்தை சொல்லுகிறேன் கேள். சாருபம் ஊறுகின்ற பட்டையைக் கொண்டுவந்து கருச்சீலைசுற்றி காளிகோயிலின் முன்வைக்க, பானையெல்லாம் உடையும் அதனுல் விற்காமல் கெட்டுப்போகும். உடனே வைத்ததை எடுத்துப் போட்டுவிட்டால் பானை உண்டாகும். (எ-று) (132)

விளைவி கேட.

விளைவுகெடக் கொடுவேலிக் காப்புகட்டி விதமாகத் தா மொன்று லட்சமோது களவாகக் கலசத்தில் வைத்தூமடிக் கனி வாகக் கருக்கூட்டி காடுசென்னல் விளைபெருகுங் கொடிகாலும் கன்னல் வாழை விதமான தென்னம்சோலை தோப்பும் அளவு பெறவைக்கவெல்லாம் பலனும் வென்று அப்பனே யெடுத்தெரிந் தாற் பலனுண்டாமே.

(பொ-ரை) சித்திரமூலச்செடிக்கு காப்புகட்டி லட்சமுரு செபித்து அதைக் கலசத்தில் வைத்தூமடி கருகூட்டி அவ்வவ் விடங்களில் வைக்க விளைவுகெடும், கோலைவிட்டுப்போம் உடனே அதை எடுத்துப்போட்டுவிட்டால்பலனுண்டாகும் (எ-று) (133)

விளைவு பெருக.

ஆமடா நாயுருவி காப்புகட்டி அப்பனே ஸ்ரீயென்று லட்ச மோதி தாமடா காடுசெந்நெல் கரும்பு வாழை தப்பான கொடி க்காலுந் தென்னந்தோப்பும் வாமடா வைங்கோலக் கருவும் பூசி களமாகக் கலசத்திற் புதைத்தாயானல் நாமடா யிதுகளெல்லா மதிகமாகும் நலமான போகருட கடாட்சத்தாலே.

(பொ-ரை) நாயுருவிச் செடிக்கு காப்புகட்டி ஸ்ரீம் என்று லட்சம் உரு செபித்து காடு, செந்நெல், கரும்பு, வாழை, கொடி கால், தென்னந்தோப்பு, ஐங்கோலக்கரு இவைகளைப்பூசி கலசத் திற் புதைத்தாயானல்இவைகளெல்லாம் அதிகமாகும், இதுபோ கருடைய கடாட்சமாகும். (எ-று) (134)

பூதப்பைசாசு விநோதம்.

தானென சொரிதவளை பிடித்துவந்து தயவாக சாம்பிராணி வேண்டமட்டு மாறுனஅதின் வாயிற் செலுத்திவைத்து மைந்தனே

புகையூரத் தலைகீழ்கட்டி வாறான மண்டலந்தான் கடந்துவாங்கி வளமான சாம்பிராணி யெடுத்துக்கொண்டு ஆறான தலைமஞ்சங் கொடியுங்கூட்டி அடைவான சாம்பிராணி புகையும்போடே.

(பொ-ரை) சொரித்தவளையைப் பிடித்துக்கொண்டு வந்து வேண்டியவரைக்கும் சாம்பிராணி அதின் வாயில் வைத்து புகை யூரத் தலையைக் கீழ்ப்பக்கமாகக் கட்டி ஒரு மண்டலங் கழித்த பிறகு வாங்கி அந்தச் சாம்பிராணியை எடுத்துக்கொண்டு தலை மஞ்சங் கொடியையுஞ் சேர்த்து சாம்பிராணிப் புகையையும் போடு. (எ-று) (135)

போடப்பா புகைபிடிக்க பிசாசுபூதம் பொங்குமுள்ள தே வரொடு முனிகருப்பன் நாடப்பா பிர்மராட்சதனுஞ் சாத்தான் நலமான லாடன் சப்பாணியினுங் கூடப்பா ஓமென்று போட் டாயானற் கொற்றவனே தலைவிரித் தாடும்பாரு ஆடப்பா பேரு ருஞ் சொல்லுமையா அப்பனே புகையினுட பெருமைதானே.

(பொ-ரை) அந்தப் புகையைப் பிடிக்க பைசாசு, பூதம், தேவர், முனி, கருப்பன், பிரமராட்சசன், சாத்தான், லாடன், சப்பாணி இவைகளுக்குப் ஓம் என்று போட்டால் அவைகளெல் லாந் தலைவிரித்தாடும், பேரும் ஊரும் சொல்லும். இது அந்தப் புகையின் பெருமையாகும். (எ-று) (136)

பெருமையா யின்னமொரு மார்க்கங்கேளு பேணியே மனி தரஸ்தி கழுதையஸ்தி அருமையாய்க் கழுதையின் தண்டுச்சீலை யப்பனே மனிதர்மலம் பண்ணிஅஸ்தி உரிமையாம் காக்கணம் வேர் சிந்திற்மேனி யுத்தமனே முட்டைகொஞ்சஞ் சேர்த்திடித் துத் தெளிவான புகைபோடத் தேவர்யாருந் திடமாக வாடுவர் காண் சீமென்றோதே.

(பொ-ரை) இன்னுமொரு வழியைக்கேள்:—மனிதர், எலு ம்பு, கழுதை எலும்பு, கழுதை தண்டுசீலை, மனிதர் மலம், பன் ணி எலும்பு, காக்கணம்வேர், சிந்தில், குப்பைமேனி, முட்டை இவைகளைச் சேர்த்திடித்து புகைபோட ஆடுவார்கள். (எ-று) ()

விநோத ஜாலம்.

ஓதவே யின்னமொரு வித்தைகேளு ஒளிவான சிதம்பரத் தின் பூசைசொன்னேங் கோதிலுச்சாடனச் சக்கரத்தைக்கிழக்

கொற்றவனே, பிராமணரிற் பிரமசாரி ஆத்ரவா யவன்மறித்துச் தகனமாக்கி யப்பனே காடாற்று முன்னேநாளும் வாசக அஸ்தி யென்றெடுத்து வந்துவளமான வஸ்துவொரு பெருவாங்கே.

(பொ-ரை) இன்னமொரு வித்தை கேள்:—சொல்லியிருக்கிற சிதம்பர பூசையில் உச்சாடன சக்கரத்தைக் கீறி பிரமசாரி இறந்து தகனம் பண்ணின காட்டை யாற்றுதமுன்னம் அஸ்தியை எடுத்து வஸ்து ஒரு பேர்வாங்கி (எ-று) (138)

வாங்கியே சக்கரத்தை லட்சமோதி வளமாகத் தான்புதைப் பாய் தேவர் முன்பில் பாங்கியேவஸ்து வுடனஸ்திதானும் பாங்காகத் தேவர்முன்புவைத்துப்போடு தாங்கியே பலிபூசை செய்தாலப்பா தயவாகத்திருநடன மாடும்பாரு ஓங்கியே கேட்டவரங் கொடுக்கச்செய்பு மூத்தமனே சனக்கூட்ட மாகும்பாரே:

(பொ-ரை) சக்கரத்திற்கு லட்சமுரு ஜெபித்து புதைப்பாய். தேவர்முன்பு அஸ்தி இவைகளை வைத்து பலிபூசை செய்தவர்கால் திருநடனமாடும். கேட்ட வரத்தைக் கொடுக்கச்செய்யும் இதனால் ஜனக்கூட்டமாகும் (எ-று) (139)

தேள்கடி யிறங்க.

பாரடா வின்னமொரு வித்தைகேளு பங்கான செம்போத் துநாக்குமைந்தா சேரடா உடும்புடைய நாக்குங்கூடிச் செயலான கிழ்க்காயின் மூலம்வாங்கிக் கூடடா சாமப்பால் வராகனென்றே கொற்றவனே யாண்கழற்சிக் காயிலுள்ளே திரடா கிரணம்அது நீண்டும்போது திறமாகவெடுத்துகொக்கின் மெழுகில் மூடே,

(பொ-ரை) இன்னுமொரு வித்தையைக் கேள்:—செம்போத்து நாக்கு, உடம்பு நாக்கு கிழாநெல்லிவேர், மூலைப்பால் இவைகள் ஒவ்வொரு வராகனெடையை ஆண் கச்சைக்காய்க்குள் அடைந்து கிரணம் நீண்டும்போது எடுத்துக் கொக்கு மெழுகால் மூடு (எ-று) (140)

மூடியேதேள்கடித்து வந்தபேர்க்கு முன்னுகக் கழற்சியதைக்கையில் தந்து ஆடியேயின்னொருவர் கையில்ஈய்ந்தால் அப்பனே யிவனைவிட்டவன்மேற் போகும் நாடியே தேளின்விஷ மென்ன சொல்வேன் நடுநடுங்கியாழ்கிடுவா னெறியுங் கட்டுங் கூடியே கா

யைநீ போவென்றக்கால் ஜுவாலமாகப் போட்டவுட னிறங்கிப் போமே.

(பொ-ரை) தேள் கடித்தவர்களுக்கு கச்சைக்காயைக் கையில் கொடுத்து இன்னொருவர் கையில் கொடுத்தால் இவனை விட்டு அவன்மேற் போகும், தேள் விஷத்தால் மிகவும் நரி கட்டும் காயைப் போவென்று சொன்னால் போட்டவுடன் இறங்கிப்போகும் (எ-று) (141)

சீலை மெழுகு பாவை.

போமென்றகருநாயின் விலாவின்விலும் பொக்குமுடன்காத்தினரம்புதானும் ஆமென்ற சுடலையின்கருவுங்கூட்டி அப்பனே யைங்கோலத் தயிலஞ்சேர்த்து நாமென்ற நாணத்திற் பூசிப்பபார நாயகனே கழுப்பினுடி தியானங்கேளு நாமென்ற ஓம்-ரீம்-கங் சங்ஙுயும் தயவாக நீம்ர-ங்லாலீ லூவென்னே.

(பொ-ரை) கருநாயின் விலாவின்வில் காகநரம்புசுடலைக்கரு, ஐங்கோலத் தயிலஞ்சேர்த்து வனத்திற்பூசி ஓம்-ரீம்-கங்-சங்ஙுயும் நீம், ரங், லா, லீ, லூ என்று சொல்லு (எ-று) (142)

என்னவே மங்சிங் சிவயநமவென்று என்னசொல்வேன்மந்திரத்தை லட்சமோது மன்னவேபூசைபலி புலக்கச்செய்து பாங்கான வெதிரிபேர் தன்னைச்சொல்லி நன்னவே நாணற்றவியாதி கொண்டு நடுநடுங்கிமரணமாய்ப் போவான்பாரு அன்னவேக்ழுப்பினுட வீரமெத்த ஆரறியப்போகிறு ரருமைதானே.

(பொ-ரை) மங், சிங் சிவயநம என்று லட்சம் உரு செபித்து பூசை, பலி இவைகளைச் செய்து எதிரியின் பேரைச் சொல்லிமரணமாவான் கழுப்பின் வீரம் அதிகமாகும், இதை யார் உணரப்போகிறார். (எ-று) (143)

தானென்ற சிவன்காளிகணபதி கந்தன் தயவானவுமிறவனும் பெருமாளையன் கோனென்றவனுமனொடு கறுப்பனையா கொற்றவனே யவர்கள்மெழுக் கெடுத்துக்கொண்டு இதனென்ற வகைவகைக்குவிராகனென்று தெளிவான மெழுகுபதினொன் விராகன் வாமென்ற ஐங்கோல னங்காயஞ் சேர்த்து வளமான சுடலையுட கருவுங் கூட்டே.

(பொ-ரை) சிவன், காளி, கணபதி, கந்தன். பெருமாள், ஐயன், அனுமன், கறுப்பன், ஆகிய அவர்கள் மெழுக்கை

எடுத்துக்கொண்டு வகைவகைக்கு வாகமென்று மெழுகு பதி னெட்டு வராகன் இங்கிலம் ஏங்காயம் இவைகளைச் சேர்த்து கடலின் கரு இவைகள் கூட்டு (எ-று) (144)

கூட்டியே லேகித்து உருப்பாச்செய்து கொற்றவனே மயா னருத்திரன் தியானமோது கட்டியே யம் பம் யம் பம்மென்று நலமான மயானருத்திரர்கட்டுகட்டு கூட்டியே யெரியெரியென்றே லட்சஞ் சுகமாகத்தானேதிப் பூசைசெய்து ஆட்டியே சத்துருப் பேரெழுதிவைத்து அப்பனே யுருவதிற்றிப் பதித்துப்போடே.

(பொ-ரை) இவைகளை ஒரு உருப்பு செய்து மயானருத்தி ரன் தியானஞ்செய்து யம், பம், யம், பம் என்று மயான ருத்தி ர கட்டு கட்டு குட்டியே எரி எரி என்று லட்சமுரு செபித்து பகைவர் பேரை எழுதி உருவை பதித்தானை. (எ-று) (145)

பதித்து நீயாயிரத்தெட்டு ஜெபித்துப் பண்பான பூசையது பாங்காய்ச் செய்து அதிக்கநீ முப்பத்திரண்டு குழியினப்பனே மூடிக்கவைக்க மூடமதாவான் சதித்தவுடனாசியிலேகுத்தும்போ டு கனிவாக விரல்நகங்கள் காதிற்குத்தும் சதித்தவுட னாசியது சொருகிவைக்க நாயகனை குத்தலெடுத்து லறுவானே.

(பொ-ரை) ஆயிரத்தெட்டு உரு ஜெபித்து பூசைசெய்து மு ப்பத்திரண்டு குழியின் மூடக்கிவைக்க மூடனாவான். இவை களை ஊசியில் குற்றும்போது விரல் நகம், காது இவைகளில் குற் றும். அந்த ஊசியைச் சொருகிவைக்க குத்தலெடுத்தலறுவான். (எ-று) (146)

அலறியே யவன்வணங்கி வந்தானானால் அப்பனேயுடன் திரு ப்பவூசி வாங்கு நலமாக வயிற்றில்வைத்த பிட்டும் போக்கு நாய கனை நிவர்த்தியாய்ப் போகும்பாரு குலமான பாவையை நீ பத னம்பண்ணு கொற்றவனே கிளைத்தபோ தெடுத்துச்செய்தி பலமா க விப்பாவைகையில்வேணும் பார்த்தவர்க்குப் பலனுண்டு பலித மாமே.

(பொ-ரை) அவன் வணங்கிவந்தானானால் உடனே ஊசியை வாங்கு வயிற்றில்வைத்த பொட்டும் போக்கு, பாவையைப் பதனம் பண்ணு, இதைப் பார்த்தவர்க்கு பலனுண்டாகும். (எ-று) (147)

ஆமப்பா ஐயும் கிலியும் சுவாகாவென்று அடைவாக லட்ச முரு ஜெபித்துத்திரு நாமப்பா பூசையது சத்திபூசை நாள்தோறு

மண்டலந்தான் தினமுஞ்செய்நீ வாமப்பா மண்டலத்திற் சித்தி யாகும் வளமாகவேணுமென்ற தெதுவானாலும் போமப்பா நீ சொல்லித் தியானஞ்செய்யப் போகுமே யவரிடத்திற் கனவிற் றனே.

(பொ-ரை) ஐயும், கிலியும், சுவாகா என்று லட்சமுரு செ பித்து மண்டலம் வரைக்கும் நாள்தோறும் சத்திபூசை செய்து சித்தியாகும் வேண்டுமென்றால் சித்தியாய் (எ-று) (148)

கனவிலே பெண்போற்போம் கடிந்துசொல்லும் கனிவாக பின்னுமே யவனுத்தான் வினவிபேசின்னதெல்லாங் கொடுத் தநீயு மீறுதே யவன்சொல்லே யெதுசொன்னாலும் பணுவலாற் றேவிபுட வந்தன்தான்பெற்றேன். பண்புள்ளோர் நல்லகுண மென்றுகூறும் அனுகியேசொற்பனந்தான் வராகியாலே யப் பனே ஜெகமுழுதும் வணங்குவாரே.

(பொ-ரை) கனவிலே பெண்போலவே போகும். இவ னை யழைத்து இவைகளை யெல்லாம் கொடுத்து அவன் சொன் னாலும் நல்லகுணமென்று சொப்பனத்தில் வராகியால் ஜெகமுழு தும் வணங்குவார். (எ-று) (149)

பாரடா பேய்நரிபால் குடித்தபோது பாவமில்லை யதின் சொட்டையொன்றில் வாங்கிச் சேரடா வரிசியது உலரப்போடு சேர்த்தப்பாசுடலையுட கருவுங்கூட்டிக் கூரடா நிழலதனி லுல ரவைத்துக் கொடிதாகவரிசிகொஞ்ச மறுசுவையிலன்னம் வீரடா சத்துருவுக்கிட்டபோது விதமான பிரமைகொண்டலைவான்பாரே

(பொ-ரை) பேய், நரி இவைகள் பால்குடித்தபோது பாவ மில்லையொன்று அதின்சோ ஒன்றில் வாங்கி அரசி உலரப்போடு சுடலைக் கருகூட்டி நிழலில் உலரவைத்து அரசி கொஞ்சத்தை அ றுசுவையில் அன்னமிட சத்துருவுக் கிட்டபோது பிரமையாய் அலைவான். (எ-று) (150)

பாரப்பாயினு தக்காளிச்சா றப்பாநீ மூன்றுநாளாறு வேளை கூரப்பாகொடுத்திடவே இரும்பருகுணமாக நிவர்த்தி யாய்ப் போகுங்கண்டாய் சேப்பாபக்கீரானப்பாகா சிறப்

பாக வேழாநாளெல்லாங்கூட்டு விரப்பா போகருட கடாட்சத் தாலேவிதமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) பின்பு தக்காளிச்சாறு மூன்றுநாள் ஆறுவேளை கொடுக்க தீரும். உப்பாகா பத்தியமாக இருந்து ஏழுநாள் எல்லாவற்றையுங்கூட்டு போகருடைய கடாட்சத்தால் புலிப்பாணி பாடினேன் (எ-று) (151)

மோடி வித்தை.

பாடினே னின்னமொரு மோடிவித்தை பண்பான நடன சிதம்பரத்தைக்கீறி ஆடினே னட்சரமும் பீசமெல்லாம் அடை வாகத்தானடைத் தருணேயோதிக் கூடவே ஓம் ஸ்ரீரீங் கிலியும் குணமான அவ்வுமுவ்வு மவ்வும்சிவ்வும் நாடியே நமசிவயசு வா காவென்று நலமாக லட்சமுரு செபந்தானேதே.

(பொ-ரை) இன்னுமொரு மோடிவித்தை கேள். நடன சிதம்பர சக்கரத்தைக் கீறிந்து அட்சாபீசங்களை யடைத்து ஓம், ஸ்ரீரிம், கிலியும், அவ்வும், உவ்வும் சிவ்வும், நமசிவசு சுவாகா வென்று லட்சமுரு செபிப்பாய். (எ-று) (152)

ஓதியே சக்கரத்தை வைத்துக்கொள்ளு வுத்தமனே சோட சமாம் பூசைசெய்து சோதியேசக்கரத்தை வைத்துக்கொண்டு சுக மானமோடிவைக்கச் சொல்லக்கேளு ஆதியே கோயில்முன்பு குளத்தின்முன்பு அப்பனே யம்பலங்கள் தெருவிலப்பா நீதிலே போகருட கடாட்சத்தாலே திடமாகக் கும்பைக்கும் நீதிகேளே

(பொ-ரை) அந்தச் சக்கரத்தை வைத்துக்கொண்டு சோடச பூசையைச் செய்து மோடிவைக்கச் சொல், கோயில், குளம், அம்பலம் தெரு இவைகளை மோடிவைக்கும் விதந்தைக் கேள். (எ-று) (153)

நீதியாய்குருபாதந் தன்னைவணங்கி நினைவாகப் பெரியோர்கள் பதமும்போற்றி மோதியேசித்தர்முத்தர் முனிகருப்பு முதலான ராட்சதையு மேவல்வைப்பும் நீதானசத்துருக்கள் மிருகஜாதி தீயவிஷங்கள் மெய்யாகவில்லாது நீறும் நினைத்தபடியெல் லாஞ்சித்தி யிதுவாமென் றுரைத்துஞ் செங்குலக்கைநாட்டே.

(பொ-ரை) குருபாதந்தை வணங்கி பெரியோர்களுடைய பாதத்தை வணங்கி சித்தர், முத்தர், முனி, கருப்புமுதலான ராட்சதையும், ஏவல் வைப்பும், சத்துருக்கள், மிருகசாதி, தீயவிஷம் இவைகளை நில்லாது. ஆகையால் நினைத்தபடி யெல்லாஞ் சித்தி யாகும். உடனே செங்குலக்கை நாட்டு. (எ-று) (154)

நாட்டிலே யுலக்கைமுன்பு தேங்காயொன்று நலமான தேங் காய்முன் குறட்டாவொன்று கூட்டியேயதின்பின்பு பாதராட்சை குறியாகவதின்முன்பு தேய்ந்தவாறுந் தேட்டியே யதின்முன்பு வாழைநாட்டித் தெளிவானபந்தலிற் பூமாலைசூட்டி ஆட்டியேமா விலைத்தோரணமுங்கட்டி அப்பனேபூசைபலி பெலக்கச்செய்யே.

(பொ-ரை) உலக்கைக்கு முன்னே ஒரு தேங்காயும், தேங் காய்க்கு முன்னே குறட்டா ஒன்றும், அதன் பிறகு பாதராட்சை யும், அதன்பிறகு வாறும். அதன் முன்பு வாழையும் நாட்டிபந்த லில் பூமாலைபோட்டு மாவிலைத்தோரணம்கட்டி பூசைபலி வலிவா கச்செய். (எ-று) (155)

பெலக்கவே யெட்டிமூலை கருவும்பூசிப் பேதமில்லையஷ்ட சித்தியடித்துப்போடு அலக்கவே கோடேழு சீறிப்போடு அப் பனேகாளியுடதியானமோது இலக்கவேதிரையைநீ யெடுக்கச் சொல்லு செயலாகவவன்வந்து சாவானுவிற் கலக்கவேகக்குகக்கு காளிதூர்க்கி கருத்தாக அரி அம் உம் ஓமென்றோதே.

(பொ-ரை) எட்டிமூலை கருவும்பூசி அஷ்டசித்தியையும் வ ந்து அதில் அடித்து ஏழுகோடு கிழித்து காளி தியானஞ்செய்து திரையை எடுக்கச்சொல்லு, அவன் வந்து சாவானுனல் கக்கு கக்கு, காளி, தூர்க்கி அரி, உம், ஓம் என்று சொல்லு. (எ-று) (156)

ஓதியே கண்கட்டு மையைவாங்கி யுத்தமனே கையதனிற் றடவிக்கொண்டு வாதியேவேப்பிலையை யுருவிப்போடு வளமான தேள்கொட்டி மயங்குவான்பார் ஆதியே ரங்கங்குலியென்று அப் பனே விழுந்தோடி பெரியவீழ்வான் சோதியே வறுவறி மறிசண் டாளி சுகமான அம்அம் என்னே.

(பொ-ரை) கள்சுட்டும் சாமையை வாங்கி கையில் தடவிக்கொண்டு வேப்பிலையை உருவிவிடு அப்பொழுது தேள்கொட்டிப் பிரயைப்பட்டவன் பிறகு ரங், ரங் சுவாகாவென்று சொல்ல அவன் உருண்டு ஓடி எரியவிழுவான், வழி வழி, மதிசண்டரளி அம் அம் என்று எண்ணு. (எ-று) (157)

எண்ணியே விபூதியைத்தான் தியானமோதி எதிர்போட டவன்விழுவான் கண்டுபாரு நன்னாவே ஓம்படு சுவாகாவென்று நமோனவிபூதியள்ளி யோதிப்போடு சுன்னமே யவன்விழுவான் கோபிப்பான்பார் சனிசைக அம்மம் றிம் ஓமென்றே தான் உன்னவே வேப்பிலைமண்ணுனா அருடனே யரிசியுத்தமனே விபூதியுத வோதிப்போடே.

(பொ-ரை) பிறகு விபூதியை தியானித்து எதிரேபோட அவன் விழுவான், கோபிப்பான், அம் அம், ரிம் ஓம் என்று வேப்பிலை மண்ணு அரிசி விபூதி இவைகளை ஓதிப்போடு. (எ-று) ()

போட்டவுடனவன்விழுவா னுதைத்துக்கொள்வான் பொங்கழுடைவின்வாயி லுதிரங் கக்கும் ஆட்டவுடன் றகழல்குறடா வப்பக அடைவானதேங்காயு முலைக்கைதானும் கூட்டடா யிதுக ளெல்லா மெழுந்தடிக்குங் கொற்றவனேவாளெழும்பி வெட்டும் பாரு நாட்டமுடன் காளியைத்தான் தியானஞ்செய்தால் நாயகனே யிவைகளெல்லா மடிக்குந்தானே.

(பொ-ரை) அப்படி போட்டவுடன் அவன் விழுவான், உதைத்துக்கொள்வான். அவன் வாயில் உதிரங் கக்கும், அப்பொழுது குறடா, தேங்காய், உலக்கை, இவைகளெல்லாம் எழுந்தடிக்கும், வாளெழும்பிவெட்டும் காளியை தியானித்தால் இவையெல்லாம் அடிக்கும். (எ-று) (159)

சாண்டா ஓம்வங்றம்மென்று தயவாக அம் அம் அம்மென்றே [illegible] அங் அங் சுவாகாவென்று கோண்டா லட்சமுரு செபித்துப்போடு கொற்றவனே நினைத்ததெல்லாம் [illegible] போகருட கடாட்சத்தாலே [illegible] மாகப் புலிப்பாணி பாடினேனே,

(பொ-ரை) ஓம், வங், நங், ஆம், அம், அம், அம், [illegible] சிங், யங், அங் அங், சுவாகா என்று லட்சமுரு செபித்துவிடு அப்படி செய்தால் நினைத்தவைக ளெல்லாம் ஸ்தம்பமாகும். (எ-று) (160)

சோறு வேகாதிருக்க.

பாரப்பா வின்னமொரு வித்தைகேளு பண்பாகவெண்காந்தி வேரைவாங்கி நாடவே கஞ்சாவித்தைஐங்கோலம் சேர்த்து நாயகனே யுலையரிசி தன்னிற்போட்டாற் கூடவே சோறுதானும் வேகா, தப்பா கொற்றவனே மாற்றுமிதுக்கில்லைபாரு ஆடியே போகருட கடாட்சத்தாலே அப்பனே புலிப்பாணி பாடினேனே,

(பொ-ரை) இன்னுமொரு வித்தையைக் கேள். வெண்காந்தி வேரை வாங்கி, கஞ்சாவிதை ஐங்கோலம் இவைகளைச் சேர்த்து உலையரிசியிற் போட்டால் சோறு வேகாது, இதற்கு யாதொரு மாற்றில்லையாம். (எ-று) (161)

பேயாடல்.

பாடியே யங்சிங் வயநமவென்று பண்பாக செத்தவுடன் பிசாசுபூதங் கூடியே யோடுமடா கண்டுபாரு குணமாக வங் மங் சிங் சிவயநமசியென்று கூடியே பிசாசுமுதற் பூதமெல்லாந் தூரக் காக ஓடுமடா கண்டுபாரே.

(பொ-ரை) யங், சிங், வயநமவென்று செத்தவுடன் பிசாசு, பூதங்கள் கூடிபோகும். அதற்கு வங், மங், சிங், சிவய நமசியென்று செபித்[illegible]ழும், சிவய நமசி யென்று ஜெபித்தால் எல்லாம் ஓடிப்போய்விடும். (எ-று) (162)

உடுக்கு கட்டல்.

பாரடா சிவனையெசித்துடுக்கைச்சான் பண்பாகச் சிவ நம்மை பகவதியாணை கூறடா ஐயுங்கிலியும் சவ்வுங்கட்டு குறிப்பாக மதவாரணைகட்டு சொடா ஐயுங்கிலியும் சுவாகாவென்று சிறப்பாக ஆதியந்தமலக்கட்டு வீரடா செபித்தவுடனுடுக்குகட்டும் விதமான போகருட கடாட்சந்தானே.

(பொ-ரை) உடுக்கையைக் கட்டுவதற்காக ஐயும், கிலியும், சவ்வும் உடுக்கையைக் கட்டு ஐயும், கிலியும் சுவாகா வென்று செபித்தால் உடுக்கையானது கட்டும். (எ-று) (163)

வியாதி போக்க,

தாமப்பா ஓர் தூளியந்ததூளி தயவாகமுன திருக்கண்ணிற் பின்தூளி பானப்பாகாச்சல்தலைவலியும்பாரிற் பறந்தோடச் சுவாமிகுரு வாணைபோவென் றுனப்பா விபூதியைநீ தியானமோதி யளித்தவுடன் பலபிணியு மகன்றுபோகும் வானப்பா போகருட கடாட்சத்தாலே வளமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) உலகத்தில் மானிடர்க்குண்டாகும் காய்ச்சல் முதலிய சகலரோகங்களும் பறந்துபோக சுவாமியாணை, குரு வாணைபோவென்று விபூதியில் தியானித்து கொடுக்க பலநோய்களும் ஒளிந்துபோகும். (எ-று) (164)

நீலகண்ட மந்திரம்.

பாடியே நீலகண்டர் சொல்லக்கேளு பண்பான ஓம் நீலகண்டமித்ரா ஆடியே மங்கிங்சர்வமனேகண்ட அடைவாக்கும் படு சுவாகாவென்றுகூடியே லட்சமுரு ஜெபித்துத்திரு குற்றமற்ற தற்பண மாதர்கார தன்பத்துநாடியே போகமா யிருந்தாணப்பா நலமான அன்னமிடு நூறுபேர்க்கு.

(பொ-ரை) நீலகண்ட மந்திரத்தைச் சொல்லக்கேள். ஓம் நீலகண்ட மித்திரா! மங், சிங், சர்வமனேகண்டகும், படுசுவாகா என்று லட்சமுரு செபித்து தர்ப்பணம் முதலிய தானங்களைச் செய். (எ-று) (165)

போக்ன பிராமணர்க் கன்னம்போடு பேதமில்லை பூசையது வலுசுத்தி நிறைத்துவிடு நீலகண்டஞ் சித்தியாச்சு சிரானதம்பனம்நீ செய்யவேண்டி ஜெயமாக சுவாமியை பொன்னிறமதாச்சு வீரான நீலகண்டந் தியானமப்பா விதமான நெஞ்சிலெண்கோணமெட்டே,

(பொ-ரை) பிராமணர்களுக்கு அன்னம் போடு பத்தி பூசைபோடு இவ்விதஞ் செய்தால் நீலகண்ட மந்திரஞ் சித்தியாகும் இதனால் ஸ்தம்பனவித்தையை யாடலாம். மனத்திலேயே எண்கோணம் போடு. (எ-று) (166)

ஓட்டியேவெம்புரோ மென்றுநாட்டில் தனியானவுருவப்பா முப்பத்தாறு திட்டியே செத்தவுடன் தங்கமாகும் திறமாகச் சகலமும் தம்பிக்கும்பாரு காட்டியே சுவாமிதனை வெள்ளையாகக் கருத்தில்வைத்து விபூதியிலே வட்டங்கீற ஆட்டியே யம்மாரோ மாயிரத்தெட்டோதி அன்பாகக்கொடுத்தவுட னழைக்கும்பாரே.

(பொ-ரை) அதில் வேம்புரோம் என்று போட்டு முப்பத்தாறு உரு ஜெபித்து வந்தால் செத்தவுடல் தங்கமாய் தம்பிக்கும், தவிர சுவாமியை வெள்ளையாக மனத்தில் எண்ணி விபூதியில் வட்டமாகக்கீறி அந்த மந்திரத்தை, ஆயிரத்தெட்டு உரு செபித்தவுடன் அழைக்கும். (எ-று) (167)

பாரடாசுவாமியைச்செந் நிறமதாகப் பண்பாகத்தியானித்து முக்கோணங்கீறிச் சேரடா கிலியும் ரோமென்றுசொல்லிச் செயலாகவாயிரத்தெட்டுஞ் செபித்து வீரடாவிபூதிதனை யளித்துக் கொண்டு விதமாகச் சகலமும் வசியமாகும் தீரடா பின்னொருத்தர் தனக்கேயீந்தாற் றிறமாக வசியமாய் வணங்குவாரே,

(பொ-ரை) சுவாமியை செப்பு நிறமாக தியானித்து முக்கோணம்போட்டு கிலியும், ரோம் என்று ஆயிரத்தெட்டுஉருசெபித்து விபூதியைக் கொடுக்க சகலமும் வசியமாகும் வேறொருவருக்குக் கொடுத்தாலும் அவர்கள் வசியமாய் வணங்குவர். (எ-று) (168)

வணங்கியே சுவாமியைப் பனிங்குநிறமாக வளமாகத் தியானித்துப்பிறைபோற் கீறி அணங்கியே யம்மாரோ மெனச்செபித்து அடைவாக வாயிரத்தெட் டுருத்தானோதி வணங்கியே விருதியைப் பூசிக்கொண்டால் நாயகனே சகலமு மோகமோகம் இணங்கியே சுவாமியை மோகநிறமாக வின்பமுறத்தியானித்து நாற்கோணங்கீறே:

(பொ-ரை) சுவாமியை பனிங்குநிறமாக எண்ணி பிறைபோற்கீறி அம்மாரோம் என்று ஆயிரத்தெட்டு உரு செபித்து விபூதி

யைப் பூசிக்கொண்டால் சகலமும் போகமாகும் சுவாமியை
மேகநிறமாகத் தியானஞ் செய்துநாற் கோணங்கீறு. (எ-று)
(169)

கீறியேஒம்யம்ரோமென்று கிருபையாய்த் தென்னோலை தன்
னிலப்பா கீறியே யிருவர்பேர் தன்னைக்கூட்டிச் சிறப்பாகவாயி
ரத்தெட்டுருசெபித்து விரியேயெதிரின்முன் னிறப்பில்வைக்க
விதமாக விருவருமே பிரிந்துபோவார் தேறியே சுவாமியை
புகைவர்ணமாகத் தெளிவாக தியானித்தைங் கோணங்கீறே,

(பொ-ரை) ஓம், யம், ரோம் என்று தென்னஓலையில் இருவர்
பேரைப்போட்டு ஆயிரத்தெட்டுரு செபித்து எதிரியின் முன்வை
க்க இருவரும் பிரிந்துபோவார். பிறகு சுவாமியை புகைநிறமாக
தியானித்து ஐங்கோணங்கீறு. (எ-று) (170)

கீறியே யம்ரோமென்றுகாட்டிக் கிருபையுட னாயிரத்தெட்
டுருஜெபித்து வாரியே விபூதியைநீ போட்டபோது வரிசையுடன்
சகலமு மோடிப்போகும் தேறியேசுவாமியைப் பிரளயகால ருத்
ரனைத் தியானித்து முக்கோணத் திறமாய்க்கீறி ஏறியோ மரோ
மென்றுகாட்டி எளிதில சத்துருவின் செத்தெழுத்தைகாட்டே.

(பொ-ரை) யம், ரோம் என்றுபோட்டு ஆயிரத்தெட்டுரு
செபித்து விபூதியை நீபோட்டவுடன் சகலமு மோடிப்போய்வி
டும். பிறகு சுவாமியைப் பிரளய காலருத்திரனை தியானஞ்செய்
து முக்கோணங்கீறி ஓம், ரோம் என்றுபோட்டு விரோதியின்
எழுத்தை அதில்போடு. (எ-று) (171)

காட்டியே யாயிரத்தெட் டுருத்தானேதி காயகனை யழல்
காட்ட கீறிப்போகுமே. வாட்டியே சகலமு மாரணமாய்ப்போ
கும் வளமானசுவாமியைக் கறுப்பதாகக் கூட்டியே. தியானித்து
முக்கோணங்கீறி குணமாக யம்மென்று அதிலே காட்டி. கூட்டி
யேயாயிரத்தெட் டுருத்தானேதி சுறுக்கப்பா நீயிடவே பேதந்
தானே,

(பொ-ரை) ஆயிரத்தெட்டுரு செபித்து அழல்காட்ட சகல
மும் மாரணமாய்ப் போகும். பிறகு சுவாமியைக் கறுப்பாக

எண்ணி. முக்கோணங்கீறி யம் என்று எழுதி ஆயிரத்தெட்டுரு
செபித்துநீரு நீயிட்டால் பேதமடையும். (எ-று) (172)

தானான சிவகிரியின் தண்டாயுதபாணி தாதாவை மென்மே
லும் பணிந்துயிந்திரன் தேனான போகருட னிவர்கள்மூவர்தெளி
வாகமுன்யுகத்தில் மூவரப்பா கோனனகலியுக மிருநூற்றைந்தில்
கொற்றவனே புலிப்பாணி பூசித்தேன்யார் மானான அஷ்டசத்தி
கோடாசத்தி மைந்தனே சித்தருட நடனந்தானே.

(பொ-ரை) தண்டாயுதபாணியை மென்மேலும் வணங்கி
இந்திரன், போகர்முதலியவர்கள் முன்யுகத்திலும் இக்கலியுகத்தில்
இருநூற்றைந்தில் புலிப்பாணியான நானும் பூசித்தோம் அஷ்ட
சத்தி, கோடாசத்தி இவைகளெல்லாம் சித்தருட நடனமாகும்.
(எ-று) (173)

தானான ராஜனொடு குருக்கள் பெண்கள் தயவான வேதியர்
கள் சிறுவரேழை வானான விவர்களுக் கிடுக்கமான பஞ்சமத்
தொழில்முறைகள் செய்தாற்றோஷங் கோனகச் செய்தவர் கண
ரகில் வாழ்வார் குற்றம்வரும் நற்பதவி கிட்டாதப்பா தேனான
போகருட கடாட்சத்தாலே தெளிவாகப் புலிப்பாணி பாடி
னேனே.

(பொ-ரை) ராஜன், குருமார், பெண்கள், வேதியர்கள், சிறு
வர், ஏழை இவர்களுக்கெல்லாம் பஞ்சமத்தொழில் செய்தால்
தோஷமாம். அப்படி செய்தால் நரகத்தில் வீழ்வர் அப்பொ
ழுது குற்றம்வரும் நல்லபதவி கிட்டாது. (எ-று) (174)

பாடியேசாத்திரத்தைப் படித்தபேர்கள் பண்பிலாக் கூன்
குருடு ஊமையாகி வாடியே சப்பாணி நொண்டியாகி வளமிலாச்
செவிடாகி ரூபங்கெட்டுச் சாடியே யவர்களெல்லாம் நாசமாகிச்
சாவார்கள் பெண்டுபிள்ளை யெல்லாஞ்சேர்ந்து கூடியே யாதியி
லே யழுந்துமாய்ந்து கொடிதான நரகத்தி லழுந்துவாரே.

(பொ-ரை) சாஸ்திரத்தைப் படித்தவர்கள், கூன், குருடு,
ஊமை, சப்பாணி, நொண்டி, செவிடு, முதலிய ரூபமுடையவர்க
ளாய் நாசமாய் சாவார்கள். பெண்பிள்ளைகளெல்லாருங்கூட அவ்
விதமே யாவார்கள். (எ-று) (175)

வாரான ஐயும்நமோ பகவதே ஓம் மகாருபி மகாமாயி மகத்வசத்தி தோதாகாரணி சுவாகாவென்று தெளிவாக லட்சமுரு செபித்துத் திருசாரவாக தர்ப்பணத்தோ டோமமன்னந் தய வான பூசையது திறமாய்ச்செய்நீ சுருன மகாமாயை சித்தியாச்ச குணமாக வதின் பெருமை கூறக்கேளே.

(பொ-ரை) ஐயும், நமோபகவதே ஓம் மகாருபி, மகாமாயி, மகத்துவசத்தி, காரணதாரணி, சுவாகா என்று லட்சமுரு ஓதி தர்ப்பணம், அன்னதானம், பூசை இவைகளை செய்துவந்தால் பெருமைசொல்ல வொண்ணாத மகாமாயை சித்தியாகும். (எ-று) (176)

கேளடா சத்தியைத்தான் பூசைசெய்யக் கேள்செய்து சோதனைகள் பார்க்கவந்தால் நாமடா மந்திரத்தைத் தியானஞ்செய்து கமமான வஸ்துசத்தி பால்பூவென்று வாளடா தியானித்து நினைத்தபோது வளமான பால்பூவா யிருக்கும்பாரு ஆளடா போகருட கடாட்சத்தாலே யப்பனே புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) சத்தியைப் பூசைசெய்து சோதனைபார்க்கவந்தால் மந்திரத்தை தியானஞ்செய்து வஸ்துசத்தி பால், பூவென்று தியானித்து நினைத்தால் அதுபாலும் பூவுமாகவிருக்கும் (எ-று) (177)

கார்த்திகை வீரியார்ச்சுன மந்திரம்.

அருளாமே ஓம்-ஆம் ஸ்ரீம்-கிலியும் அரியை கார்த்திகை வீரியார்ச்சுன சுவாகாவென்று பொருளாக லட்சமுரு செபித்துத் திரு பொங்க மாய்த்தர்ப்பணமு மோமமன்னம் வரமாக பூசையது பத்துஞ்செய்நீ மைந்தனே சித்திக்கக் கிரிகையாகுஞ் சுருளாக நினைத்தபடி யெல்லாஞ் செய்யுஞ் சுகமான போகருட கடாட்சம் பாரே.

(பொ-ரை) ஓம், ஆம், ஸ்ரீம், கிலியும், அரியை, கார்த்திகை வீரியார்ச்சுன சுவாகா, என்று லட்சமுரு செபித்து தர்ப்பணம், ஒமம் பூசை இவைகளைச்செய்து வந்தால் சித்தியாய் முடியும் நினைத்தபடி யெல்லாஞ் செய்யும். (எ-று) (178)

நரசிங்க மந்திரம்.

பாரடா நரசிங்கஞ் சொல்லக்கேளு பாங்காக ஓம்சிங்கமுக வா ஓம்-ஓம் கூரடா பிடித்தசுடித் தொசித்துசுற்றிக் குணமாக கண்டுபிடித்தறிவாளைப்போல் தீரப்பா பசாசுபேய் பொடிபட் டோடத் திறமாக நரசிங்க ராஜாவாணை சீரடா ஸ்ரீம் கிலீம்சுவா காவென்று சிறப்பாக லட்சமுரு ஜெபித்துத் தீரே.

(பொ-ரை) நரசிங்கமந்திரஞ் சொல்லுகிறேன் கேள். ஓம் சிங்கமுகவா ஓம், ஓம், பசாசுபேய் பெட்டிட்டபோட நரசிங்கராஜா ஆணை, ஸ்ரீம், கிலீம், சுவாகா என்று லட்சமுரு செபிப்பாய். (எ-று) (179)

தீரப்பா தர்ப்பணமு மோமமன்னம் திறமாகப் பூசைசெய்து தெளிவாகத்தான் கூரப்பா வானைமுதல் மிருகஜாதி கொற்றவனே காடுசெங்கெ லெழுதிக்கட்டு பாரப்பா மிருகத்திற் பெருமையில்லை பலன்கிட்டும் நினைத்தபடி தெல்லாஞ்செய்யும் சோபா போகருட கடாட்சத்தாலே நிச்சயமாய்ப் புலிப்பாணி சொன்னேன்காணே.

(பொ-ரை) தர்ப்பணம், ஒமம், அன்னதானம் பூசை இவைகளைச்செய்து வானைமுதல் மிருகஜாதி இவைகளை எழுதிக்கட்டு எல்லாப் பலனும் கிடைக்கும், நினைத்தபடி யெல்லாஞ் செய்யும். (எ-று) (180)

காணவே ஓம்பர்வாத்துருநாதி ...வாக ஓம்படு சுவாகா வென்று மாணவே லட்சமுரு செபித்துத் ... வளமான தர்ப்பணமு மோமமன்னங் கோணமற் பூசைசெய்து ... பெலத்துசெய்நீ குணமாகச் சகமத சித்தியாகும். நாளு... நினைத்தபடி யெல் லாஞ்செய்யும் நாயகனே பசாசுமுதற் பூதம்... ாமே.

(பொ-ரை) ஓம், பர்வாத்து ரோதர... படுசுவாகா வென்று லட்சமுரு செபித்துதர்ப்பணம், ஓமம், அன்னதானம் பூசை இவைகளைச் செய்தா... ...கூடும். இதனால் பசாசு, பூதம் முதலியவை ... (எ-று) (181)

தெண்டபோரண்ட மந்திரம்.

போமப்பா பின்னமொன்று சொல்லக்கேளு பொலிவான தெண்டபோரண்டத்தன்னைத்தாமப்பா ஆம் ஓம் அகோரபிரபல்

வியமான கண்ட பேரண்ட சிங்காவா மப்பாவியாக்கிரகவாகா சாகா மிருகா வளமாக காற்றுபல்லா அஸ்டவச்சா ஆமப்பா குரு மூலதாகவேதான் அடைவாக சங்கு சக்ராதியெண்ணே.

(பொ-ரை) இன்னுமொன்று சொல்லுகிறேன் கேள், அதாவது கெண்டபேரண்ட மந்திரமாகும். ஆம், ஓம், அகோரபிரபல கண்டபேரண்டசிங்கர்வா, விபரக்கிரகவாரா சுவர், மிருகா, காற்று பல்லா அஷ்டவச்சா, என்று சொல்லு. (எ-று) (182)

எண்ணவேதாதுப் பிராணமாவிதாகமா யிதமான் கெஜபட்சேயெந்த நரசிம்மா அண்ணவே கற்பாந்தா அக்னிலீலா, அடைவான ஊதாப்பு யந்திரத்திற் பண்ணவே கிலவச்ரமானகுண்டா பண்பான தாஷ்டகவக்ரஷ்ரார்த்தி உண்ணவே பட்சமாருதமச் சாந்த உத்தமனே தாரணியில் நம்பியென்னே.

(பொ-ரை) அன்றி, தாதுப்பிரானே, மீரவிதாகா, கெஜபட்சே, எந்த நரசிம்மா கற்பாந்தா, அக்கினிலீலா, என்பதாதிப் பெயர்களால் நம்பி அழை. (எ-று) (183)

என்னவே யுத்தண்ட வஸ்திரசர்ப்பா என்னப்பா கெண்டபேரண்டஞ்சித்தி மன்னவனே மூலமப்பா சொல்லக்கேளு. வளமான ஓம் இரீம் ஸ்ரீயுமென்று உன்னவே கிலீம் ஐயும் சுவாகா வுத்தமனே கெண்டபேரண்ட நரசிங்கா பன்னவே மகா சர்ப்பானந்தகாயா பதிவான சர்வசத்ரு நாசமாமே.

(பொ-ரை) உத்தண்ட வஸ்திரசர்ப்பா என்று சொல்லக் கெண்டபேரண்டமானது சித்தியாகும். இதக்கு மூல்மந்திரமாவது ஓம் இரீம் ஸ்ரீரீம் கிலீம் ஐயும் சுவாகா. கெண்டபேரண்ட நரசிங்கா மகாசர்ப்பானந்தகாயா என்று சொல்ல சகல பகைவர்களும் சேதமாவார்கள் (எ-று) (184)

ஆமப்பா சிந்தசிந்தி யந்தியந்தி அடைவாக லட்சமுரு தானேபோது தாமப்பா தாப்பான மாயிரந்தான் பத்துதயவானலுமப்பா ஆயிரந்தான் வாமப்பா பிராமண போசனந்தா நூறு வளமான பூசையதுதான்பத்தப்பா நாமப்பா கெண்டபேரண்டஞ்சித்தி காயகமே சகலசித்து மாடும்பாரே.

(பொ-ரை) இதை அந்திசந்தியாக லட்சமுரு தியானஞ் செய்து ஆயிரம் பிராமணர்களுக்குப் போஜனஞ் செய்வித்து பத்துநாள் பூசை போட்டு வந்தால் சகல சித்துமாகும்(எ-று) ()

த்ராடா பிரமனொடு விஷ்ணுருத்ரன் பண்பான குலிசனொடு தேவர்யாருஞ் சிரடாசித்தர்முத்தர் முனிகள்பூதஞ் சிறப்பில்லா ராட்சதையுமேல்லைப்புந் தீரடாசத்துருக்கள் மிருகஜாதி திறமான விஷமுதலா யெதிர்கில்லாது வீரடா நினைத்தபடி யெல்லாஞ்சித்தி விதமான போகருட கடாட்சந்தானே.

(பொ-ரை) பிரமன் விஷ்ணு ருத்திரன் இந்திரன் தேவர்கள் சித்தர் முத்தர் மூனிகள் பூதங்கள் ரட்சகர்கள் சத்துருக்கள் மிருகஜாதி விஷஜந்துக்கள் ஆகிய இவைகள் எதிரே ரில்லா நினைத்த விதமெல்லாஞ் சித்தியாகும். (எ-று) (186)

பிரத்தியங்கிராதேவி மந்திரம்.

தானேதா னின்னமொன்று சொல்லக்கேளு தயவாகப் பிரத்தியங்கிராதேவிமந்திரம் வானேதான் நலசத்துருசம்மாரி வளமானசகலசம்பத்துமீவாள் தேனேதான்கிருபை வாரிதியதாளுள் தெளிவானகார்மேக வடிவமுள்ளான் கோனேதான் சிங்கமுகஞ் சிங்கப்பல்லில் கொடியமுக்கணுமக்கினி சுவாலையெண்ணே.

(பொ-ரை) பிரத்தியங்கிராதேவி மந்திரத்தைச் சொல்லுகிறேன் கேள், சத்துரு சம்மாரியாகிய அவள் சகல சம்பத்துகளையுங் கொடுப்பாள் கிருபா சமுத்திரமானவள். கறுத்த வடிவமுள்ளவள். சிங்கமுகம் சிங்கப்பல் முக்கண் அக்கினி சுவாலையென்றெண்ணு. (187)

எண்ணவேயஷ்டதிக்கு நிறைந்ததேவி இலகுமாயிரத்தோடாயிரங்கையுள்ளான் பண்ணவேகிண்கிணிமாலை கொண்டாள் பத்தகர்கள்தன் சத்துருவை நாசஞ்செய்வாள் அண்ணவேயுதிர மது பானஞ்செய்வாள் அடைவான சகலசாஸ்திரமும் வல்லாள் நண்ணவே தியானித்துச் சரணம்பண்ணு நாயகனே மூலமினி சொல்லக்கேளே.

(பொ-ரை) அஷ்ட திக்குகளிலும் நிறைந்ததேவி ஆயிரங் கையுள்ளாள். கிண்கிணியலை கொண்டாள், சத்துருக்களை நாசஞ் செய்வாள், உதிரபானஞ் செய்வாள் சகல சாஸ்திரங்களின் வல்லாள் ஆகிய அவளை தியானித்துச்சாடனம் பண்ணு இனி மூலத்தைச் சொல்லுவேன் (எ-று) (188)

கேளப்பா சுவாகாசிம்மே பிரத்தியங்கிரே கெணிதமுடன் உம்படுவோம் ஆமென்று நாளப்பா இரீங்ஸ்ரீரியும் கிலியுமென்று நலமானசிம்மமுகியுக்கிரகாளி சூளப்பாவட்டமுக்கோணமிட்டுச் சுகமாக வதின்மேலே யெண்கோணஞ்சதுரம் ஆளப்பா வட்ட மதிலிச்சமென்றிட்டு அறியமுக்கோணமேல் முனையிற்கேளே.

(பொ-ரை) சுவாகரசிம்மே, பிரத்தியங்கிரே உம் படு ஓம், இரீங் ஸ்ரீரியும் கிலியும் சிம்மமுகி உத்திரகாளி முக்கோணம் போட்டு அதின்மேல் எண்கோணம் சதுரம் அதின்மேலுள்ள வட்டத்தில் இச்சம் என்று போட்டு முக்கோணத்தின் முனையில் (189)

கேளடாரீங்காரமதிலேயிட்டுக் கெணிதரை யிடக்கோணம் உம்மைநாட்டி ஆளடா வலக்கோணம் படுவேயென்று அடைவான எண்கோணம்ரீயைக்கேளும் நாளடாநாற்கோணம் வல மேல்மூலைநலமாக ஆமென்று பதித்துப்போடு சூளடாயிடக்கோணமேலேயப்பா சுகமாகக்கிரோமென்று கூட்டிப்போடே.

(பொ-ரை) அதில் ரீங்காரம் போட்டு இடது கோணத்தில் உம் என்றிட்டு வலது கோணத்தில் படுவென்றுபோட்டு எண் கோணத்தில் ரீ என்று போடுவதைச் சொல்லுகிறேன் கேளும், நாற்கோணத்தின் வலதுபக்கமேல் மூலையில் ஆம் என்றும்: இடதுகோணத்தில் கிரோம் என்றும் போடு, (எ-று) (190)

போடகீயிடக்கோணங் கீழேயப்பா பொங்கமுடன் புரோ மென்றுபதித்துவைப்பாய் ஆடேகீவலக்கோணங் கீழேதானும் அப்பனேஸ்ரீம்மென்று அடைவாய்ப்போடு சூடேகீ யக்ஷரங்கள் கிரந்தந்தன்னிற் சூட்டினல்வசிமையடா தகமோதங்கம் நாடேகீ லக்ஷமுரு ஜெபித்துத்திரு நாயகமேதர்ப்பணமுமோமஞ்செய்யே.

(பொ-ரை) இடது கோணத்தின் கீழ் புரோம் என்றும், வலது கோணத்தின் கீழ் ஸ்ரீம் என்றும், போடு, இந்த அட்சரங்களை யெல்லாம் கிரந்தத்தில் போடவேண்டும். தங்கத் தகடாயிருக்கவேண்டும். லட்சமுரு ஜெபித்து தர்ப்பணம், ஓமம் முதலியவை செய். (எ-று) (191)

செய்யப்பா பிராமணருக் கன்னம்போடு செயலாக நினைத்தபடி யெல்லாஞ்செய்யுங் கையப்பா பூசையது சத்திபூசை கனியாகச் செய்திடுவாய் வெள்ளிதோறும் அய்யப்பா இதற்கெதிரி ஜெகத்திலில்லை யப்பனே வாலைகந் தன்னிலில்லை உய்யவே போககுட கடாட்சத்தாலே உத்தமனே புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) பிராமணருக்கு அன்னதானஞ் செய், நினைத்த வண்ணமெல்லாஞ் செய்யும், வெள்ளிக்கிழமைகடோறும் சத்தி பூசைசெய், இதற்கெதிர் உலகத்திலில்லை தேவலோகத்திலுமில்லை. (எ-று) (192)

பாடினேன் பூச்சக்கரவாளத்துள்ளே சுபமான மகமேரு பர்வதங்க ளெட்டும் நாடினேன் நவகண்டஞ்சத்ததீவு நலமான சப்தசாகரங்க ளேழும் கூடியே யஷ்டதிக்குஞ்ஐம்பத்தாறும் குணமான தேசமெங்குஞ் சென்றுலுத்தான் ஆடியே பிரத்தியங்கிரா கிருபையாலே அப்பனே ஜெயங்கொண்டு மீளலாமே.

(பொ-ரை) பூச்சக்கர வாளத்துக்குள்ளே மகாமேருமலை, நவகண்டம், சத்ததீவு சத்தசமுத்திரங்கள், அஷ்டதிக்கு ஐம்பத்தாறு தேசங்கள். இவைகளுக்குப் போனாலும் ஜெயித்துக்கொண்டு வரலாம். (எ-று) (193)

ஆமப்பா விஷ்ணுநரசிங்கமாகி அடைவாக விரணியனைக் கொன்றதோஷம் வாமப்பா பிரமங்கொண்ட மயக்கம்நீர வளமான ஈஸ்வரனுஞ் சரபருபந் தாமப்பா வடிவுகொண்டு நரசிங்கத்தைத் தான்கிழித்தே யுதிரமதைக் கொண்டதாலே. போமப்பா மருள்கொண்டு மயக்கமீறிப் பொலிவான ஈஸ்வரனுமிருந்தான் பாரே.

(பொ-ரை) விஷ்ணு நரசிங்கரூபமாகி இரணியனைக் கொன்ற பாவமானது நீர ஈஸ்வரன் சரபப்பட்சி ரூபமாய் நரசிங்கத்தைக் கிழித்து உதிரங்குடித்ததால் மயக்கமாய் ஈஸ்வரன் இருந்தான். (எ-று) (194)

பாரப்பா ஈஸ்வரனார் மயக்கநீங்கள் பரிவான விஷ்ணு செண்டபேரண்டமாகிச் சேரப்பா சரபத்தைப் பிளந்துபானஞ் செய்தாரே ஈஸ்வரற்குப் பிரமைபோக்க இரப்பா கெண்டபேரண்ட மப்பா நிறமழுந்து மருள்கொண்டு மயக்கமாகிக் கூறப்பா தேவ ர்களை யடித்ததாலே குணமாக ஈஸ்வரனு மோடவைத்தே.

(பொ-ரை) ஈஸ்வரனுடைய மயக்கமானது நீங்க விஷ்ணுவானவர் கெண்டபேரண்டமாய் சரபத்தைப் பிளந்து பினஞ்செய்தார். அப்போது ஈஸ்வரனுக்கு மயக்கம் போச்சு அந்தக்கெண்ட பேரண்டம் மயக்கங்கொண்டு தேவர்களை யடித்ததால் ஈஸ்வரன் ஓடும்படியானது. (எ-று) (195)

ஆச்சப்பா இதனைப் பார்வதியாள்பார்த்து அடைவான பிரத்தியங்கி ரூபமாகி வாச்சப்பா கெண்டபேண்டபட்சி மதநீங்கத் தான்பிடித்துச் சிரசைகொய்யப் போச்சப்பா பிரமையது தீர்ந்து போச்சு பொலிவான விஷ்ணுவுந்தா னுருவமானார் வீச்சப்பா போகருட கடாட்சத்தாலே விதமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) இதைப் பார்வதிபார்த்து பிரத்தியங்கி வடிவமாய்கெண்ட பேரண்டபட்சியின் மதமானது நீங்க அதைப்பிடித்து சிரசை யறுக்க அதன் மயக்கம் தீர்ந்துவிட்டது. அப்போது விஷ்ணுரூபமானார். (எ-று) (196)

அயச்செம்பு.

பாடியே யயச்செம்பு சொல்லக்கேளு பண்பாங்கற்றுமரையின் கிழங்கை யாட்டி கூட்டியே யிரும்புகளின் மேலேபூசிக் கூசாமற் புடம்போடச் செம்பதாகும் ஆடியே யச்செம்பு ஏழதாகும் அப்பனே வெள்ளியிடை யொன்றுகூட்டி நாடியே யுருக்கிடவே ஏழுமாற்று நாயகனே தப்பாது செய்துகேளே.

(பொ-ரை) அயச்செம்பு சொல்லுகிறேன் கேள், கற்றுமரைக்கிழங்கை நன்றுயரைத்து இரும்பின்மேல்பூசிப் புடம்போட்டால் அது செம்பாகும். அந்தச் செம்பு ஏழும், வெள்ளி ஒன்றுஞ் சேர்த்து உருக்க ஏழுமாற்றாகும். (எ-று) (197)

கேளாய் யச்செம்பொன்று தங்கமொன்று கெணிதமுடன் தானுருக்கி தகடாய்கட்டிக் கூளாகப் பொடியாக நறுக்கியப்பா சுத்திசெய்த ரசமிரண்டுங் கூடவிட்டு நாளான கெந்தியிலைம்பதாலுங்கூட்டி நாயகனே தாரமிடையரையுஞ்சேர்த்து வாளான பொற்றலையின் சாற்றாலாட்டி வளமாக வுல்ரவிட்டுக்குப்பிக்கேற்றே.

(பொ-ரை) அந்தச் செம்பு ஒரு எடையும், தங்கம் ஒரு எடையும் உருக்கித் தகடாகத் தட்டிப்பொடியாக நறுக்கி சுத்தி செய்த ரசம் இரண்டெடைகூடச் சேர்த்து கெந்தகம் நாலெடை போட்டு தாளகம் அரையெடை சேர்த்து அவைகளை கரிசலாங்கண்ணிச் சாற்றாலாட்டியுலர்த்தி குப்பியில்போட்டு. (எ-று) (198)

ஏற்றப்பா சட்டிக்குள் மணல்விரல்தானுலு விதமாகவேகொட்டிக்குப்பிக்கேதான் மாற்றமா மண்சீலை யேழசெய்துவாய்மூடமூாக்கல்லையரைத்துமூடு சாற்றவே குப்பிவைத்து மணலைகொட்டிச் சார்வாகக் குப்பிவாய்க் கழுத்துமட்டும் ஊற்றமாய்நாற்சாமமெரித்தேயாற்றி உத்தமனே பிரிக்கச் செந்தூரமாமே.

(பொ-ரை) அந்தக் குப்பிக்கு எழுசீலை மண்செய்து வாய்க்கும் பலப்பக்கல்லைவைத்து ஒரு சட்டியில் நான்குவிரற் கடைமணலைக்கொட்டி அதில் குப்பியைவைத்து அதன் கழுத்துவரைக்கும் மணலைப்போட்டு நாலுசாம மெரிக்க அது செந்தூர மாகும். (எ-று) (199)

ஆமப்பா நவலோகம் பத்துக்கொன்று அப்பனேதான்கொடுக்கமாற்றேபத்து தாமப்பா தேவிக்கும் திருவாணிக்குந் தயவாகப் பூசைசெய்து கிழவில்நின்று வாமப்பா பெரியோரை வணங்கி வாழ்த்தி வாழ்குவா புலகமதிற் சீமானாக நாமப்பா போகருட கடாட்சத்தாலே நலமாகப் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) நவலோகம் பத்துக்கு இதுவொன்று கொடுக்கப் பத்து மாற்றாகும் தேவி திர்வாணி, இவர்களைப் பூசித்து பெரியவர்களை வணக்கஞ்செய்து துதித்து இவ்வுலகத்தில் சீமானாக வாழ்வாய். (எ-று) (200)

ரசமணி.

பாடியே ரசமதை சுத்திசெய்து பண்பான நாகத்தின் வாயில்வார்த்து ஆடியே முப்பூவுங் கழஞ்சுபோட்டு அடைவாகக்கட்டிமேமேலேதூக்கு கூடியேயதின்கீழே பானைவைத்து கொற்றவனே பாம்பழுகி வீழும்பாரு நாடியேரசங்கட்டி மணியாய்ப்போகும் நாகவினை வேதைமுதல் வசியமாமே.

(பொ-ரை) சுத்திசெய்த ரசத்தை பாம்பின்வாயில் வார்த்து முப்பூ ஒரு கழஞ்சுகூடப்போட்டு வாயைத் தைத்து மேலே தூக்கி மேலும் கிழுமாகக் கட்டி அதற்கடியில் ஒரு பானையை வை. அந்த பாம்பானது அழுகி அந்தச்சட்டியில்விழும் அப்போது ரசங் கட்டியிருக்கும். அதனால் அநேக வேதையாகும். (எ-று) (201)

ஆமேநீ கொதியிட்டுச் செந்தூரித்தால் அப்பனேசகலலோகந் தன்னில் வேதையாமேநீ யிருநூறு மிந்திரஜாலம் வளமானகண் ணாடிபோலே தோற்றுந் தாமேநீ நவரத்நங் கோர்த்தார்போலே தானிகளில் விளங்கு புலிப்பாணிதானும் நாமேநீபோகருட கடா ட்சம்பெற்றே நலமான ஜாலமிருநூறுமுற்றே.

(பொ-ரை) அந்த ரசத்தைக் கொதிக்கவைத்துச் செந்தூரஞ் செய்துகொண்டால் சகல லோகத்தையும் வேதிக்கலாம். இந்த இருநூறும் இந்திரஜாலமாகும், கண்ணாடிபோல் தெரியும் நவரத்னங்களை கோவை செய்ததுபோல புலிப்பாணியான நான் போகருடைய கடாட்சத்தால் பாடினேன். (எ-று) (202)

புலிப்பாணிஜாலத்திரட்டு - முற்றிற்று.

——[*]——

உ

சிவமயம்.

புலிப்பாணிமுநிவர் அருளிச்செய்த

சிதம்பர பூசை—உரு.

——(*)——

அத்திமுகன்றனை யளித்தவரனே காப்பு அகிலமெங்கு நிறை ந்து நின்றவருளேகாப்பு முத்திதருவேதாந்த முதலேகாப்பு முப் புரத்தைத் தகித்தெரித்த பரனேகாப்பு சத்தி யொருபாகம் வைத் த வரசே காப்புசங்கரனே யம்பரனே ஞானமூர்த்தி வெற்றியாஞ் சிதம்பரத்தின் பூசைமார்க்கம் விளம்புகிறேன் கணேசனுட பாதங் காப்பே.

(பொ-ரை) விநாயகனைப் பெற்றவனும், உலகமெங்கும்வியா பித்திருந்த திருவருளும், வேதாந்த முதலும், முப்புரங்களை யொழித்த பிரமனும் உமையொருபாகத் தன்னனும் சங்கரனும் அம்பரனும், ஞானமூர்த்தியும், சிதம்பரபூசை மார்க்கம் சித்திய டைய காவலாவார்கள். (எ-று) (1)

காப்பான ஆறுவரைகுறுக்கேகீறி க்குதரிய ஆறுவரைநெ டுக்கேகீறி ஆப்பான யிருபத்தஞ்சறையுமாச்சு அடைவான மூனை தோறும் சூலம்போடு தாப்பான முதலறையி னுறுகோணந் தய வான நகாரமொடுங் கூடவேதான் வாப்பான ஐயோடுவகாரந்தா னும் வளமானலக்கமது பத்துமாமே.

(பொ-ரை) ஆறுகீற்று குறுக்காகவும், ஆறுகீற்று நெடு க்காகவும் கிழித்தால் இருபத்தைந்து அறை ஆச்சு, ஒவ்வொரு கீற்றின் முனையிலும் சூலம்போடு பிறகு இந்த அறைகளில் முதல் அறைக்குள் அறுகோணமிட்டு அதின் மத்தியில் நகாரம், ஐகாரம் வகாரம் இவைகளும் லக்கம் பத்தும் போடவேண்டும். (எ-று) (2)

ஆமப்பா அடுத்தறையிற்பிறைதான்கோணம் அடைவானமகா ரமொடு இகாரங்கூடத் தாமப்பா கிலியொடு வகாரந்தானுந் தயவா னலக்கமது பதினெட்டாகும் வாமப்பா அடுத்தறையில் முக்கோ ணந்தான் வளமான சிகாரமொடு உகாரந்தானும் நாமப்பா சவ்வு டனேககாரந்தொட்டு நலமானலக்கமது பதினைந்தாமே.

(பொ-ரை) அதற்குச் சமீபமான இரண்டாவது அறையில் மூன்றாம்பிறைபோற் கோணம்போட்டு அதின் நடுவில் மகாரம், இகாரம், கிலீம், வகாரம் இவைகளையும் லக்கம் பதினெட்டும் போடவேண்டும். மூன்றாவது அறையில் முக்கோணம்போட்டு அதின் நடுவில் சிகாரம், உகாரம், சவ் இவைகளும் லக்கம் பதின ஞ்தும் போடவேண்டும். (எ-று) (3)

ஆமடா யிதினருகே யறுகோணந்தான் அடைவான வகார மொடு ஒகாரந்தானும் தாமடா ஹ்ரீம்மைமுடனே யகாரங்கூடத் தயவானலக்கமது ஆறும்பாரு வாமடா யிதினருகே வட்டம்போடு வளமான யகாரமொடு ஓகாரந்தான் நாமடா ஹரிவோமென்று நாட்டி நலமான அகாரமொடு லக்கமூன்றே.

(பொ-ரை) நாலாவது வீட்டில் அறுகோணம் போட்டு அ தின் மத்தியில் வகாரம், ஒகாரம், ஹ்ரீம், ஐம், யகாரம் இவைகளை யும் லக்கம் ஆறையும் போடவேண்டும். ஐந்தாவது வீட்டில் வட் டமாகக் கோணம்போட்டு அதின் மத்தியில் யகாரம், ஒகாரம், ஹரிஓம், அகாரம் இவைகளையும் லக்கம் மூன்றையும் போட வேண்டும். (எ-று) (4)

மூன்றான நடுவணையை யெடுத்துமாறி முன்னுமாய் சக்கர
மோரிருபத்தஞ்சில் நான்றான குலைத்தினிடைகள்தோறும் நாய
கனேரீம் ஸ்ரீம்பின்று மாட்டுப் பான்றான ஆலுமுனை ஸ்ரீம்மைப்
போடு பண்பான திரிவட்டம் பாங்காய்ச்சூட்டு ஊன்றான உள்
வட்டமிதழ்தான்மூன்று உத்தமனே யிருவட்ட மிதழீரெட்டே.

(பொ-ரை) இவ்விதமே மற்றநான்கு வரிசைகளாயிருக்கின்ற இருபது வீடுகளுக்கும் ஒவ்வொரு வரிசையி லுள்ள மூன்றாவது வீட்டுக் கோணங்களிலுள்ளவைகளி லிருந்து வரிசையாக மாறிப் போடவேண்டும். பிறகு இவ்விதம் போட்டுமுடிந்த இருபத்தைந்து அறைகளின் முனைகளுக்கெல்லாம் சூலம்போட்டு அச்சூலங்களின் மத்தியில் ஸ்ரீம் போட்டு அதற்குமேல் மூவளையம் நான்குபோட்டு அதில் முதல்வளையத்தில் மூன்று இதழ்களையும், இரண்டாவது வட்டத்தில் பதினாறு இதழ்களையும். (எ-று) (5)

எட்டான திரிவட்ட மென்னுனைகப்பா இதமாக நடுவட்ட
முதலாமாதி கட்டான அகாரமுதல் சகாரமட்டுங் க்ஷிவாக ஐம்
பத்து ஒன்றுமாச்சு கிட்டான உபரேகை வாசல் நாலு கீழ்வாசல்
கணபதிக்குக் கங்குநாட்டு நட்டான மேல்வாசல் வடுகன் பீஜம்
நாயகனே வங்கென்று நாட்டிடாயே.

(பொ-ரை) மூன்றாவது வட்டத்தில் முப்பத்திரண்டு இதழ்களையும்போட்டு அவ்விதழ்கள் ஐம்பத்தொன்றிலும் ஐம்பத்தொரு பீஜாட்சரங்களைப் போடவேண்டும். இவைகள் தீர்ந்தபின் அந்த வட்டங்களுக்குமேல் இரண்டு கீற்றுகளாக நான்குவாசல்கள்கட்டி அவ்வாசல்களில் கீழ்வாசலில் கங் என்று கணபதிக்கும்மேல் வாசலில் வங் என்று வடுகனுக்கும், போடவேண்டும். (எ-று) ()

நாட்டியே தென்வாசல் பிரிதி பீஜம் நாலாக இம்மென்று
நாட்டுநாட்டு கூடியே வடவாசல் மதியின்பீஜம் குணமாக்ச் சம்
மென்று குறித்துப்போடு ஆட்டியே யுபரேகை வீதிக்குள்ளே
அடைவாக விந்திரனில்அம் பாருபாரு வாடியே வக்கினியில் ரம்
மென்றப்பா வளமாக எமன்றனிற் சம்மென்று போடே.

(பொ-ரை) தெற்குவாசலில் இம் என்று பிருதிவி பீஜமும், வடக்குவாசலில் சம் என்று சந்திரபீஜமும் போட்டு அந்த இரண்டு ரேகை தெருவுக்குள் இந்திரன் தெருவில் அம் என்றும், அக்கினியில் ரம் என்றும் எமனில் சம் என்றும், (எ-று) (7)

போடவே நிருதியிலே அம்மேயாசும் பொலிவாக வருண
னிலே வம்மேபாரு சாடவே வாய்வுதனில் வம்மேபோடு சார்
வான குபேரனிலே ளம்மேநாட்டு வீடவே ஈசானன் சம்மேசேரு
விதமான அஷ்டதிக்குப் பாலராச்சு ஆடவே பேகருட கட்டுச்
சந்தாலே அப்பனே புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) நிருதியில் அம் என்றும், வருணனில் வம் என்றும், வாயுவில்வம் என்றும், குபேரனில்ளம் என்றும், ஈசானனில் சம் என்றும் அஷ்டதிக்குப் பாலகர்பீஜங்கள் போடவேண்டும். (எ-று) (8)

பாடினேன் தமிழெழுத்தில் அகாரந்தொட்டுப் பண்பான
பிரணவத்தின் வரைக்கும்போடு கூடியே தமிழெழுத்தில் அகாரந்
தொட்டு கொற்றவனே ஒவ்வரையி உயிராய்ப் பாருநாடியே சக்
கரத்திற் சுற்றிப்போட நலமாக ஈராறு எழுத்துமாச்சே.

(பொ-ரை) பிறகு சக்கரத்தைச்சுற்றி தமிழ் உயிரெழுத்துகள் பன்னிரண்டையும் போடவேண்டும். இப்படி போட்டால் அவைகளும் இந்தச் சக்கரத்திற்கு ஒரு உயிராகும். (எ-று) (9)

ஆச்சப்பா அசுவையுட எழுத்துசம் அம் அடைவாக மேல்
வாசல் மேல்போடு பாச்சப்பாவலமங்கி சத்திபீஜம் பண்பாக
அம்மென்று பதித்துப்போடு வாச்சப்பாயிடம் பராசத்தி பீஜம்
வளமாகக் கிரோமென்று குறித்துப்போடு விச்சப்பா வலப்பாக
மிடப்பாகந்தான் விதமான ஐயுங்கிலியும் சவ்வுமாமே.

(பொ-ரை) இதன்மேல் வாசலின்கீழ் அசபா மந்திரங்களாகிய சம், அம் என்றும், அதற்கு வலது பக்கத்தில் அங்கிசத்திபீஜமாக அம் என்றும், இடதுபக்கத்தில் பராசத்திபீஜமாக கிரோம் என்றும், போட்டதன்றி வேறாக வலதுபக்கத்திலும், இடதுபக்கத்தில் கிலியும், சவ்வும்என்றுபோடவேண்டும். (எ-று) (10)

ஆரடா அம்இம் உம்எம் ஓம்மென்றே அப்பனே பஞ்சபட்சி
இருபுறமும்போடு வாமடா அச்சம் ஸ்ரீயும்மென்று வன்மாமங்
குடனே நசியென்றே தாமடா இறீம் முடனே மூங்கூட்டித்
தயவானகமுடனே யங்கியென்று சாமடா வைக்கிரக பீஜமாச்சு
கமலானசக்கரத்திற் சுற்றிப்போடே.

(பொ-ரை) பிரகு பஞ்சாட்சி பீஜங்களான அம், இம், உம் எம், ஒம் என்றும் நேத்திரங்களிலும் நவக்கிரகபீஜங்களான, அம், சம், ஸ்ரீம், உம், மங், நங், கிரீம், ரீம், அங் என்று சுற்றிலும் போடவேண்டும். (எ-று) (11)

போடப்பா சொரூபமொன்ற வெழுத்துமப்பா புகழ்தருவம் கிலியல்லோ மதனபீஜம் நாடப்பாகீழ்வாசல் மேலேயப்பா கலீ மான சதிரண்டும் பதித்துப்போடு கூடப்பா சிதம்பரத்தின் பூசை செய்யக் கூத்தாடுங் கண்கள்முத லெல்லாமாடும் ஆடப்பா போக ருட கடாட்சத்தாலே அண்டர்கள் புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) பிரகு மதனபீஜமான அம், கிலீம் என்று கீழ் வாசலுக்கு மேலும் போட்டுப் பூசைசெய் கண்கள் முதல் எல்லாம் கூத்தாடும். (எ-று) (12)

பாடியேஅகாரத்திஉகாரமிட்டுப்பண்பான ஓங்காரங்கொண் டுகட்டிநாடியேயதின்கீழ்மகாரமிட்டுநலமாக அதின்மேலேரீங்கா ரந்தான் கூடியே அரியெழுத்து மேலேவாங்கிக் குணமாகச்சூலமி ட்டு ஸ்ரீயைநாட்டு ஆடியே சிங்வங்கென்று நாட்டு அடைவாயே காட்சரத்தைப் பதித்துப்போடு,

(பொ-ரை) அகாரத்தில் உகாரத்தைச் சேர்த்து அவைகளை ஓங்காரத்தால் கட்டி அவ்வோங்காரத்தின்கீழ் மகாரமும் மேல் ரீங் என்றும் மேல் சுத்தயத்தியில் ஹரி என்றும் அதற்குமேல் சூலம் வாங்கியும் அந்தச் சூலத்தில் ஸ்ரீஎன்றும் ஓங்காரத்தின் வலது இடதுபக்கங்களில் சிங் வங் என்றும் போடுவதான ஏகா ட்சரத்தையும் அந்தச் சக்கரத்தில் அடைப்பாய். (எ-று) (13)

போடுசிந்தாமணிக்குச் சிகாரமிட்டுப் பொங்குமுடன் மகார மோடு வகாரம் போட்டு ஆடவே அகாரமுடன் விந்தைபோட்டு அடைவான சக்கரத்தில் திரிவாகி சூட்டக் கூடசிந்தாமணிக்குப் பீஜமாச்சு குணமான சக்கரத்தில் பதித்துப்போடு நாடியே போ கருட கடாட்சத்தாலே நலமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) சிகாரம் போட்டு, மகாரமும், வகாரமும் அவை டன் கலந்து, அதின்கூட அகாரமும் விந்தும் போட்டு சுற்றிலு லாகின்ற சிந்தாமணி பீஜத்தையும் அந்தச் சக்கரத்தில் அடைத்து விடுவாய். (எ-று) (14)

பாடியே வலப்புருவம் அகாரம் போடு பண்பான இடப் புருவம் ஆகாரமாகும் நாடியே வலக்கண்ணும் இகாரம் போடு நலமான இடக்கண்ணும் ஈகாரந்தான் வாடியே வலது கன்னம் ஒரோம் நீபோடு வடிவான இடக்கன்னம் ஈரோம்நாட்டே.

(பொ-ரை) அந்தச் சக்கரத்தின் வலதுபுருவத்தில் அகாரமும், இடதுபுருவத்தில் ஆகாரமும், வலதுகண்ணில் இகாரமும், இடதுகண்ணில் ஈகாரமும், வலதுகன்னத்தில் ஒரோம் என்றும், இடதுகன்னத்தில் இரோம்என்றும் போடவேண்டும்(எ-று)(15)

நாட்டப்பா வலமூக்கு இல்லாவென்று நாயகனே இட மூக்கு லீலாவாகும். ஆட்டடா மேலுதடு ஏயைப்போடு அடை வான கீழுதடு ஐயைப்போடு கூட்டாமற் றந்தம் ஒவ்வைப்போடு குணமான கீழ்க்கந்தம் ஔவைநாட்டு மாட்டடா நாவதிலே அம் மென்றப்பா மணியான கண்டத்தில் அகாரமென்னே.

(பொ-ரை) வலது மூக்கில் இல்லாவென்றும், இடது மூக்கி ல் லீலாவென்றும், மேல் உதட்டில் ஏ என்றும், கீழ் உதட்டில் ஐ என்றும், மேல் கந்தத்தில் ஒவ் என்றும், கீழ்க் கந்தத்தில் ஔ என்றும், நாக்கில் அம் என்றும், கண்டத்தில் அகாரம் என்றும் போடவேண்டும். (எ-று) (16)

எண்ணிலே சக்கரத்திற் பதித்தபின்பு இதமானச் சங்கடங்க ளனிவர்த்திசெய்து நண்ணவே பிராமணப் பிரதிஷ்டை செய்து கனிலோமப்பூசை சோடசமுஞ் செய்து அண்ணவே சுகந்த பரிம ளங்கள் புஷ்பம் அடைவான வர்ச்சித்துக் கனிகளோடு தண்ணா வே பலகாரம் பரமான்னந் தாம்பூல தனக்குநீரும் மாலுந்தானே.

(பொ-ரை) இப்படி யெல்லாம் சக்கரத்தில் போட்ட பின்பு சங்கடங்களை யெல்லாம் ஒழித்து பிராமண பிரதிஷ்டைசெய்து நல்லவாசனை மப்பூசை சோடசமென்னும் பதினாறுகச் செய்து தாம் கள், புஷ்பங்கள் இலைகளால் அர்ச்சித்து பழம், பலகாரம், தாம் பூலம், பால் முதலியவைகள். (எ-று) (17)

தேனான பாணக்க மன்னத்தோடு தெளிவான வெகுசுவை வஸ்துவுஞ்சுத்தி தானான சர்வமுஞ் சுத்திவைத்து தயவாகப் பூசித்து தியானமோது வானான கற்பூர தீபமேற்று வணங்கவே

அஷ்டசித்துஞ் சித்தியாகும் மாறனை அஷ்டசித்தி நிர்த்தஞ் செய்வாள் வானவரும் லோகமெல்லாம் வசியமாமே.

(பொ-ரை) ஞானகம், அன்னம், அவந்தை, வஸ்து முதலியவைகளெல்லாம் சுற்றிவைத்து பூஜைசெய்து தியானஞ்செய்து கர்ப்பூரதீப மேற்றி வணங்கினால் சர்வமுஞ் சித்தியாகும். அஷ்ட சத்திகளும் தாண்டவமாடுவார்கள். தேவர்கள் முதல் சகலலோகமும் வசியமாகும். (எ-று) (18)

ஆமடா சிவகிரியில் தண்டாயுத பாணியைத்தான் பூசித்தோர் சொல்லக்கேளு தாமடா கிரேதா யுகத்திலப்பா தயவான பூசைசெய்வார் வாமடா திரேதாயுகத்திலப்பா வண்மையாய்க் கவுசிகர்தா மகிழ்ந்துசெய்தார் காமடா துவாபரத்தில் போகநாதர் கலியுகத்திற் புலிப்பாணி பூசித்தேனே.

(பொ-ரை) சிவகிரியிலிருக்கின்ற தண்டாயுத பாணியைக் கிரேதாயுகத்தில் வாமதேவரும், திரேதாயுகத்தில் கௌசிகரும், துவாபரயுகத்தில் போகநாதரும்; கலியுகத்தில் புலிப்பாணியான நானும் பூசைசெய்தோம். (எ-று) (19)

பூசித்த ஞானமது தொண்ணூற்றாறு பொங்கமுடன் பலதிரட்டு நூறுமாகும் ஆசித்தேன் கோசகோகம் நூறுபாதி அப்பனே ஜாலமது ரெண்டுநூறு வாசித்தேன் சோதிடந்தான் முந்நூறாகும் வளமான வயித்தியமே ஐந்நூறாகும் வீசித்தேன் சண்முகத்தின் பூசைமார்க்கம் விதமான முப்பதிலே விளம்பினேனே.

(பொ-ரை) ஞானம் தொண்ணூற்றாறு, பலதிரட்டுநூறு, கோகோகம் நூற்றைம்பது ஜாலம் இருநூறு, சோதிடம் முந்நூறு, வயித்தியம் ஐந்நூறு, சண்முகபூசைமார்க்கம்முப்பது ஆகிய இவைகளில் சொன்னேன். (எ-று) (20)

விளம்பவே சிமிழ்வித்தை யிருபத்தஞ்சு விதமான தேவியுட பூஜைமார்க்கம் தளம்பவே யிருபதோ டொன்றிலுள்ளே தயவாகச் சொல்லிவைத்தே னின்றயப்பாரு கிளம்பவே சிதம்பரந்தா னிருபத்தஞ்சு கெட்டியாய்ப்பாடினே னுகந்துபாரு வளம்பவே போகருட கடாட்சத்தாலே வளமான புலிப்பாணி பாடினேனே.

(பொ-ரை) சிமிள்வித்தை இருபத்தைந்து, தேவிபூசை இருபத்தொன்று, இவைகளைச்சொல்லி சிதம்பரம் இருபத்தைந்தையு

மிகவும் கெட்டியாகச் சொன்னேன். இது போகருடைய கிருபையே யாகும் (எ-று) (21)

பாடினேன் மாமசிவசியமாகும் பண்பானடி சிவாயநமோ னமே சித்தி ஆடியே வசிமநய அழைப்புமாகும் அப்பனே சமசிவய தம்பனமே செய்யும் கூடியே வயநமசி யுச்சாடணங் தான் குணமாயே யவசிநம பேதனந்தான் நாடியே நயவசியவித் துவேஷணஞ் சிவயநமமாரணமா மெனச் செப்பலாமே.

(பொ-ரை) நமசிவ வசியமாகவும், மசிவயந மோகனமாகவும், வசிமநய அழைப்பாகவும், நமசிவய ஸ்தம்பனமாகவும், வயநமசி உச்சாடனமாகவும், யவசிநம பேதனமாகவும், நயவசிம வித்துவேஷணமாகவும், சிவயநமமாரண மாகவும் சொல்லலாம் (எ-று) (22)

ஆமடா வசியமுடன் தம்பனம்பேதனம் அடைவான நடுவெழுத்தைப் பிடித்துமாறு தாமடா மோகனமு மழைப்புமப்பா தய வாக விரண்டெழுத்தை யெடுத்துமாறு வாமடா நாலெழுத்தை மாயிலவித்து வேஷணம் மன்னுட முச்சாடணங்கள் தலையால் மாறு நீமடா மாரணங்கடையெழுத்தைமாறித் தீர்ந்தசக்கரமே யா மாரணமாமே.

(பொ-ரை) வசியம், தம்பனம், பேதனம் இவைகளுக்கு நடுவெழுத்தைப் பிடித்தும், மோகனம் அழைப்பு இவைகளுக்கு இரண்டாவ தெழுத்தைப் படித்தும், வித்வேஷணத்தில் நாலாவது எழுத்தைப்பிடித்தும் உச்சாடனத்திற்கு தலையைப்பிடித்தும், மாரணத்திற்குகடை யெழுத்தைப்பிடித்தும் மாறவேண்டும் (எ-று) ()

ஆமடா காரியம் வசியமாகும் அப்பனே வங்கமோகனமே சித்திதாமடா பொன்னது வழைப்புமாகும் தயவான செம்பது தம்பனமே சித்திவாமடா வெள்ளியமுச்சாடிக்கும் வலமான குருத்தோல்வித்து வேஷணம் போமடா இரும்புபேதன மேயாம் பொங்கமுறு வெள்ளி மாரணந்தானமே.

(பொ-ரை) காரியம் வசியமும், வெள்ளீயம் மோகனமும், பொன் அழைப்பும், செம்புதம் பனமுடன் வெள்ளீயம் உச்சாடனமும், ஒலிவித்வேஷணமும் இரும்பு பேதனமும், வெள்ளிமாரணமு மாகும். (எ-று) (24)

தானென்ற வசியமுடன் தம்பனமோகனந் தயவான அழைப்புதனிலை ஆக்ருங் கோலென்றதூள்காட்டி விரலேநீளங் குணமாகி அகலமப்பா பெருவிரலில் நீளம் தேனென்ற பேதனமாரணம் வித்துவேஷணமாக மிவைகளுக்கும் பாலென்ற புவுத்திரவிரல் நீளமப்பா பகர்ந்தசிறு விரலின் மகலமாமே.

(பொ-ரை) வசியம், தம்பனம், மோகனம், அழைப்பு இவைகளுக்கு ஆள்காட்டிவிரல் நீளமும், பெருவிரல் அகலமும், பேதனம், மாரணம், வித்வேஷணம் ஆக்ருஷ்ணம் இவைகளுக்கு புவுத்திரவிரல் நீளமும், சிறுவிரல் அகலமுமாகும். (எ-று) (25)

ஆமடா விறையாறு வீசமாகும் அப்பனே பன்னிரண்டு அரைக்கால்நாலும் காமடா ஏழ்வட்டக் காலேயர்குந் தயவாக இதிவிரட்டி யறியேயாகும் வரமடா விதிவிரட்டி முழித்தென்பார்கள் எண்மான சுளமப்பா நெற்களந்தான் நாமடா வீசமது ஒருசெல்லாகும் இல்லாத சிதம்பரத்தின் பூசை முற்றே.

(பொ-ரை) விரியாறு வீசமும், பன்னிரண்டு அரைக்காலும், இருபத்தொன்கு காலும் நாற்பத்தெட்டு அரையும், தொண்ணூற்றாறு முழுசம் என்று சொல்லுவார்கள். இதற்கு நெல்கனமே உரியதாகும். (எ-ம்) (26)

சிதம்பரபூசை உரை-முற்றிற்று.

——[*]——

உ

கடவுள் துணை.

விதேஞ்த ஜாலத் திரட்டு.

——(*)——

கர்ப்போற்பத்தி சொல்லும் வித்தை.

சித்திரைப் பத்தாந் தேதியில் தூரம்
சென்றிடலது முதற்பத்து வரையில்
பத்தாகு மதிநேழ் சேரில் பின்னேழ்
பகர்ந்தறி தைமாதம் பதினேழ் தேதியில்

(பொ-ரை) சித்திரை மாதம் 10உயில் ரஜஸ்வலையாகில் அதுமுதல் 10 மாதம் எண்ணிப்பார்க்க தைமாதம் 10உ அதினோடு 7-நாள் சேர்க்க தைமாதம் 17உ குளிகுளிப்பார்கள். 15-மாதங்கள் 15உக்குள் தூரம் வந்தால் 9 மாதக்கணக்கிலும் 15-தேதிக்கு மேற்பட்டால் 11 மாதக் கணக்கிலும் மர்தர்கள் எப்பொழுதும் பிரசவிப்பார்கள் (எ-று) (1)

வீட்டைவிட்டு வெளிவரும் வித்தை.

கைகாற்பெருவிரல் கட்டாய்க்கட்டிக்
கவிழாமற் றாங்கக் கட்டிலைக் கீழ்போட்டால்
செய்யிராரூண்டிற்கு மீட்டாய் சிந்தித்
திட்வெளி வந்திடச் சென்றுள்ளே யோடாய்.

(பொ-ரை) இரண்டு கால் பெருவிரல்களையும் இரண்டு கைப் பெருவிரல்களையும் கட்டி மல்லார்ந்து படுத்துதன் மனதைப் பூரணத்தில் நிறுத்தி நாட்டத்திலிருக்க மனஞ்சொக்கி மவுனத்தில் ஊன்றிச் சுழுத்தியி லடங்கிவிடும். பின்பு தெளிந்தவுடன் இவ்விரண்டு கட்டுகளையும் அவிழ்த்துவிட்டு மறு வேளை பார்க்கவும் இப்படி சதா நடத்துவதில் 12-வருஷத்திற்குள் சித்தியாகி இவனை அந்த வீட்டுக் கருங்கற் கட்டடத்திற்குள் விட்டு பந்தோபஸ்து செய்தாலும் இவன் வெளிவர அவர்கள் விடக்கொடுக்கும் அவை ஒருவருக்குந் தெரியாது. இதைப் பரகாயப் பிரவேசமெனப் பெரியோர்கள். இப்படிச் செய்வோரைச் சித்துப் புருஷரென்றே சொல்லுவார்கள் (எ-று) (2)

ஓட்டமா யோடும்வித்தை.

விழுதியிலையாயில் மெண்ணுதின்று
விட்டடக்கிக் கொஞ்சந் தாடையிற் சன்னு
படுமர வோடவே யெண்ணுமாளிப்
பத்தாறு மிளைப்பில்லைப் பகர்ன்னு.

(பொ-ரை) விழுதியிலையை வாயிற்போட்டுக் கொஞ்சம் தின்று கொஞ்சம் வாயிற்றாடையி லடக்கி வைத்துக்கொண்டிருக்குமட்டில் ஒடினாலும் ஓடலாம். இளைப்புக் களைப்பில்லை. நிற்கவேண்டுமானால் ஒரு மிளகைப் பிய்த்து தின்க வேண்டியது. காதத்திற்கு மேலும் ஓடலாம் (எ-று) (3)

பாலைத் தயிராக்கும் வித்தை.

குருணிப்பாலில் வாழைக்கிழங்குபொடி
கொண்டிடத்துத் தாள்குழப்ப முழங்கு
வெருவித்தே தயிராய் வழங்குதாளு
மண்டலத்தோர் மார்க்கிதை வகுக்குமொழிந்து.

(பொ-ரை) குருணிப்பாலில் வாழைக்கிழங்கு உலர்த்தி வஸ்திரகாயஞ் செய்த தூளில் உழக்கு அதிற்போட்டுக் கலக்கத் தயிராகும் இன்னும் காணாற் புல்லு போட்டாலும் தயிராகத் திரளும்.

நெருப்பு வித்தை.

மணித்தக்காளிச்சாறு கூடஉத்தா
மணிச்சாறு வசளைச்சாறும் ஒன்றாஞ்சாட
தளிப்பாய்க் கால்கைபூசிப் போடத்தீக்கத்
தணியும் நெருப்பது தண்ணீர்போலாட

(பொ-ரை) மணித்தக்காளிச்சாறு உத்தாமணிச்சாறு வசளைச்சாறு இம்மூன்றும் ஒன்றாகக் கலந்து கைகளிற்பூசி நெருப்பை யெடுக்கவும் அல்லது கால்களிற்பூசி நெருப்பில் மிதிக்கவும் கைகால்கள் சுடாது கொப்பளிக்காது. எந்நேரம் விளையாடினாலும் விளையாடலாம் (எ-று) (5)

மீன்படுவித்தை.

நிருதுகள்ளியைத் தறித்துத் துண்டி
யெப்பத்தையெ[illegible]கிகுள் [illegible]விரித்து
பொருதுமீனிருக்கக் குறித்துப்போட்டிட்டால்
மீனாற்றில் வாரமிதக்கு மரித்து.

(பொ-ரை) நிருதுகள்ளியை முழமுழத் துண்டுகளாய்த் தறித்து எரிகுளம் மடுக்களில் நாற்பக்கத்திலும் அடர்த்தியாய்ப் போட்டு வைத்திருக்க சற்றுநேரத்திற்குள் அதிலிருக்கும் மீன்களெல்லாம் மிதந்துபோய்விடும் அதிலொன்றேனுந் தப்பிப்பிழைக்காது (எ-று) (6)

பேயாடும் வித்தை.

...த்தலையோடிருந் துஉச்சி
...னியில்மருஞுமத்தைகாய்த்தூளைச்சமித்து
...ரைத்தோகையிலேவரித்து குறி
...ரைத்துதலைசுற்றியாடப்பிறித்து

(பொ-ரை) பேயாடுவோரைப்போல் ஆட்டுவது அல்லது எவ்விதமனிதரை யாவது தலைமுழுகிவரச் சொல்லி அவ்வீரத்தலையோடு உச்சியில் மருஞுமத்தங்காய்த்தூளை ஆக்கப்பொடித்து அதிற்கொஞ்சம் போட்டு அரக்கித்தேய்த்துவிட நின்றுவிடும் பின்புசெய்வதைச் செய்யவும். (எ-று) (7)

புட்டியிற் புஷ்பச்செடிவித்தை.

புட்டியிற்சக்கிலெட்டைப்போட்டுதண்ணீர்
புகட்டமுக்காற்பங்குகார்க்கின்கீழ்மட்டு
ஒட்டியதுத்திராக்ஷநாட்டு பிகுந்
தொளிர்மேசைமேல்வைத்துச் செடியாகப்பூட்டு

(பொ-ரை) முழுபுட்டிக்குள் முக்காற்பங்கு தண்ணீர் விட்டு அதிற்கொஞ்சம் சக்கிலெட்டுத் தூள்போட்டுக் குலுக்கி கார்க்கின் கீழ் திட்டமாய் துத்திராக்ஷத்தை கம்பிக்குள் சொருகிவிட்டுப் பிகித்து சொருகித்து மேசைமேல் அசையாதுவைக்க, மேற்புட்டிக்குள் செடிகள்போல் முளைத்திருக்கும் அதை அசைத்தாலும் திறந்தாலுங் கெட்டுப்போம். (எ-று) (8)

விஷந்தீர்க்கும் வித்தை.

அரவந்தீண்டி வுச்சிக்கிலி கையா
லரக்கித்தேய்த்துக் காளிச்சாற்றினையாறி
...ரையில்மிளைந்தலைக்கேறி விட்ட
விட...றங்கிக்குணப்படவதிகாரி

(பொ-ரை) பாம்பு கடித்தால் உடனே அவரவர் உச்சியில் ஓட்டினைக்கீற்று கீறிக் கக்காளிச்சாறுவிட்டுக் கையினால் அரக்கித் தேய்க்க விஷங்கக்கி ஏறுதிருப்பார்கள் உடனே நாகைகாய்ச்சிக் கொடுக்கவும் இது இருவர்க்கு உயிருக்குபிரான மூலி இன்னும் செருப்படை கிழாய்நெல்லி குப்பைமேனி இதுகளிலும் விஷங்கக்கும் இன்னும் சோளக்கொட்டை மரத்தை கல்லிலண்ணைப் அறைத்துக் கொடுக்கவுமாகும். (எ-று) (9)

தீயில்குதிக்கும் ஜாலம்.

ஒட்டனுட அக்கினியை மதியாவித்தை
விரும்புகிறேன் யெல்லோரும் ஆச்சரிக்க
சாமநாவேசங்கனிட புதாருதன்னில்
லமாகபூர்த்திருக்கும் காளான்றன்னை
சோமனவேகொண்டுவந்து புதுப்பாண்டத்தில்
சுருக்குடனேபோட்டுநீ கதிர்முன்வைக்க
ஆமப்பாதயிலமது வுருகும்பாரு
அதையெடுத்துப்பூசிதீயில் குதிக்கலாமே

(பொ-ரை) சங்கன்செடி புதாரில் பூர்த்திருக்கும் காளானைக் கொண்டுவந்து புது பாண்டத்தில் போட்டு வெய்யலில் வைத்தால் தைலம்போ லுருகிவிடும். அதை யெடுத்து தேகமெங்கும் பூசிக்கொண்டு எவ்வளவு அருகிலிருந்தபோதிலும் தீயில் குதிக்கலாம் (எ-று) (10

எலுமிச்சம்பழம் குதிக்கும் ஜாலம்.

என்னவேயின்னமொரு ஜாலங்கேளு
யெலுமிச்சம்பழத்தினிடை துளையுண்டாக்கி
பன்னவே சூதமது கனுருக்கி
பக்குவமாயபுள்ளிக்கி யெடுத்து
தன்னவே வெய்யலிலே வைத்துப்பாரு
சூரியனுர் காந்தியது தாக்கும்தனில்
என்னசொல்வேன் பழத்தினது கொண்டாட்டந்தா
னியம்பலாந் நாதிவெகுண்டு பண்ணலாமே.

117186

(பொ-ரை) ஒரு எலுமிச்சம்பழத்தை யெழுத்தாணியால் குத்தி (கவ) [illegible] ரசம் விட்டு மெழுக்கினுல் அதைத் தை அடைத்து வெயிலில் வைத்தால் சூரிய னேறின மாத்திரத் தில் தரையில் நிற்காது. சென்றுபோ லெதுநம் அல்லதுஉருளும் ஆச்சரியமா யிருக்கும், ஆகிலும் சீமை காடியில் கொஞ்சம் விட [illegible]வும் வேலும் நன்று.

விநோத ஜாலத்திரட்டு முற்றிற்று